விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 24 வெள்ளிக்கிழமை (09.08.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 233

## நல்லூர் மகோற்சவத்திற்கு வரும் பக்தர்களை சோதனைக்குட்படுத்துவது நியாயமற்ற செயல்

### கவலை வெளியிட்டது தமிழ் மக்கள் பேரவை

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச்சிறப்புமிக்க நல்லூர்க் கந்தனின் மகோற்சவ காலத்தில் முன்னர் ஒருபோதும் இல்லாத வாறு அடியார்களை படைத்தரப் பினர் கடும் சோதனை நடவடிக் கைக்கு உட்படுத்துவது மிகுந்த மனக்கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது என தமிழ் மக்கள் பேரவை கவலை வெளியிட்டுள்ளது. பேரவையி னால் வெளியிடப்பட்ட ஊடக அறிக் கையிலேயே மேற்படி விடயம் தெரி விக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது, நல்லூர்க்கந்தனின் மகோற் சவ காலத்தில் இலட்சக்கணக் கான பக் தர்கள் நல்லூரில் கூடுவது வழமை. இந்நிலையில் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற அனர்த்தத்தைக் காரணம்காட்டி நல்லூர் ஆலயச்சூழல் முழுவதிலும் படைத் தரப்பினர் குவிக்கப்பட்டு, ஆலயத் திற்கான அனைத்து நுழை வாயில் களிலும் சோத 23

### தமிழ் மக்களுக்கு ஒன்றும் செய்யாத கடந்த அரசு

## ஆட்சியை கைப்பற்ற மீண்டும் முயற்சிக்கின்றது



### மன்னாரில் அமைச்சர் சஜித் சாடல்

(மன்னார்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஒன்றும் செய்யாத கடந்த அரசாங்கம் மீண்டும் ஆட்சியை கைப்பற்ற முயற்சிப்பதாக அமைச்சர் சஜித் பிரேமதாச மன்னாரில் வைத்து கடுமையாக சாடினார். (23ஆம் பக்கம் பார்க்க)

## கோத்தபாயவே ஜனாதிபதி வேட்பாளர்

### 11ஆம் திகதி மகிந்த அறிவிப்பார்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலுக்கான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக கோத்த பாய ராஜபக்ஷவை, எதிர்வரும் 11ஆம் திகதி, எதிர்க்கட்சித் தலை வர் மகிந்த ராஜபக்ஷ அறி 23

### மீன் பிடிக்கச் சென்றவர்

## முல்லைத்தீவில் சடலமாக மீட்பு



23

## கல்முனை விவகாரம் ஓரிரு தினங்களில்தீர்வு

### அமைச்சர் வஜிர அபேவர்த்தன நம்பிக்கை

(கொழும்பு)

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு பிரச்சினைக்கு ஓரிரு தினங்களுக்குள் தீர்வு காணப் படும் என்று உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் 23



## அமெரிக்க உதவி இராஜாங்க செயலர் இலங்கை வருகை

(கொழும்பு)

தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளின் விவகாரங்களுக்கு பொறுப்பான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் எலிஸ் வெல்ஸ் இலங்கைக்கு வருகைதர உள்ளதாக செய்திகள் வெளியாகி யுள்ளன. (ம-3)

### கோப்பாய் - உரும்பிராய் வீதியில்

## மோட்டார் சைக்கிளுடன் டிப்பர் மோதி விபத்து

### இளைஞன் உயிரிழப்பு



23

### எங்கள் மனதில் வீடு தந்த சஜித் இருக்கின்றார்

## ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தமிழ் மக்கள் சரியான முடிவெடுப்பர்

### செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(மன்னார்)

நாடு பூராகவும் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் பற்றிய கோசம் எழுப்பப்பட்டு வருகின்றது ஒரு பக் கம் கோத்தபாய ராஜபக்ஷ வின் பெயரும் இன்னொரு பக்கம் அமைச் சர் சஜித் பிரேமதாசவின் பெயரும் முன்மொழியப்படுகின்றது.

ஜனாதிபதி தேர்தல் தொடர் பான அறிவிப்புக்கள் வரும் போது தமிழ் மக்கள் சரியான 23

### நல்லூர் வரும் பக்தர்களை

## ஸ்கானர் பொறிமுறையில் சோதனையிட திட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவங் களுக்கு வருகை தரும் பக்தர்களை சுதந்திர மாகவும் பாதுகாப்பாகவும் வந்து செல்வதற்கு வசதியாக அவர்கள் மீதான உடல் சோதனை நடவடிக்கையை இலகு படுத்தும் 23

## நாட்டை அபிவிருத்தி செய்ய சர்வாதிகாரம் தேவையில்லை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முன் னிட்டு மூன்று பிரதான கட்சிகளின் தலைமை யிலும் புதிய கூட்டணிகள் உருவாகவுள் ளன. இந்த மாத இறுதிக்குள் ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான புதிய கூட்டணி அறிவிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன் நாங்கள் யாரையும் ஒழித்துக் கட்டவில்லை. வெள்ளை வான் 23

# நல்லூரில் இடம்பெறும் பாதுகாப்புக் கெடுபிடிகளை உடனடியாக நிறுத்த வேண்டும் – சிறீதரன்

நல்லூரில் இடம்பெறும் வரலாற்றில் இல்லாத பாதுகாப்புக் கெடுபிடிகள் மற்றும் திட்டமிட்ட கலாசாரச் சீரழிவை உடன் நிறுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவிக்கையில், "தமிழர்களின் வரலாற்றில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திருவிழா என்பது மிகப்பெரும் கலாசார அடையாளமாகவும் தமிழர்கள் ஒன்று கூடுகின்ற பெருந் திருவிழாவாகவும் காணப் படுகிறது.

இவ்வாறு நல்லூர்த் திருவிழாவின் வரலாற்றில் மக்களை உடல் ரீதியாக பரி சோதனை செய்து பெரும் பாதுகாப்புக் கெடு பிடிகளுக்கு மத்தியில் ஆலயத்துக்குள் அனுப் பிய வரலாறு இல்லை.

ஆனால் இம்முறை பல்வேறு கெடுபிடி களும் மக்களை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

குண்டு வெடிப்புக்களின் பின்னர் தற் போது நாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட் டுள்ளதாக பாதுகாப்பு மட்டத்திலும் அரசாங் கத் தரப்பிலும் தொட ர்ந்து தெரிவிக்கப் பட்டு வருகின்றது.

அதுடன், தென்னிலங்கையில் இதுபோன்ற சோதனைகளோ அல்லது கெடுபிடி களோ இல்லை. ஆனால் வடக்கில் மாத்திரம் இவ்வா றான சோதனைகள் எதற்காக எனக் கேட்கின்றேன்.

இவ்வாறு சோதனை நடவடிக் கைகளைச் செய்யு மாறு ஆலய நிர் வாகமோ அல்லது மாநகர சபையோ? அல்லது நாங்கள் யாருமோ கேட்க வில்லை.

எனவே இது தொடர்பாக அரசாங்கமும் பாதுகாப்புத் தரப் பும் மக்களை அசௌகரியப்படுத்தும் நட வடிக்கைகளை உடனடியாக நிறுத்தும்படி கேட் டுக் கொள்கின்றேன்" என்று தெரிவித்தார். (ம)


## ரீமேக்கர் தேவை

இல.118, கோவில் வீதி, நல்லூரில் இயங்கும்

**நாதன்**

**உணவகத்துக்கு**

அனுபவமுள்ள ரீமேக்கர் உடன் தேவை.

தகுதியானவர்கள் நேரில் வரவும்

(C-7230)



## துர்க்கா ரவல்ஸ்

யாழ்ப்பாணம் – கட்டுநாயக்கா

வான் K.D.H 20000/=

கார் Wogan R 15000/=

யாழ்ப்பாணம் முழுநாள் சுற்றுலா 7000/=

**077 833 1414**


## கேள்வி அறிவித்தல்

**குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG) - 2019**

**முத்திரைத் தீர்வை வேலைத்திட்டம்**

**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்**

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம், உள்ளூராட்சி மன்றங்கள் சார்பாகதகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி வேலைகளுக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 08.05.2019 ஆந் திகதிய 04/2016 (ii) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்வி தாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணை யில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடிவீதி புனரமைப்புக்குபொருத்தமான தரத்தில்நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையானதகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் (தொலைபேசி 0212222654, தொலைநகல் 021 2223410 மின்னஞ்சல் raclgjaffna@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணி வரை 23.08.2019 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் இடத்திலிருந்து 09.08.2019 திகதியிலிருந்து 23.08.2019ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 23.08.2019ம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்தேழு- 08.11.2019) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விகள் தொடர்பாக இறுதித்தீர்மானம் பெறுகைக்குழுவினால் எடுக்கப்படும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்ட வாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீடு தொகை ( மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(1)/ PL2/PSDG/SD VEPS/01/2019 | பெரியதம்பிரான் வீதி புனரமைப்பு புத்தூர் | 5.20 | 02 மாதங்கள் | C7 and C6 (வீதி ) | 52,000.00 | 06.12.2019 |
| NP/14/41(1)/ PL2/PSDG/SD VEPS/02/2019 | ஆறுமுகம் வீதி வாதரவத்தை | 5.30 | 02 மாதங்கள் | C7 and C6 (வீதி ) | 53,000.00 | 06.12.2019 |
| NP/14/41(1)/ PL2/PSDG/SD VNPS/01/2019 | கடைத்தொகுதி அமைத்தல் மல்லாகம் சந்தை | 6.86 | 03 மாதங்கள் | C7 and C6 (கட்டடம்) | 68,600.00 | 06.12.2019 |

11) கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் 15.08.2019அன்று மாலை 14.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ள முடியும்.

**தலைவர்,**
பிராந்திய பெறுகைக்குழு,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்.
யாழ்ப்பாணம்
09.08.2019

## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பனாகிய

**சாம்பசிவம் தியாகலிங்கம்**


அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சிவன்கோவிலடி நண்பர்கள்**

## மரண அறிவித்தல்

## சாம்பசிவம் தியாகலிங்கம்

**(இளைப்பாறிய அதிபர் - நாரந்தனை கணேச வித்தியாலயம் (1989 - 2007), கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் (2007 - 2010), முன்னாள் ஆசிரியர் - மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை)**



கரம்பன் மேற்கை பிறப்பிடமாகவும் 6ஆம் வட்டாரம் வேலணை மேற்கை நிரந்தர வதிவிடமாகவும் இல.68/9 சட்டநாதர் வீதி, நல்லூரை தற்போதைய வதிவிடமாக வும் கொண்ட சாம்பசிவம் தியாகலிங்கம் நேற்று முன்தினம் (07.08.2019) புதன்கிழமை இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாம்பசிவம் மற்றும் நகுலேஸ்வரி தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்ற சிவசிதம்பரம்-கமலாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும் ஸ்ரீதேவியின் அன்புக் கணவரும் யதீஜா, சிந்துஜா (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி யாழ். பிராந்திய அலுவலகம்), கீதாஞ்சலி (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஹர்சன் (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி நெல்லியடி) தனஞ்செயன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் யாகவியின் அன்புப் பேரனும் Dr. தில்லைநாயகி, திருமூலநாதன், திலகவதி (இந்தியா), திருநாமச்சண்முகம் (ஜேர்மனி) தியாகேஸ்வரி (U.K) திருமலை நாதன் (U.K), திருக்கேதீஸ்வரன் (U.K), திருமலர் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் மலர்மகள், செல்வ ரட்ணம் (சின்னப்பா - இந்தியா), கலாமதி (ஜேர்மனி), சக்திவேல் (U.K), ஆனந்தி (U.K), சத்தியநாதன் (U.K), மன்றுளாடி, ஸ்ரீகாந்தன் (U.K), ஜெயஸ்ரீ, காலஞ்சென்ற ஸ்ரீராமன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2019) வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தக னக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0777238377 (மனைவி) +447979497326 (U.K), +918754457841 (India)

தகவல்:- குடும்பத்தினர்

# "எனக்கு அதிர்ஷ்டம் இல்லை"



# கோத்தபாயவைக் கண்டு யாரும் அஞ்சவேண்டாம்!



## பசில் கூறுகிறார்

## "மகிந்தவின் பதவி பறிபோனால் அதைப்பற்றி எமக்கு கவலையில்லை"

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எனக்கு அதிர்ஷ்டம் இல்லை என நினைக்கின்றேன். ஆனாலும் திறமையான நிர்வாகத் திறன் கொண்ட, பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய ஒருவர் வேட்பாளராக நியமிக்கப்படுவார். கோத்தபாய ராஜபக்ஷ தனது அமெரிக்கக் குடியுரிமையை நீக்கிக் கொண்டுள்ளார். அவர் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கினால் அவரைக் கண்டு யாரும் அச்சப்படத் தேவையில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் விட்ட தவறுகள், குறைபாடுகளைச் சீர்செய்து நாட்டைப் பாதுகாத்து புதிய பாதையில் செல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது.

நாளை மறுதினம் 11ஆம் திகதி இடம்பெறவுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாநாட்டுக்கு வருமாறு எதிர்க்கட்சியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எங்களுக்கு ஆதரவை வழங்குவது குறித்து பேச்சு நடத்தப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எனக்கு அதிர்ஷ்டமில்லை என்று நினைக்கிறேன். ஆனாலும், திறமையான நிர்வாகத் திறன் கொண்ட, பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய ஒருவர் வேட்பாளராக நியமிக்கப்படுவார். கோத்தபாய ராஜபக்ஷ தனது அமெரிக்க குடியுரிமையை நீக்கிக் கொண்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஒன்றை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அவரின் வழிகாட்டலின் கீழ் ஆட்சி முன்னெடுக்கப்படும்.

வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பான்மையான மக்கள் ஆதரவைப் பெறவில்லை. இந்நிலையில், வடக்கு, கிழக்கு, மலையகம் எனப் பல இடங்களிலும் கட்சிகள் எங்களுடன் உள்ளன. அவற்றுடன் இணைந்து பேசி ஆட்சியை அமைப்போம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் அரசியல் பிரமுகர்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்களுடன் நாங்கள் எந்தத் தொடர்பையும் வைக்கமாட்டோம். ஆனால், என் மீதும் வீண்குற்றச்சாட்டுகளை முன்வைத்து வெள்ளை வானில் நீதிமன்றம் கொண்டுசென்றனர். நாம் யோசித்து முடிவெடுப்போம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்தால் வெற்றிபெறுவோம் என்றும் இல்லை; தோல்வியடைவோம் என்றும் இல்லை. ஆனால், எல்லாக் கட்சிகளையும் இணைத்துப் போட்டியிட வேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைப் பொறுப்பை ஏற்பதால் மகிந்தவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியோ அல்லது எம்.பி. பதவியோ இல்லாமல் போகுமானால் அதைப்பற்றி எமக்குக் கவலையில்லை. மகிந்த எப்போதும் மக்கள் மனதில் உள்ளார். அவர் மக்கள் தலைவர்.

சர்வதேச ரீதியாக நாங்கள் கடந்த காலங்களில் விட்ட தவறுகளை மீண்டும் செய்யமாட்டோம். உலக நாடுகள் பலவற்றுடன் இராஜதந்திர ரீதியில் நாங்கள் நெருங்கிச் செயற்படுகின்றோம்.

தோட்ட மக்களின் பிரச்சினைகள் கவனிக்கப்பட வேண்டும். அவர்களின் பிரச்சினைகள் பலவற்றை கடந்த ஆட்சியில் நாங்கள் தீர்த்தோம். தபால் விநியோகம், மின் விநியோகம், உட்கட்டமைப்பு வசதிகள் செய்தோம். தொழிலாளர்கள் சம்பள விடயத்தில் நாங்கள் முழுக் கவனம் செலுத்துவோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மகிந்த அணியின் மாநாட்டில் சு.கவின் 15 எம்.பிக்கள்-எஸ்.பி.

(கொழும்பு)



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கட்சியின் தலைமைத்துவத்தை வழங்குவதற்காக நாளை மறுதினம் 11 ஆம் திகதி நடத்தப்படவுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட குழுவிலிருந்து 15 பேர் கலந்து கொள்ள தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த மாநாட்டிற்கு பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாரும் தனக்கு அழைப்பு கிடைக்கவில்லையெனக் கூற முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அரச நிதி மோசடி; ஜனாதிபதி செயலணியின் தலைமை அதிகாரி உட்பட மூவர் விடுதலை

(கொழும்பு)

அரச நிதி மோசடி தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் ஜனாதிபதி செயலணியின் தலைமை அதிகாரி காமினி செனரத் உட்பட மூவரை நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது.

சம்பத் அபேகோன், சம்பத் விஜேரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன உள்ளிட்ட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

பிரதிவாதிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சரியான முறையில் சாட்சிகள் இல்லாத காரணத்தால் அவர்களை விடுதலை செய்வதாக நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

லிட்ரோ ஹாஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான 500 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பணத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை உள்ளிட்ட 24 குற்றச்சாட்டுக்களின் கீழ் முன்னாள் ஜனாதிபதி செயலணியின் பிரதானி காமினி செனரத், நீல் பண்டார ஹப்புஹின்ன, லசந்த பண்டார,



பியதாஸ குடாபாலகே உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## ஜனாதிபதித் தேர்தலில்

## இந்தியாவின் ஆதரவைப்பெற பிரதமர் ரணில் தீவிர முயற்சி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எதிர்பார்க்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதாக தெரியவருகிறது.

கடந்த திங்கட்கிழமை இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசம் என்றும் லடாக் யூனியன் பிரதேசம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டமை இந்தியாவின் உள்நாட்டு விவகாரம் எனத் தெரிவித்ததன் ஊடாக பிரதமர் இந்தியாவின் ஆதரவைப் பெற முயற்சிப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டினர்.



எந்தவொரு நாடும் இதுவரை இந்தியாவிற்கு ஆதரவாக காஷ்மீர் விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடாத நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளதுடன் அது இந்தியாவின் உள்ளக விவகாரம் என்று தெரிவித்ததன் மூலமாக இந்தியாவின் ஆதரவை ரணில் எதிர்பார்க்கிறார்கள் என ஊகிக்க முடிவதாக மேலும் சுட்டிக்காட்டினர். (இ-7)

## நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் கால எல்லை ஒரு மாதம் நீடிப்பு

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்திவரும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் காலத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அக்குழுவின் தலைவரும் பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி தெரிவித்தார்.

ஏற்கனவே திட்டமிடப்பட்டபடி குறிப்பிட்ட காலப்பகுதிக்குள், குறித்த தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான இறுதி அறிக்கையை தயாரிக்க முடியாமல் இருப்பதால், சபாநாயகருடன் கலந்துரையாடிய பின்னர் இந்தக் கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-7)

# ரோஜர்ஸ் டென்னிஸ் தொடர்
## ஸ்டீபன்சை வீழ்த்தினார் பவுஸ்கோவா



ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு 3வது சுற்றில் விளையாட, செக் குடியரசு வீராங்கனை மேரி பவுஸ்கோவா தகுதி பெற்றார்.

கனடாவின் டொரான்டோ நகரில் நடைபெற்று வரும் இந்த தொடரின் 2வது சுற்றில் அமெரிக்க வீராங்கனை ஸ்லோன் ஸ்டீபன்சுடன் (7வது ராங்க்) மோதிய தகுதிநிலை வீராங்கனை பவுஸ்கோவா (91வது ராங்க்), அதிரடியாக விளையாடி 6-2 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றினார்.

இரண்டாவது செட்டில் ஸ்டீபன்ஸ் கடும் நெருக்கடி கொடுத்த நிலையில், பதற்றமின்றி விளையாடி புள்ளிகளைக் குவித்த பவுஸ்கோவா 6-2, 7-5 என்ற நேர் செட்களில் வென்று 3வது சுற்றுக்கு முன்னேறினார். இப்போட்டி 1 மணி, 42 நிமிடத்துக்கு நீடித்தது.

மற்றொரு 2வது சுற்றில் முதல் நிலை வீராங்கனை ஆஷ்லி பார்தி 7-6 (7-5), 3-6, 6-4 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் சோபியா கெனினை கடுமையாகப் போராடி வீழ்த்தினார். முன்னணி வீராங்கனைகள் விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்), கிகி பெர்டன்ஸ் (நெதர்லாந்து), அலிசான் ரிஸ்கி (அமெரிக்கா), கர்லா சுவாரெஸ நவரோ (ஸ்பெயின்), பியான்கா ஆண்ட்ரீஸ்கு (கனடா) ஆகியோர் முதல் சுற்றில் வெற்றியை பதிவு செய்தனர். (ம)

### - பிளாஸ் இருபது -20 கிரிக்கெட் -
## தென்னாபிரிக்க வீரர் கிளேமோர்கன் 7 விக்கெட் வீழ்த்தி சாதனை



இங்கிலாந்தில் நடைபெற்று வரும் விட்டாலிட்டி பிளாஸ் இருபது - 20 கிரிக்கெட்டில் தென்னாபிரிக்கா பந்து வீச்சாளர் 7 விக்கெட் வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

இங்கிலாந்தில் கவுன்ட்டி அணிகளுக்கு இடையிலான விட்டாலிட்டி பிளாஸ்ட் இருபது - 20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

ஒரு ஆட்டத்தில் லெய்செஸ்டர் ஷைர் - வார்விக்ஷைர் அணிகள் மோதின. இதில் லெஸ்செஸ்டர் ஷைர் அணிக்காக விளையாடி வரும் தென்னாபிரிக்கா சுழற்பந்து வீச்சாளர் கொலின் அக்கர்மான் 18 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 7 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். இதன்மூலம் இருபது - 20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்தியவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

இதற்கு முன் சோமர்செட் அணிக்காக விளையாடிய மலேசியாவைச் சேர்ந்த அருள் சுப்பையா கிளேமோர்கன் அணிக்கெதிராக 2011-ல் 5ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து 6 விக்கெட் வீழ்த்தியதே சாதனையாக இருந்தது. (ம.)

# மண்மேடு சரிந்ததில் இருவர் படுகாயம்
## வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா, பாவற்குளத்தில் மணல் அகழ்வின் போது மணல் மேடு இடிந்து விழுந்ததில் இருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பாவற்குளம் பகுதியில் சிலர் ஆற்றில் மணல் அகழ்ந்து கொண்டிருந்த போது மணல் மேடு இடிந்து வீழ்ந்ததில் அதில் இருவர் அகப்பட்டுள்ளனர். அதனை அங்கு நின்றவர்கள் அவதானித்த நிலையில் உடனடியாக மண்ணை வாரி எடுத்து, குறித்த இருவரையும் மீட்டனர்.

இருப்பினும் இருவரும் மண்ணில் அகப்பட்டதனால் ஆபத்தான நிலையில் இருந்தனர். இதனையடுத்து குறித்த இருவரும் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்கப்பட்டனர்.

குறித்த இருவரில் ஒருவரின் முள்ளந்தண்டு பகுதியில் பலத்த அடி ஏற்பட்டுள்ளதாகவும், மற்றையவர் குணமடைந்து வருவதாகவும் தெரியவருகிறது.

குறித்த விபத்தின் போது பாவற்குளம் படிவம் இரண்டைச் சேர்ந்த மீரா முகைதீன் மாக்கின் (வயது 45), சூடுவெந்தபுலவைச் சேர்ந்த ஏ.ஜே. முஸித் (வயது 28) ஆகிய இருவரே ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-03-250)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட பத்துப்பேர் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியா பாவற்குளம் பகுதியில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட பத்துப் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களிடமிருந்து 15இலட்சம் ரூபா பெறுமதியான நூறு வலைகளையும் மீட்டுள்ளதாக தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் பிராந்திய நீரியல் விரிவாக்கல் அதிகாரி யோ.நிஷாந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை 2மணியளவில் பாவற்குளம் பகுதியில் உளுக்குளம், சூடுவெந்தபிலவு பகுதிகளைச் சேர்ந்த 10பேர் சட்டவிரோதமாக தங்கூசி வலை, முக்கூட்டு வலை போன்ற சட்டவிரோதமான வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதையடுத்து அவர்களை சுற்றி வளைத்து கைது செய்யப்பட்டபோது அவர்களிடமிருந்து நூறு வலைகளும் மீட்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 15இலட்சம் ரூபாவாகும். கைது செய்யப்பட்ட 10பேரும் தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 27ஆம் திகதி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் இடம்பெறவுள்ளது. (ம-03-299)

### - யாழ். போதனாவுக்கு மருந்து ஏற்றிவந்த -
# வாகனம் தடம் புரண்டு விபத்து: சாரதி படுகாயம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏ9 வீதியின் கிழவன்குளம் பகுதியில் யாழ்ப்பாண வைத்திய சாலைக்கு கொழும்பில் இருந்து மருந்துப் பொருட்களை ஏற்றிவந்த வாகனம் ஒன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

நேற்று முற்பகல் 11 மணியளவில் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.மருந்து பொருட்களை ஏற்றி வந்த கூலர் வாகனத்தின் முன்சக்கரம் காற்று போனதன் காரணத்தினால் வீதியை விட்டு விலகி தடம் புரண்டு சுமார் 20 மீற்றர் தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்டு விபத்துக்குள்ளாகியுள்ளது

இந் நிலையில் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-03-281)

# ஐ. தே. கட்சி எம்.பிக்களுடன் பிரதமர் ரணில் இன்று பேச்சு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் இன்று காலை 9 மணிக்கு அலரி மாளிகைக்கு வருமாறு அழைத்துள்ளார்.

எந்த விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த அழைக்கிறார் என்பது குறித்து அறிவிக்கப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கையெழுத்திட்டுள்ள மனு தொடர்பாக பிரதம்ர் விசேட கவனத்தை செலுத்தியுள்ளதாக அலரி மாளிகையின் தகவல்கள் கூறுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சம்பந்தமான தீர்மானத்தை எடுப்பதற்காக உடனடியாக பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்டுமாறு பிரதமரிடம் கோரிக்கை விடுக்கும் கடிதத்தில் கையெழுத்துக்கள் பெறும் நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அஜித்.பீ பெரேரா, இரான் விக்ரமரத்ன, சுஜீவ சேனசிங்க, நளின் பண்டார ஆகிய அமைச்சர்கள் கையழுத்து பெறும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் 77 பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் இந்த கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான அமைச்சர் சஜித் பிரேமதாச அந்த கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளதாக, கையெழுத்து பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராஜாங்க அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், புதிய கூட்டணியை ஏற்படுத்திய பின்னர், அதன் மூலம் முன்வைக்கப்படும் யோசனைக்கு அமையவே ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என பிரதமர் தெரிவித்து வருகிறார். அமைச்சர் சஜித் பிரேமதாசவை அண்மையில் அலரி மாளிகைக்கு அழைத்து பிரதமர் இதனைக் கூறியுள்ளார்.

எனினும், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் ஜாதிக ஹெல உறுமய கட்சியை தவிர ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் அறிவிக்கப்படும் வரை கூட்டணி தொடர்பான உடன்படிக்கையில் கையெழுத்திட போவதில்லை என அறிவித்துள்ளன. (ம-03)

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் உயிரிழப்பு
## ஆனமடுவ பகுதியில் விபரீதம்

ஆனமடுவ பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

ஆனமடுவ பகுதியில் நேற்று காலை 8 மணியளவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதன் போது 37 வயதுடைய ரசிகா பிரியதர்ஷனி என்ப்வரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஆனமடுவை பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-03)

### பரு.சுப்பர் மடத்திலிருந்து
# உந்துருளி பயணம் நேற்று ஆரம்பம்

(கரணவாய்)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து நாட்டில் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் சுற்றுலா துறையில் எந்த பாதிப்பும் இல்லை என்பதை வெளிபடுத்து முகமாக பருத்தித்துறையில் இருந்து துவிச்சக்கர வண்டி பயணம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தால் இலங்கையின் எப்பகுதிக்கும் சென்று வரக்கூடிய நிலமை இருக்கின்றது என்பதை தெரிவுபடுத்தும் முகமாக கடுகண்ணாவை பகுதியைச் சேர்ந்த இருவர் நேற்று வியாழக்கிழமை காலை 6.45 மணியளவில் பருத்தித்துறை சுப்பர்மடத்தில் இருந்து தமது துவிச்சக்கர வண்டி பயணத்தை ஆரம்பித்தனர்.

இந்த துவிச்சக்கரவண்டி பயணம் காலி தெய்வேந்திர முனையில் நிறைவடைய உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03-60)

# ஹிஸ்புல்லாஹ் தொழிற்பயிற்சி நிறுவனமும் மட்டு.பல்கலைக்கழகமும் வெவ்வேறானவை




(கொழும்பு)

ஹிஸ்புல்லாஹ் தொழிற்பயிற்சி நிறுவனம் என்பது வேறு, மட்டக்களப்பு பல்கலைக்கழக நிறுவனம் என்பது வேறாகும். எமது ஆட்சியில் ஹிஸ்புல்லா தொழிற்பயிற்சி நிறுவனமாக இயங்கி பல நல்ல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது என்றும் 2016 ஆம் ஆண்டில் இருந்தே இது பல்கலைக்கழகமாக மாறியுள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டக்களப்புப் பல்கலைக்கழக நிறுவனம் குறித்து ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

காத்தான்குடியில் ஒரு தொழிற்பயிற்சி நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளமை வரவேற்கப்பட வேண்டும். அத்துடன் இந்த ஹிரா நிறுனம் ஒரு சமூக சேவை நிறுவனம் என்ற அடிப்படையில் அந்த விதிமுறைகளுக்கு அமையவே எமது ஆட்சியில் எனது அமைச்சு செயற்பட்டது. அப்போது எமக்கு முன்வைத்த காரணிகளை உள்ளடக்கி நாம் செலுத்திய அவதானங்களுக்கு அமைய நடவடிக்கை எடுத்தோம். பிரதான மூன்று கற்கைநெறிகளை உள்ளடக்கி பல்கலைக்கழகமாக மாற்றும் கோரிக்கையை முன்வைத்தனர். இது 2016 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முதல் வங்கிக்கணக்கும் 2016 ஆம் ஆண்டில் தான் கிடைத்துள்ளது. ஆகவே 2015 ஆம் ஆண்டு 7ஆம் மாதத்துக்கு பின்னர் தான் இடம்பெற்றுள்ளது. ஆனால் எமது காலத்துடன் இதனை தொடர்புபடுத்த அதுவும் எனது அமைச்சு முன்னெடுத்த தொழிற்பயிற்சிகள் திட்டங்களுடன் தொடர்புபடுத்த முயற்சிக்கின்றனர்.

நீங்கள் என்னதான் குறை கூறினாலும் ஹிஸ்புல்லாவுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். மூன்று ஆண்டுகளுக்கு அவர் இதனை நிறுவனமாக கொண்டு சென்றார். தொழிற்பயிற்சி நிறுவனம் என்ற வகையிலே நான் கருத்துக்களை முன்வைக்கின்றேன். இதில் அப்பாவி மக்களுக்கு பல நல்ல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நான் பல்கலைக்கழகம் பற்றி பேசவில்லை.

அது குறித்து எனக்கு எந்த தெளிவும் இல்லை. ஆனால் மட்டக்களப்பு பல்கலைக்கழக நிறுவனம் என்பது வேறு. ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனம் என்பது வேறாகும்.

இந்த இரண்டையும் ஒன்றாக்கி அரசியல் செய்ய வேண்டாம் என்றே கேட்டுக் கொள்கிறேன்எனமேலும் தெரிவித்தார். (ஜ)

# விசேட தேவையுடையோருக்கான பேருந்துச் சேவை ஆரம்பிக்கப்படும்

## வடக்கு ஆளுநர் உறுதி

(யாழ்ப்பாணம்)

விசேட தேவையுடையோரின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் முகமாக தொழில் நுட்பத்துடன் கூடிய புதிய பேருந்து சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏனைய நாடுகளில் உள்ளதைப் போன்று விசேட தேவையுடையவர்களின் தேவைகளை இலகுபடுத்தும் பொருட்டும் அவர்களுக்கான வசதி வாய்ப்புக்களை அதிகரிக்கும் நோக்குடன் குறித்த பேருந்து சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி வரையான பகல் சேவை இடம்பெறவுள்ளதோடு ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தத் தீர்மானித்துள்ளதாக ஆளுநர் மேலும் தெரிவித்தார். (இ-5-10)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 01 - 12 - 1958



உதிர்வு 11 - 07 - 2019

அமரர். திருமதி.

## தனபாலசிங்கம் தேவராணி (ராணி)

(உடுத்துறை வடக்கு)

அம்மா!...
உனை கரம்பிடித்தவர் கண் கலங்கிட
நீ பெற்ற பிள்ளைகள் கதி கலங்கிட
உன் மருமக்கள் பரிதவிக்க
உன் பேரப்பிள்ளைகள் துடிதுடிக்க
உன் வயிற்றில் பிறவாத உன் பிள்ளைகளும்
உன் உடன் பிறந்த சகோதரரும், மைத்துனரும்
உன் உறவினரும் உடன் தவிக்க
நீங்கள் அவசரமாய் சென்றது எங்கம்மா?
அம்மா! நீங்கள் எங்களை விட்டு சென்றதை
எங்கள் மனம் ஏற்க மறுக்குதம்மா!
மீண்டுமொரு பிறப்பெடுத்து எமக்கே அன்னையாய் வாங்கம்மா!

எமது குடும்பத்தினுடைய குல விளக்கின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு பல்வேறு வழிகளிலும் அனுதாபத்தை தெரிவித்தவர்களுக்கும் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திப்பவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (10.08.2019) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி:

குறிப்பு:- இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (C-7529)

உடுத்துறை வடக்கு, உடுத்துறை. குடும்பத்தினர்.

077 958 7656 - 077 404 1950 -077 754 8159 - 076 285 7456


# சுதந்திரக்கட்சி - பெரமுன கூட்டணி அமைத்த பின்னர் வேட்பாளர் மாறலாம்

## துமிந்த கூறுகிறார்

(கொழும்பு)

ஒவ்வொரு கட்சிக்கும் தத்தமது வேட்பாளர் குறித்து அறிவிக்கும் உரிமை இருக்கிறது. அதற்கிணங்கவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், பொதுஜன பெரமுன கோத்தபாய ராஜபக்ஷவையும் ஜனாதிபதி வேட்பாளர் என்று தெரிவித்துள்ளன.

எனினும் சுதந்திரக் கட்சி-பொதுஜனபெரமுனகூட்டணி அமைத்த பின் னர் இதில் மாற்றங்கள் ஏற்படலாம் என்று சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று ஒவ்வொரு தரப்பிலும் ஒவ்வொருவர் நியமிக்கப்பட்டாலும் ஜனாதிபதி யார் என்று தீர்மானிக்கும் பொறுப்பு சுதந்திரக்கட்சியிடமே இருக்கிறது.

காரணம் சுதந்திரக் கட்சியின் முடிவு என்ன என்பதையே அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இதனால் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய பொறுப்பில் நாம் இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# இராசி பலன்

**மீனம்:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள்.

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பகைகள் விலகி மனங்குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

இராசி பலன் — கிரகநிலை: ராகு; சூரி, சுக், செவ், புத; சனி, கேது; குரு சந். சந்திராஷ்டமம் பரணி

09.08.2019
ஆடி 24, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு
நவமி பிற்பகல் 2.53 மணிவரை
அனுசம் பின்னிரவு 2.53 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
வரலட்சுமி விரதம்

வளவன்

**தனுசு:** மாற்றங்களில் ஏற்றம் பெறுவீர்கள், தேவையற்ற சந்தர்ப்பங்களை தவிர்ப்பது நல்லது, நண்பர்கள் வழியில் சுப விரயங்கள் ஏற்படலாம், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்:** வழிபாடு குதூகலம் தரும், விரும்பிய காரியம் விரும்பியபடி நடைபெறலாம், வருமானம் திருப்திதரும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்:** உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், விரும்பிய பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், செய்தொழில் ஆர்வம் காட்டுவீர்கள், சுய முயற்சிகளின் மூலம் சுகம் காணும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

# ஆளுநரின் நெறிப்படுத்தலில் வடமாகாணம் தழுவிய திருக்குறள் பெருவிழா




## வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸ் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**திருவள்ளுவரையும் திருக்குறளையும் உலகறியச் செய்யும் பொருட்டு வடமாகாண ரீதியில் எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை திருக்குறள் பெரு விழாவை நடத்தத் தீர்மானித்துள்ளதாக யாழ். பல்கலைக் கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்தார்.**

வடக்கு ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவுக்கு அமைய வட மாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில் வட மாகாண பண்பாட்டுத் திணைக்களத்தால் குறித்த திருக்குறள் விழா ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

வள்ளுவன் தன்னை உலகிற்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு என்று அன்று பாரதி சொல்லி வைத்தது போல இலங்கையில் இப்படியான நிகழ்வுகள் இடம் பெறுவது தீர்க்கதரிசனமானது.

இந்தத் திருக்குறள் விழாவையொட்டி இலங்கையர்களால் எழுதப்பட்ட திருக்குறள் சம்பந்தமான நூல்களைத் தொகுத்து வெளியிடுவதோடு திருக்குறள் சம்பந்தமாக செய்யப்பட்ட ஆய்வுகளையும் தொகுத்து வெளியிடவுள்ளோம்.

இலங்கையில் வெளிவந்த திருக்குறள் சம்பந்தமாகவும் திருவள்ளுவர் தொடர்பாக வெளியான சஞ்சிகைகள், பத்திரிகைச் செய்திகள், ஒளிநாடாக்கள் வெளியிடப்படுவதுடன் திருக்குறள் விழாவில் கலந்து கொள்ளும் விருந்தினர்களுக்கு திருவள்ளுவர் சிலைகளும் வழங்கப்படவுள்ளன.

திருக்குறள் தொடர்பான போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் திருக்குறளும் வழங்கப்படும்.

திருக்குறள் வாரத்தை முன்னிட்டு வடமாகாணம் தழுவிய ரீதியில் திருக்குறள் வாசகத்தை மகுட வாசகமாகக் கொண்டு முதலாம் நாள் நிகழ்ச்சி "தொட்டனைத் தூறும் மணற்கேணி" என்ற மகுட வாசகத்துடன் வற்றாப்பளையில் பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்று முல்லை. ஊற்றங்கரைப் பிள்ளையார் கோவில் அருகில் உள்ள கலாசார மண்டபத்தில் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் "வேளாண்மை செய்தற் பொருட்டு" என்னும் மகுட வாசகத்தில் வவுனியாவிலும் மூன்றாம் நாள் நிகழ்வுகள் "ஞாலத்தின் மாணப் பெரிது" மன்னாரிலும் நான்காம் நாள் நிகழ்வுகள் "முயற்சி திருவினை ஆக்கும்" கிளிநொச்சியிலும் ஐந்தாம் நாள் நிகழ்வுகள் "அறிவுஅற்றம் காக்கும் கருவி" தென்மராட்சியிலும் ஆறாம் நாள் நிகழ்வுகள் "கருமமே கட்டளைக் கல்" வடமராட்சியிலும் ஏழாம் நாள் நிகழ்வு "மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற மகுட வாசகத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)



அரியாலை பூம்புகார் சண்முகா முன்பள்ளி, திருநெல்வேலி மகாத்மாஜி சனசமூக நிலைய முன்பள்ளி ஆகியவற்றின் மழலைகள் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றன. இவ்விரு நிகழ்வுகளிலும் சிறந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விருதினை கலாநிதி அருட்தந்தை என்.ஜோண் போல் வழங்கினார்.

# இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை தமிழ் மன்றம், சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடத்தும் 10 ஆவது இரத்ததான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை கருகம்பனை கலாசார மண்டபத்தில் இடம்பெறும். (இ)

# தெய்வீக இசையரங்கின் நான்காம் நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தையொட்டி இளங் கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் நான்காம் நாள் நிகழ்வு இன்று 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் இடம் பெறும். இதில்வயலின்-லெ.யமுனா ஜெயந்தி, மிருதங்கம்-க.இசை நிலவன், சதா.வேல்மாறன், கடம்-ந.கேதாரநாத், பாட்டு-ஶ்ரீதரன் விதுஜன் ஆகியோர் பங்கு பெறுவர். (இ-7)




# அனுமதியின்றி நாட்டப்படும் கம்பங்கள் அகற்றப்பட வேண்டும்

## பிரதேசசபை உறுப்பினர் கோரிக்கை

(சாகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உரிய அனுமதியின்றி நாட்டப்பட்டுள்ள தொலைக்காட்சி கேபிள் கம்பங்களை உடன் அகற்றுமாறு சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.கஜேன் பிரதேச சபைத் தவிசாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இக் கோரிக்கையை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்மராட்சிப் பகுதியில் பிரதேச சபையின் அனுமதியின்றி அதிகளவான கேபிள் கம்பங்கள் நாட்டப்படுகின்றன. குறிப்பாக இவை ஏ-9 வீதிகளில் நிழல் மரங்களுக்கு மிக அருகாமையில் நாட்டப்படுகின்றன. இதனால் எதிர்காலத்தில் ஏ-9 வீதிகளில் காணப்படுகின்ற நிழல் மரங்கள் அழிக்கப்படும் அபாயம் காணப்படுகிறது. எனவே சாவகச்சேரி பிரதேச சபையினர் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அனுமதியின்றி நாட்டப்பட்டுள்ள கேபிள் கம்பங்களை அகற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (5-30)

# மஹோற்சவம்

(கொடிகாமம்)

வரணி குடமியன் அருள் மிகு ஆதிசிவன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவப் பெருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகிறது. இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (5-114)

# வீதி புனரமைப்பு

( சாவகச்சேரி )

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கம்பரெலியத் திட்ட நிதி ஊடாக சாவகச்சேரி நகர சபையின் கிராம்புவில் முருக மூர்த்தி ஆலயக் கிளை வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது. வீதி புனரமைப்புப் பணிகளை சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி. சிவமங்கை இராமநாதன் சம்பிரதாயபூர்வமாக நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார். குறித்த வீதி புனரமைக்கப்பட வேண்டுமென சாவகச்சேரி நகரசபை தவிசாளர் இ.சிவமங்கை பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் விடுத்த கோரிக்கையையடுத்து கம்பரெலியத் திட்டத்தின் ஊடாக 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு தற் போது வீதிப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (5-30)



ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் தலைமையில் வடமாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் பங்குபற்றுதலுடன் "ஆளுநரின் பொதுமக்கள் தினம்" கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அமைச்சு செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது .

# மதுபோதையில் சாரத்தியம் மூவருக்கு ஒரு இலட்சம் அபராதம்

(கொடிகாமம்)

மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய மூன்று நபர்கள் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் 50 ஆயிரம் ரூபா அபராதமும் மூன்று மாதத்திற்கு சாரதி அனுமதிப்பத்திரமும் இடைநிறுத்தி வைக்கப்பட்டது. அத்துடன் குடி போதையிலும் அனுமதிப்பத்திரமின்றியும் மோட்டார் சைக்கிள் செலுத்திய மற்றைய நபருக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (5-114)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை துணைவேந்தர் பதவி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டைய 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34 ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பேரில் செயற்படுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள்/ பெயர் மொழிவுகளுக்காக அழைப்பு விடுகின்றது. பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி/பெயர் மொழியப்பட்டவர் நியமனம் பெற்ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள் இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அதுவரை பதவி வகிப்பார்.

கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி, புலமைத்துவம் என்பவற்றுக்கான உன்னத நிலையங்களுள் தலையாயதாக விளங்குவதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் நோக்காகும். உயர் கல்வியின் தரநிலையை உயர்த்துவதும் பொதுவாக நாட்டினதும் குறிப்பாக வடமாகாணத்தினதும் அபிவிருத்திக்கு பொருந்திவரக் கூடிய ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் அதன் முன்னுரிமைகளாம். இப்பல்கலைக்கழகம் ஒன்பது பீடங்களையும் வவுனியாவில் அமைந்த வளாகத்துடன் அமைந்த இரு பீடங்களையும் கொண்டமைந்து ஏறத்தாழ பதினொராயிரம் பட்டதாரி மாணவர்களையும் 600 உயர் பட்டதாரி மாணவர்களையும் கொண்ட தொகையினருக்கு தொழில்சார் மற்றும் சான்றங்கீகாரமளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிகளை வழங்கி வருகிறது. துணைவேந்தர் இந்நடவடிக்கைகளுக்கு வலுவூட்டித்துணை புரியுமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் தனது அறிவுசார் வாண்மை மற்றும் மேலாண்மை என்பவற்றின் பிரகாசிப்பினூடாக பல்கலைக்கழகத்தின் உயர் நோக்கு மற்றும் அதன் இலக்குகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்ற வகையில் ஒரு உயர் நோக்கு உடையவராக இருத்தல் வேண்டும். மேலும், துணைவேந்தர் உயர் கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பில் தேசத்தின் தேவைகளை இனங்காண்பதற்கு அழைப்பு விடுக்கப்படுபவராகவும் உள்ளார். அவர் ஆராய்ச்சி மேம்பாடு உள்ளடங்கலாக கல்விசார் நடவடிக்கைகளினூடாக பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதற்காகக் காலத்தால் பரீட்சிக்கப்பட்ட விழுமியங்களைப் பலப்படுத்த வல்லவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரி/ பெயர் மொழியப்பட்டவர் கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பல்திறப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும், மாணவர் மற்றும் ஊழியர் ஆகியோரின் பல்திறப்பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற்றிறன்களையும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப் படுத்துவதில் பற்றுறுதியும் கொண்டவராகவும் விளங்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் முழுநேர உத்தியோகத்தர் என்பதோடு அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பிரதம கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார். பல்கலைக்கழகத்துள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பு அவருக்குரியது. பல்கலைக்கழகத்தின் சட்டமும் அதன் எந்தவொரு பொருத்தமான கருவியும் விதித்துரைத்தவைகள் முறையாகப் பேணப்படுவதனை உறுதி செய்தல் துணைவேந்தரின் கடமை என்பதனால் அந்த நோக்கத்திற்காக அவர் அவசியம் என்று கருதத்தக்க எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல், ஆற்றொழுக்கான வகையில் அமையுமாறு மேலாண்மைக்கான கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்குப் பொறுப்பானவர் என்பதனால் கல்வியில் உன்னதம், நல்லாட்சி ஆகிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற்றும் சார்புநிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் விருப்புடையவர் கடினமானதும், நெருக்கடியானதும், சடுதியான நிலைமாறுதல்களை உடையதுமான சூழ்நிலைகளை தன் திறனாற்றல் மற்றும் சாதுர்யத்தின் மூலம் திறம்படக் கையாளக் கூடியவராக இருத்தல் வேண்டும். கைக்கொண்ட காரியத்தின் தன்மையைப் பொறுத்து நெடுமணி நேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதியுயர் நிலையில் வைக்கப்படுவதற்கு உரித்துடையவர் என்பதோடு அதன் மேல் அச்சம்பளத்தின் 15% இனை உபசரிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.

**விண்ணப்பங்கள்/ பெயர் மொழிவுகளுடன் கீழ்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும்.**

1. பிறந்த திகதியையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுய தகைமைவிபரப் பட்டியல்.
2. விண்ணப்பதாரி/ பெயர் மொழியப்பட்டவர் பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம். தற்போது பதவி வகிப்பவர் விண்ணப்பதாரி/ பெயர் மொழியப்பட்டவராயின் அவர் தான் தன்னுடைய (முதலாவது) பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர்காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையில் அறிக்கையொன்றைக் கையளிக்க வேண்டும்.
3. பெயர் மொழிவுகளாயின் பெயர் மொழியப்பட்டவரின் இணக்கக் கடிதம்.
4. விண்ணப்பதாரி/ பெயர் மொழியப்பட்டவர் அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப்பட முடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

விண்ணப்பங்கள் பெயர் மொழிவுகள் பேரவைச் செயலாளர், பதிவாளர் செயலகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு மூடிய கடித உறையில் 07.10.2019 அன்று பி.ப. 3.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்படவோ கூடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'துணைவேந்தர் பதவி' எனக் குறித்திருக்க வேண்டும்.

முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படா.

**பதிவாளர் செயலகம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**

**விசுவநாதன் காண்டீபன்**
**பதிவாளரும் பேரவையின்**
**செயலாளரும்.**

(C-7223)

# (Tom-EJC) மாமரங்களை தாக்கும் கொப்பள ஈ

மாமரங்களில் பிரதான பீடையாக மாமரத் தத்திகளைத் தொடர்ந்து இப்பீடை மாறி வருகின்றது. தற்போது வட மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இதன் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது. இப்பீடை தாவர இழையத்தை உணவாக உள்ளெடுப்பதன் விளைவாக சிறிய கழலைகள் போன்ற அமைப்புக்களை உருவாக்கத் தூண்டும். இது இலைகளில் கொப்பளங்களாக தென்படும். இதன் அதிதீவிர தாக்கத்தினால் இலைகள் உதிர்வதுடன் பழங்களின் விளைச்சலும் குறைவடையும்.

**பிரதான விருந்து வழங்கி**

மாமரத்தில் மட்டுமே இப்பீடை தாக்கத்தை ஏற்படுத்தும்.

**வாழ்க்கை வட்டம்**

பெண்பூச்சியானது இளம் இலைகளின் கீழ்புறத்திலே தனித்தனியாக முட்டைகளை இடும். இவ்விடத்தில் சிவப்பான அடையாளத்தையும் ஏற்படுத்தும். 2-3 நாட்களில் அம்முட்டைகளில் இருந்து குடம்பிகள் வெளிவரும். குடம்பிகள் வெளிவந்து ஒரு சில நிமிடங்களிலேயே இலையின் உட்பகுதியில் நுழைந்து உணவை உண்ண ஆரம்பிக்கும்.



முதிர்ந்த குடம்பிகள் மண்ணினுள் விழுந்து கூட்டுப்புழுவாக மாறும். இவை இலையில் இருந்து வெளியேறிய கழலைகளில் சிறிய துளைகளை ஏற்படுத்தி விட்டுச் செல்லும். காலநிலை உகந்ததாக இல்லையெனில் முதிர்ச்சியடைந்த நிறையுடலி மண்ணினுள் உறங்கு நிலையில் இருந்து தகுந்த காலநிலை வரும்போது உருமாற்றமடைந்து நிறையுடலியாக மாறும்.

குடம்பிகளின் வாழ்க்கை காலம் 7 - 10 நாட்கள். கூட்டுப்புழுவின் வாழ்க்கைக் காலம் 5 -7 நாட்களாகும். நிறையுடலிப்பூச்சி மண்ணிலிருந்து கூட்டுப் புழுவின் உறையை உடைத்துக்கொண்டு வெளியேறும்.

இவை பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. குறுகியகால வாழ்க்கையை உடையவை. இவை வெளியேறி இனக்கலப்பிற்கு உட்பட்ட பின்னர், முட்டையிட்டு 24 மணி நேரத்தினுள் இறந்து விடும்.

ஒருவருடத்தில் 3 - 4 தலைமுறைகளை தோற்றுவிக்கும். கொப்புள ஈ காற்றினாலும் பாதிக்கப்பட்ட தாவரத்தினை எடுத்துச் செல்வதனாலும் ஓரிடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்குப் பரவும்.

**பீடையை இனங்காணல்**

நிறையுடலி பூச்சி சிறிய பறக்கக்கூடிய ஈ போன்றது. நீளம் 1 - 2mm ஆகும் ஆண் பூச்சி ஒப்பீட்டளவில் பெண்பூச்சிகளைவிடச் சிறியது. சிறகின் நீளம் 1.0 - 1.5mm ஆகும். கூட்டுக்கண்கள் வட்டவடிவானவை.



ஆண்,பெண் பூச்சிகள் வேறுபட்ட நீளங்களை உடைய உணர்கொம்புகளை உடையவை. ஆண் பூச்சிகளின் உணர்கொம்பு பெண் பூச்சிகளின் உணர்கொம்புகளிலும்விட நீளமானவை. ஆண் பூச்சிகளின் வயிற்றுப்புறமாக சேய்மை அந்தத்தில் தழுவிகள் காணப்படும்.

**தாக்கமும் விளைவிக்கும் சேதமும்**

ஈயானது வெவ்வேறு வளர்ச்சி பருவங்களிலுள்ள மாமரங்களில் சேதத்தை ஏற்படுத்தும். குடம்பிகள் (கீடம்) இலைகளின் கீழ் இழையங்களை துளைத்து அதனுள் உணவூட்டலை மேற்கொள்ளும் இதன்விளைவாக இலைகளின் மேற்பரப்பில் சிறிய உயர்த்தப்பட்ட காய்ப்புக்களைப்போன்ற கழலைகள் உருவாகும்.

கழலைகளின் தோற்றம், தொற்றி 7 நாட்களுக்குள் வளர ஆரம்பிக்கும். இக்கழலைகள் 3 – 4 mm விட்டம் வரை வளர்ச்சியடைந்து காணப்படும். தீவிர தாக்கத்திற்கு உட்பட்ட இலைகள் மேல்நோக்கி சுருள்வதுடன் முதிர்ச்சி அடைவதற்குமுன்னர் அவை உதிர்க்கப்படும்.

கழலைகளில் காணப்படும் சிறிய துவாரங்கள் இலைகளில் இருந்து குடம்பிகள் வெளியேறியுள்ளமையைக் காண்பிக்கிறது. இத்துவாரங்கள் இரண்டாம் நிலை அந்திரக்னொஸ் பங்கசு தொற்றுக்குரிய வழிகளாகக் காணப்படும்.

இளம்காய்கள் தாக்கத்திற்குட்படும்போது பொதுவாக அவற்றின் கீழ்புறப்பகுதியில் துளைகள் காணப்படும். தீவிரமாக தாக்கத்திற்குட்பட்ட மாமரங்களில் மிகக்குறைவான பூந்துணர்களே உருவாகும். இதனால் விளைச்சல் குறைவடையும்.

**இரசாயனமாற்ற கட்டுப்படுத்தும் முறைகள்**

❖ மாமரத்தோட்டத்தைச் சூழவுள்ள பகுதிகளை சுகாதாரமாகப் பேணுதல். தொடர்ச்சியான களைக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல்.

❖ தாக்கத்திற்குட்பட்ட கிளைகளை வெட்டியகற்றல்.

❖ மாமரத்திற்கு கீழுள்ள நிலத்தை ஆழமாக உழுவதன் மூலம் கூட்டுப்புழுக்கள் சூழலுக்கு வெளிக்காட்டப்படுவதனால் அவை சூரிய வெப்பத்தினால் கொல்லப்படும்.

❖ தாக்கத்திற்குள்ளான தாவரப்பகுதிகளை புதிய மாமரப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் இடங்களுக்கு கொண்டுசெல்வதை தவிர்த்தல்.

❖ கைமூலம் பிடித்தழித்தல். (குடித்தொகை மிகக்குறைவாக காணப்படும் சந்தர்ப்பத்தில்) ஒட்டும் தன்மையான பொறியை பயன்படுத்தி நிறையுடலி ஈக்களை கட்டுப்படுத்தல்.

❖ பழமரங்களின் அடியில் பொலித்தீன் தாள்களை விரிப்பதன் மூலம் குடம்பிகள் மண்ணினுள் சென்று கூட்டுப்புழுவாவதை தவிர்க்கலாம்.

❖ தாவரங்களின் கீழ்ப்பகுதியில் ஏறத்தாழ ஒரு மணிநேரம் நீரை தேக்கி வைத்திருப்பதன் மூலம் மண்ணிலுள்ள கூட்டுப்புழுக்களுக்கு ஒட்சிசன் ($O_2$) கிடைப்பதை தடுப்பதன் மூலம் அவற்றை அழிக்கலாம்.

இரசாயனப் பதார்த்தங்களை விசுறுவதற்கு முன்னர் மரங்களிலுள்ள பழங்களை அகற்றிய பின்னர், கிளைகளை முறையாகக் கத்தரிக்கப்பட்டு பின் வெளிவரும் புதிய குருத்துக்களிற்கு 3 வாரங்களுக்கு ஒரு தடவை தையோசைக்கிளம் ஐதரசன் ஒக்சலேட்டு 50% SC (எவிசெக்ட்), தயோமெதொக்ஸாம் 25% WG (அக்ஸரா) ஆகிய பூச்சி கொல்லிகளில் ஒன்றை முறையே 4.5g / 10 L, 3g/ 10L எனும் அளவில் நீருடன் கலந்து விசுறுதல் வேண்டும்.

**.சி.இராஜேஸ்கண்ணா,**
**உதவிப் பணிப்பாளர், பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி.**




**Shan Jathu** updated his cover photo.
27 November 2018

பனைமரம் இருக்கின்ற சூழலில் தான்
அரச மரமும் இருக்கிறது.
ஒன்று ஒருவித்திலைத் தாவரம்
மற்றையது இருவித்திலைத் தாவரம்...
பனையினுடைய
கலாசார பண்பாடுகள் வேறு,
அரசினுடைய கலாசார பண்பாடுகள் வேறு.
இவ்விரு வேறுபட்ட இனங்கள்
ஒரே சூழலில் வாழ வேண்டியது
இயற்கையினுடைய நியதி.எந்தவொரு
இனமும் அதன் தனித்துவங்களை
இழக்காதவரையில்
அவ் இனத்தை யாராலும்
அழித்து விட முடியாது...
யாராலும் அடக்கி
ஒடுக்கிவிட முடியாது...
தனித்துவம் காப்போம்
தரணியில் நிமிர்வோம்.



**Aaruthirumurugan Aaruthirumurugan**
6 August at 22:09

யாழ்.-கொழும்பு பயண
வண்டிகள்
முறிகண்டி விநாயகரை
தரிசித்துச்
செல்லுங்கள். வழிபாடு
வழிப் பயணத்துக்கு நலம்.

**Kavinth Kavil** is feeling sad.
6 August at 01:41

சோதனை செய்தால்
ஏன் சோதனை என்பீர்கள்... சோதனை
செய்யாவிட்டு சம்பவம் ஏதும் நடந்தால்
சம்பவத்திற்கு காரணம்
அவர்கள் தான் என்பீர்கள்...
இதிலும் அரசியலா???
என்ன சமூகமப்பா???
# முருகா

**Nathan Siva**
5 August at 22:42

வீதியோரங்களில்
நாட்டப்படும்
மரங்களெல்லாம்
மின்சார சபையினர்
வெட்டி
அழிப்பதற்குத்தானோ!

**Parani Krishnarajani**
4 August at 17:44

வட்டுக்கோட்டை
தீர்மானம்-திம்புக்
கோட்பாடு-சுதுமலைப்
பிரகடனம்-நந்திக்கடல்
கோட்பாடுகள்.
#வரலாறு சரியாகவே
வழிநடத்துகிறது

**அன்பு வாசகர்களே! சுட்டும் முகநூல் என்ற புதியதொரு களம் உங்கள் கருத்துக்களைத் தாங்கி வெளிவருகிறது. முகநூல்களில் நீங்கள் இரசித்து பார்த்த அல்லது உங்கள் முகநூல் பக்கத்தில் நீங்கள் முன்வைத்த ஆழமான-யதார்த்தமான கருத்துக்கள் இவ்விடத்தில் பதிவிடப்படும். இதற்கு உதவியாக முகநூலில் வெளிவரும் அறிவார்ந்த கருத்துக்களை www.facebook.com/valampurii எனும் தளத்தில் உள்பெட்டி (Messenger) ஊடாக அனுப்பி வைக்கலாம்.**

# கோத்தபாயவை இரகசியமாக சந்தித்த கபீர், சாகல மன்னிப்புக்கோர வேண்டும்

(கொழும்பு)


ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களுமான கபீர் ஹாஷீம், சாகல ரத்நாயக்க ஆகியோர் கோத்தாபய ராஜபக்ஷவை இரகசியமாக சந்தித்தமைக்காக கட்சி ஆதரவாளர்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சருமான நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்ட போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தாம் பல வருடங்களின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி ஒருவரை உருவாக்க முயற்சிக்கும் வேளையில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இவ்வாறு கோத்தபாய ராஜபக்ஷவை இரகசியமாக அவரது வீட்டில் சந்தித்தனர்.

இதனால் கட்சி ஆதரவாளர்கள் மிகுந்த கவலையடைந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

எனவே கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான குறித்த இரு அமைச்சர்களும் கட்சி ஆதரவாளர்களிடம் மன்னிப்புக் கோரி ஜனாதிபதி தேர்தலுக்காக முன்னின்று செயற்பட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



கேலிச்சித்திரம்

# இலங்கை-இந்திய நாடுகளுக்கிடையில் உறவுப்பாலமாக திகழ்ந்தவர் சுஷ்மா

## ஹக்கீம் இரங்கல்



(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உறவுப்பாலமாக திகழ்ந்த இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முன்னாள் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் திடீர் உடல்நலக் குறைவு காரணமாக காலமானார். அவரது மறைவு குறித்து விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஜனாதிபதியும் சாட்சியமளிக்க வேண்டும்

## அமைச்சர் ராஜித வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு அழைக்க அவரது விருப்பத்தைக் கேட்டறியத் தேவையில்லை என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைக்கப்பட்டார். தெரிவுக்குழுவிற்கு அழைப்பதற்கு விருப்பு வெறுப்புக்கள் தேவையில்லை. பேராயரை அழைப்பது தொடர்பில் ஏற்கனவே தீர்மானிக்கவில்லை.

எனினும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் தகவல்கள் தெரியும் எனக் கருதுவதால் அவர் தெரிவுக் குழுவிற்கு வந்து குண்டுத் தாக்குதல் தொடர்பான தகவல்களை



வழங்கலாம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்து- சைவ மறுமலர்ச்சிக்கான நடமாடும் சேவை நாளை

## அமைச்சர் மனோ தகவல்



(கொழும்பு)

உங்கள் ஊர் தேடி வரும் இந்து சைவ மறுமலர்ச்சிக்கான நடமாடும் சேவை, முதற்கட்டமாக நாளை 10 ஆம் திகதி வடகொழும்பிலும் 17 ஆம் திகதி தென் கொழும்பிலும் 18 ஆம் திகதி அவிசாவளையிலும் நடைபெறும். ஏனைய மாவட்டங்களிலும் உடனடியாக இந்த நடமாடும் சேவை நடத்தப்படும். இதில் இந்துக் குருமார்கள். அறங் காவலர்கள், அறநெறி ஆசிரியர்கள், இந்து மன்ற செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சால், "உதயம் -"மக்கள் சேவை - உங்கள் ஊர் தேடி வரும் அரச சேவை" என்ற பெயரில் நடத்தப்படும் இந்த இந்து சைவ மறுமலர்ச்சிக்கான நடமாடும் சேவை முதலில் கொழும்பு மாவட்டத்தில் பின்வரும் மூன்று இடங்களில், அறிவிக்கப்பட்டுள்ள திகதிகளில் நடைபெறும்.

(1)கொழும்பு வடக்குக்கான முதலாம் சேவை, 10.08.2019 அன்று சனிக்கிழமை காலை 9- மாலை 4 மணிவரை கொழும்பு வடக்கு நாவலர் மண்டபத்திலும்,

(2)கொழும்பு தெற்குக்கான இரண்டாம் சேவை 17.08.2019 சனிக்கிழமை காலை 9- மாலை 4 மணிவரை கொழும்பு தெற்கு- சரஸ்வதி மண்டபத்திலும்,

(3)அவிசாவளைக்கான மூன்றாம் சேவை, 18.08.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9- மாலை 4 மணிவரை அவிசாவளை புவக்பிட்டிய சீசீ தமிழ் வித்தியாலயத்திலும் நடைபெறும்.

இதையடுத்து ஏனைய மாவட்டங்களிலும் இந்த இந்து-சைவ நடமாடும் சேவை நடைபெறும். இவற்றுக்கான திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும்.

இந்நடமாடும் சேவையில் பெறக்கூடிய சேவைகள்.

* இலங்கை தேசிய இந்து மகாசபை உருவாக்கம் பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்துதல்.

* இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், இந்து அறநெறிப் பாடசாலைகள், தமிழ்க் கலை மன்றங்கள் என்பவற்றை பதிவு செய்தல்.

* இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், இந்து அறநெறிப் பாடசாலைகள், தமிழ்க் கலை மன்றங்கள் என்பவற்றின் தகவல்களைப் பெறுதலும் மீள் பதிவு செய்தலும்.

* இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், இந்து அறநெறிப் பாடசாலைகள், தமிழ்க் கலை மன்றங்கள் என்பவற்றின் நிர்வாக நிதி நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை வழங்கல்.

* இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், இந்து அறநெறிப் பாடசாலைகள் என்பன எதிர்நோக்கும் பிரச்சினைகள், பிணக்குகளுக்குத் தீர்வு காணல்.

* இந்து அறநெறிப் பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை வழங்குதல்.

* இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் தகவல்களைப் பெறுதலும் பதிவு செய்தலும்.

* இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்.

* இந்து அறநெறிப் பாடசாலைகளுக்குப் புதிதாக ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளல்.

* இந்துக் குருமார்களின் தகவல்களைப் பெறுதலும் பதிவு செய்தலும்.

* இந்துக் குருமார்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்.

* தமிழ் கலைஞர்களின் தகவல்களைப் பெறுதலும் பதிவு செய்தலும்.

இவை பற்றிய மேலதிக விபரங்களுக்கு: பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு, 248 1/1, காலி வீதி, கொழும்பு-4 என்ற விலாசத்தில் அமைந்துள்ள அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி இல. 011 255 2641 என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செபஸ்ரியார் சிலை உடைப்புடன் முஸ்லிம்களுக்குத் தொடர்பில்லை

## பிரஜைகள் ஒன்றியம் உறுதி

(கொழும்பு)

நீர்கொழும்பில் புனித செபஸ்ரியார் திருச்சொரூபம் உடைக்கப்பட்ட சம்பவத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை எனத் தெரிவித்த நீர்கொழும்பு பிரஜைகள் ஒன்றியம்.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் அடிப்படைவாதக் குழுக்கள் உள்ளதாகவும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவங்களின் பின்னர் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் பொதுஜனபெரமுன கட்சியைச் சேர்ந்தவர்கள் இருந்ததாகவும் குற்றம் சாட்டியது.

மேலும், நீர்கொழும்பு பகுதியில் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி உறவுகளை இழந்த கத்தோலிக்க மக்களுக்கும் ஏனைய சமூகத்தினருக்கும் இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு கடுமையாக உழைத்து வருகின்றோம்.

இவ்வாறானதொரு நிலையில் அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் இடம்பெறும் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அந்த ஒன்றியம் மேலும் தெரிவித்தது. (இ-7)

## மட்டக்களப்பு பல்கலை.விவகாரம்

# ஹிஸ்புல்லாவின் பாராளுமன்ற உறுப்புரிமையை பறிக்க முடியும்

## நாடாளுமன்றில் நளிந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

சட்டத்துக்கும் அரசியல் அமைப்பிற்கும் முரணாக அங்கீகாரம் இல்லாத வகையில் உருவாக்கப்பட்ட மட்டக்களப்பு பல்கலைக்கழக நிறுவன அதிகாரிகள் மற்றும் இதனுடன் தொடர்புபட்ட நபர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதுடன் இந் நிறுவனத்தை உடனடியாக அரச உடைமையாக மாற்ற வேண்டும் என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியல் அமைப்பின் 91(1) இன் பிரகாரம் இவ்வாறான சட்டவிரோத உடன்படிக்கை செய்துகொண்ட குற்றத்திற்காக ஹிஸ்புல்லாவின் பாராளுமன்ற உறுப்புரிமையை பறிக்க முடியும் எனவும் சபையில் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று மட்டக்களப்பு பல்கலைக்கழக நிறுவனம் குறித்து ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையின் போது அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார். (இ-7)

# அனைத்து விடயங்களிலும் இலங்கையுடன் கைகோர்த்துள்ளோம்

## கம்போடிய மன்னர் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு







(கம்போடியா)

பொருளாதார, வர்த்தக மற்றும் சமூக ரீதியாகவும் பௌத்த சமய புத்தெழுச்சி உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் கம்போடியா இலங்கையுடன் பலமாக கைகோர்த்திருப்பதாக அந்நாட்டு மன்னர் Preah Bat Samdech Preah Boromneath Norodom Sihamoni தெரிவித்தார்.

கம்போடியா அரசின் விசேட அழைப்பின்பேரில் அந்நாட்டுக்கு அரச முறைப் பயணமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் கம்போடிய மன்னருக்குமிடையிலான சந்திப்பு நேற்று வியாழக்கிழமை முற்பகல் இடம்பெற்றது.

கம்போடிய அரச மாளிகைக்குச் சென்ற ஜனாதிபதியை கம்போடிய மன்னர் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார். இதற்காக மிகவும் கோலாகலமான நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

பண்டைய காலந்தொட்டு இரண்டு நாடுகளுக்குமிடையில் இருந்துவரும் உறவுகளை நினைவுகூர்ந்த கம்போடிய மன்னர், தனது அழைப்பின் பேரில் கம்போடியா நாட்டுக்கு வருகை தந்ததையிட்டு ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் தற்போது இலங்கை பொருளாதார, வர்த்தக, சமூக மற்றும் சமய ரீதியாக அடைந்துள்ள முன்னேற்றத்தை பாராட்டிய கம்போடிய மன்னர், குறிப்பாக கம்போடிய பௌத்த மதகுருமார்களுக்கு கல்வி புலமைப் பரிசில்களை வழங்குதல் உள்ளிட்ட கல்வித்துறையில் இலங்கை அரசாங்கம் கம்போடியாவிற்கு வழங்கும் உதவிகள் குறித்து தனது நன்றியைத் தெரிவித்தார்.

இரண்டு நாடுகளுக்குமிடையிலான கல்வி, சுற்றுலா கைத்தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருந்துவரும் உறவுகளை இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் புதிய வழிகளில் முன்கொண்டு செல்வது குறித்தும் இதன்போது தலைவர்கள் விரிவாக கலந்துரையாடினர்.

இதேவேளை, இலங்கைக்கும் கம்போடியாவிற்கும் இடையிலான நீண்டகால நட்புறவை குறிக்கும் வகையில் கம்போடியாவிற்கு அரசமுறைப் பயணமொன்றை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்தமைக்கு கம்போடிய மன்னருக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, பௌத்த சமய புத்தெழுச்சிக்காக இலங்கை தற்போது பல முக்கிய பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இந்த பயணத்தில் இணைந்துகொள்ள கிடைத்தமை குறித்து தான் மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் கம்போடியாவின் தலைநகரில் அமைந்துள்ள கம்போடியாவின் சுதந்திர தூபிக்கு ஜனாதிபதி மலரஞ்சலி செலுத்தியதுடன், கம்போடியாவின் தந்தையாக கருதப்படும் தற்போதைய மன்னரின் தந்தையாரான Norodom Sihanouk மன்னரை நினைவுகூர்ந்து அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கும் மலர் வலயம் ஒன்றை வைத்து அஞ்சலி செலுத்தினார். (இ-7)

# வவுனியாவில் 622 குடும்பங்கள் குடிநீர் இன்றி அவதி



## நீரை சிக்கனமாக பயன்படுத்த கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் வரட்சி காரணமாக 3 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 622 குடும்பங்களைச் சேர்ந்த 2166 பேர் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவித்த மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா பொதுமக்கள் நீரை சிக்கனமாகவும் கவனமாகவும் பாவிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்ட காலநிலை மாற்றம் தொடர்பாக இம்முறை மழை வீழ்ச்சி மிகக் குறைவாக காணப்பட்டதனால் வவுனியா மாவட்டத்தில் வரட்சி நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வருடம் ஜனவரி தொடங்கி தற்போது வரையான காலப்பகுதியில் மழை வீழ்ச்சி மிகவும் குறைவடைந்துள்ளது.

இதனால் வவுனியா வடக்கில் பிரதேச செயலகப் பிரிவில் மருதோடை, ஊஞ்சல் கட்டி, வெடிவைத்தகல்லு, நைனாமடு, கற்குளம் உள்ளிட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 125 குடும்பங்களைச் சேர்ந்த 402 பேர் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர்.

மேலும், வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் ஓமந்தை, காத்தார்சின்னக்குளம், மகாரம்பைக்குளம், கள்ளிக்குளம், பம்பைமடு, காத்தான்கோட்டம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 154 குடும்பங்களைச் சேர்ந்த 550 பேரும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் பாவற்குளம், பெரியபுளியங்குளம், கங்கன்குளம், நேரியகுளம், சின்னசிப்பிகுளம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 243 குடும்பங்களைச் சேர்ந்த 1194 பேரும் குடிநீரை பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். இவர்களுக்கான குடிநீரை பெற்றுக் கொடுக்க மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு, அப்பகுதி பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும் பம்பைமடு மற்றும் கோவில்குளம் ஆகிய கமநல சேவை நிலைய பிரிவுகளில் 120 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை அழிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-250)

## மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையினை அமைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையினை அமைக்குமாறு ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் இறப்புக்கள் இடம்பெறும் போது பிரேத அறை அமைக்கப்படாததன் காரணமாக சடலங்கள் திறந்த வெளியில் ஒரு ஓரத்தில் வைக்கப்படுகிறது. பின்னர் சடலம் முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படுகிறது.

பிரேத பரிசோதனைகளை மாங்குளம் வைத்தியசாலையில் மேற்கொள்வதற்கு திடீர் மரண விசாரணை அதிகாரியினை நியமிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மகப்பேற்றுக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாங்குளம் வைத்தியசாலையில் இருந்து செல்லும் பெண்கள் திரும்பி வருவதற்கு கூடுதலான பணம் செலுத்தி ஆட்டோவிலோ அல்லது பேருந்திலோ பயணிக்க வேண்டியுள்ளது.

குறித்த பெண்களை மாங்குளம் அம்புலன்ஸ் வண்டி மீண்டும் மாங்குளம் வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது மகப்பேற்றுக்குச் செல்லும் பெண்கள் போக்குவரத்தினால் பெரும் நெருக்கடியினை சந்தித்து வருவதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த இணைத்தலைவர்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன்.மாங்குளம் ஆதார வைத்தியசாலையின் வளங்களைப் பெருக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் வைத்தியசாலையில் விபத்துப் பிரிவினையையும் பிரேத அறையினையும் அமைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதாகத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா மாங்குளத்தில் திடீர் மரண விசாரணை அதிகாரியினை நியமிப்பதற்கு நடவடிக்கைமேற்கொண்டுள்ளதாகவும்தெரிவித்தார். (9-350)

## பிரதி அமைச்சர் கருணாரத்ன கிளி.நைற்றா நிறுவனத்துக்கு விஜயம்



திறன் விருத்தி அமைச்சின் பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதான கிளிநொச்சியில் அமைந்துள்ள நைற்றா நிறுவனத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அங்கு தொழில்பயிற்சி பெறும் மாணவர்களுடன் கலந்துரையாடியதுடன் குறை நிறைகளையும் கேட்டறிந்தார். அத்துடன் தொழில் பயிற்சிகள் இடம்பெறும் பகுதிகளை பார்வையிட்ட அவர் பயிற்றுவிப்பாளர்களுடன் கலந்துரையாடினார்.

தொடர்ந்து கிளிநொச்சியில் அமைந்துள்ள விரிஷ தொழில் பயிற்சி நிறுவனத்திற்கும் விஜயம் மேற்கொண்டதுடன், அங்கும் இடம்பெறும் பயிற்சிகள் தொடர்பில் பார்வையிட்டு மாணவர்கள் மற்றும் பயிற்றுநர்களுடன் கலந்துரையாடியிருந்தார். (9)

## மன்றில் ஆஜராகாத பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு பிடியாணை

(கண்டாவளை)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற திருமண நிகழ்வு ஒன்றில் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பெருந்தொகை நிதி கொள்ளையிடப்பட்டமை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த கிளிநொச்சிப் பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை கைது செய்ததுடன் அவர் நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்று முன்தினம் மேற்படி சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ரீ.சரவணராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து முறைப்பாட்டாளர் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட பலரைக்கைது செய்யவேண்டியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தாலும் சந்தேக நபருக்கு சார்பாகவே செயற்படுவதாகவும் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி மன்றில் ஆஜராகவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைக்கவனத்திலெடுத்து மன்று மேற்படி சந்தேகநபரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக கிளிநொச்சி உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக பிடியாணை பிறப்பித்துள்ளது. (9-315)

## காரியாலய திறப்பு விழாவும் காசோலை வழங்கும் நிகழ்வும்

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் புதிய பிராந்திய காரியாலய திறப்பு விழாவும் மானியத் திட்டங்களைப் பெற்றுக் கொள்ளும் பயனாளிகளுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு மற்றும் கற்பகதரு சங்கத்தின் சுழற்சிமுறைக் கடன் திட்டப் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளை வழங்கும் நிகழ்வும் நாளை மறுதினம் மற்றும் 12.08.2019 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன.

அந்த வகையில் கிளிநொச்சி-பளை தர்மகேணியில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் மாதிரித் தோட்டத்தில் நாளை காலை 10.30 மணிக்கு புதிய பிராந்திய காரியாலய திறப்பு விழா நிகழ்வு நடைபெறும்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் கூட்டுறவாளர் மண்டபத்தில் நாளை பிற்பகல் 2.30 மணிக்கும் முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 8.30 மணிக்கும் திட்டப் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் மற்றும் காசோலைகள் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளன.

தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தலைமையில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளார்.

இத்தொடர் நிகழ்வில் 3 மாவட்டங்களையும் சேர்ந்த தென்னங்கன்று பராமரித்தல், ஊடுபயிர்ச்செய்கை, நீர்ப்பாசனம், தென்னங்காணிகளுக்கான புனருத்தாரண நிகழ்வு, நடுகைக்குழி அமைத்தல் போன்ற மானியங்களை மேற்கொண்ட 1138 பயனாளிகளுக்கான காசோலைகளும் வீட்டுத்தோட்டத்தை மேற்கொண்ட பயனாளிகளுக்கு 200 விதைப்பைக்கற்றுக்களும் 249 தென்னை நாற்றுக்களும் வெவிஎிசவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட 30 பயிர்ச்செய்கையாளர்களுக்கான சான்றிதழ் மற்றும் சீருடைகளும் கற்பகதரு சங்கங்களின் கீழ் சுழற்சி முறைக்கடனை பெற்றுக்கொண்ட பயனாளிகளுக்கான கடன் திட்டத்தினை வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (9)






**முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வளாகத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசாவின் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட விளையாட்டு முற்றம் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மூன்று மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.**

**(படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)**



**வட்டுக்கோட்டை இந்து வாலியர் சங்கத்தின் அன்பளிப்பு உதவித்திட்டத்தின் கீழ் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளியான கிளிநொச்சி இரத்தினபுரத்தை சேர்ந்த இ.சறோஜினிக்கு 301,436 பெறுமதியான மாற்றுத்திறனாளிகளுக்கான புதிய மோட்டார் சைக்கிள் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதுடன் மாங்குளம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக அன்றாட உணவுத்தேவைக்காக அல்லற்படும் 45 முதியவர்களுக்கு தொடர்ச்சியான முறையில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டு வரும் நிலையில் 25 முதியவர்களுக்கு தலா ரூபா 3000 பெறுமதியான உலர் உணவு பொதிகளும் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.**

# தண்டவாளத்துக்கு குறுக்காக பாதை அமைத்து மணல் கடத்தலில் ஈடுபடும் மர்ம நபர்கள்

## கண்டு கொள்ளாத மாங்குளம் பொலிஸார்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்திலிருந்து கொக்காவில் கிராமத்திற்கு இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள தண்டவாளத்துக்கு குறுக்காக இரவு நேரங்களில் மணல் பாதை அமைத்து டிப்பர்களில் மணல் கடத்தல் இடம்பெறுவதாக தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள் மாங்குளம் பொலிஸார் இந்த விடயம் தொடர்பில் கண்டு கொள்ளாமல் இருப்பதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த மணல் கடத்தல் நடவடிக்கைக்காக தண்டவாளத்துக்கு குறுக்காக போடப்படும் மணல் அகற்றப்படாமல் இருப்பதால் தண்டவாளம் பாதிப்படைவதுடன் விபத்துக்கள் ஏற்பட்டால் பாரிய அனர்த்தம் ஏற்படுவதற்காக சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாளாந்தம் இவ்வாறு அமைக்கப்படும் பாதையை அடுத்த நாள் காலையில் புகையிர பாதை ஊழியர்கள் அகற்றி வருகின்றனர். இருப்பினும் தொடர்ச்சியாக இந்த சம்பவம் இடம்பெற்று வருகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறிப்பாக மாங்குளம் பொலிஸார் இந்த மணல் கடத்தல் நடவடிக்கையை தடுத்து நிறுத்த வேண்டும் என்பதுடன் புகையிர பாதையில் பாரிய அனர்த்தங்கள் ஏற்படாது தடுக்க கடத்தல்காரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-281)




# அனுமதி பெறப்படாத இடங்களில் ஒட்டப்பட்ட விளம்பர பதாகைகள் நீக்கம்



(குருமன்காடு)

வவுனியா கோவிற்குளம் பகுதியில் நகரசபையின் அனுமதி பெறாது வீதிகளில் ஒட்டப்பட்ட மற்றும் காட்சிப்படுத்தப்பட்ட விளம்பர பாதாகைகளை அகற்றும் பணியில் நேற்று நகரசபையினர் ஈடுபட்டனர்.

வவுனியா. கோவிற்குளம் - சிதம்பரபுரம் பிரதான வீதியில் காணப்படும் பெரும்பாலான மின்கம்பங்களில் நகரசபையின் அனுமதியின்றி விளம்பர பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் காரணமாக அப்பகுதியின் சுற்றுப்புறச்சூழல் மாசடைவதுடன், வீதிகளும் குறியீடுகள், அலங்காரங்கள் என்பனவும் மறைக்கப்பட்டிருந்தன.

இதனால் அனுமதி பெறாது ஒட்டப்பட்ட மற்றும் காட்சிப் படுத்தப்பட்ட பதாகைகளை அகற்றும் பணியில் நகரசபையினர் ஈடுபட்டிருந்தனர்.

தற்போது அப்பகுதியில் காணப்படும் மின்கம்பங்கள் அனைத்தும்வெறுமையாக காணப் படுவதுடன் குறித்த வீதி அழகாகவும் காணப்படுகின்றது. (9-250)

# கடும் காற்றினால் 6 வீடுகள் சேதம்



(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன்தினம் திடீரென வீசிய கடும் காற்று காரணமாக 6 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் 18 பேர் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வவுனியாவின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் மதியம் திடீரென கடும்காற்று வீசியது. இதனால் வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆண்டியாபுளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் ஒரு வீடும் 4 பேரும், பெரியபுளியாளங்குளத்தில் ஒரு வீடும் 2 பேரும், முதலியார் குளத்தில் 2 வீடும் 8 பேரும் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியா வடக்கு மன்னகுளத்தில் ஒரு வீடும் 3 பேரும், நெடுங்கேணி வடக்கில் ஒரு வீடும் ஒருவரும் என 6 வீடுகளும், 18 பேரும் பாதிப்படைந்துள்ளனர். குறித்த வீடுகளின் கூரைப்பகுதிகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டு பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அத்துடன், பல இடங்களில் மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் ஏ9 வீதி தேக்கவத்தையில் மரம் முறிந்து விழுந்து கார் ஒன்றும் சேதமடைந்துள்ளது. (9-250-299)

# நிம்மதியாக வாழ யானை வேலிகளை அமைத்துத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு பனிக்கன்குளம், மாங்குளம் ஆகிய பிரதேசங்களில் காட்டுயானைகளை கட்டுப்படுத்தும் வகையில் யானை வேலிகளை அமைத்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பனிக்கன்குளம்,மாங்குளம், கற்குவாரி கிழவன் குளம் ஆகிய பகுதிகளில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

குறிப்பாக, யானைகளின் தொல்லை காரணமாகவே பனிக்கன்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீட்டுத்திட்டத்தில் மக்கள் குடியேறி வாழ முடியாதுள்ளது என்றும் வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பனிக்கன்குளத்தின் கீழ் உள்ள வயல் நிலங்கள் மற்றும் கிழவன்குளம் ஆகிய பகுதிகளில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுவதாக பிரதேச விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பனிக்கன்குளம், கிழவன்குளம், கற்குவாறி போன்ற பகுதிகளில் தமது வாழ்வாதாரச் செய்கைகளை மேற்கொண்டு வாழக்கூடிய வகையில் யானை வேலிகளை அமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (9-315)

# கௌதாரி முனையில் மண் அகழ்வதற்கான தடை நீடிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி கௌதாரி முனைப்பகுதியில் மணல் அகழ்வதற்கான தடை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி வரையும் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட கௌதாரி முனைப் பகுதியில் இயற்கை வளமான மணல் தொடர்ந்தும் முறையற்ற விதத்தில் அகழ்வது தொடர்பாக பிரதேச மக்கள் பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடுகளைத் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையிலும் மணல் அகழ்வு தொடர்ந்த நிலையில் கடந்த மாத முற்பகுதியில் பூநகரி பொலிஸ் நிலையம் முன்பாக பொது மக்களால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்ததையடுத்து. இரு தரப்புக்களிடையே ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் பூநகரிப் பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்த நிலையில் குறித்த மணல் அகழ்விற்கு நேற்று முன்தினம் வரை தடைவிதிக்கப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான் ரீ.சரவணராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக இளம் சட்டத்தரணிகளான சுப்பிரமணியம் சிவசூரியா, சரண்யா தாசுதன், நவரத்தினம் பிருந்தா, கோகுலதீபன் தர்சா, ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

இரு தரப்பு வாதங்களையும் கருத்தில் எடுத்த மன்று பூநகரி கௌதாரி முனைப்பகுதியில் மணல் அகழ்வதற்கான தடையினை எதிர்வரும் செப்டெம்பர் 3.ஆம் திகதி வரையும் மேலும் நீடித்துள்ளது. (9-315)

# பணிக்கு இடையூறு ஏற்படுத்தியதாக முறைப்பாடு

(நெளுக்குளம்)

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை உத்தியோகத்தர்களின் பணிக்கு இடையூறு ஏற்படுத்தியதாகவும், பெண்கள் வேலை புரியும் இடத்தில் தகாத வார்த்தைப் பிரயோகங்களை பாவித்ததாகவும் கூறி கடந்த திங்கட்கிழமை வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் கட்டட அனுமதிக்காக நபர் ஒருவர் கொடுத்த வரைபடம் தவறாக இருந்ததால் அனுமதி கொடுப்பதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனினும் கடந்த திங்கட்கிழமை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதென பிரதேச சபையினரால் தொலைபேசியில் அழைக்கப்பட்ட போதே குறித்த நபர் இவ்வாறாக நடந்து கொண்டதாக தெரிவித்து வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உத்தி. யோகத்தர்களினால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9-299)

# பனை வெல்ல உற்பத்தி நிலையம் பளையில் திறந்து வைப்பு



(அக்கராயன்)


பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரின் வளர்ச்சிக்காகவும், அங்கத்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கோடும் நவீன முறையிலான பனை வெல்ல உற்பத்தியை மேற்கொள்ளும் முகமாக 14 மில்லியன் பெறுமதியான நவீன வசதிகள் கொண்ட இயந்திரப் பொறிகள் மற்றும் அதற்கான கட்டடமும் பாராளு மன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரனின் முயற்சியில் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினருடன் வடக்கு அபிவிருத்தி மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் சிவஞானசோதியும் மாவட்ட,பிரதேச செயலக திட்டமிடல் அதிகாரிகளும் பிரதேச சபையின் உறுப்பினர்களும், பனை.தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க முகாமையாளர்கள், பணியாளர்கள், உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-350)




# காஷ்மீர் விவகாரத்தில் எந்தளவிற்கும் செல்வோம்

## பாக்.இராணுவத்தளபதி திட்டவட்டம்




(காஷ்மீர்)
காஷ்மீர் விவகாரத்தில் எந்த ளவிற்கு செல்வதற்கும் தயார் என பாகிஸ்தானின் இராணுவத் தளபதி ஜாவெட் பஜ்வா தெரிவித்தார்.

காஷ்மீரில் இந்தியா மேற்கொண்டுள்ள மாற்றங்களை முறியடிப்பதற்காக எந்தளவிற்கும் செல்வோம் எனத் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மக்களின் போராட்டத்திற்கு இறுதி வரை பாகிஸ்தான் இராணுவம் ஆதரவளிக்கும் எனவும் எங்களுக்குள்ள கடப்பாட்டை நிறைவேற்றுவதற்காக நாங்கள் தயாராக வுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் காஷ்மீரிற்கான விசேட அந்தஸ்தை நீக்கும் இந்தியாவின் நடவடிக்கையை கண்டித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# காஷ்மீர் மறுசீரமைப்பு விவகாரம்; சர்வதேச உறவில் பாதிப்பை ஏற்படுத்தாது

## இந்தியத் தூதுவர் உறுதி



(காஷ்மீர்)
காஷ்மீர் மறுசீரமைப்பு விவகாரம் பிற நாடுகளுடனான உறவை பாதிக்காது என அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் ஹர்ஷவர்தன் சிரிங்லா தெரிவித்தார்.

பொது நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "காஷ்மீர் மாநிலம் மறுசீரமைக்கப்பட்ட பிரச்சினை, இந்தியாவின் உள் விவகாரம். நல்ல நிர்வாகத்தை நோக்கமாக கொண்ட நிர்வாக ரீதியான முடிவு.

இதன் காரணமாக, எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கோ, சர்வதேச எல்லைக்கோ எந்த பாதிப்பும் ஏற்படாது.

பிற நாடுகளுடனான உறவிலும் இந்த விவகாரம் எவ்வித பாதிப்புக்களையும் ஏற்படுத்தாது.

இந்தியாவின் பிற பகுதி மக்களுக்குக் கிடைத்து வரும் சமூக, பொருளாதார திட்டங்களின் பலன்கள், காஷ்மீர் மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம்" என மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ)

# இந்தியா தண்ணீர்ப் பஞ்சத்தில் தவிக்கும்

## அமெரிக்க நிறுவனம் அதிர்ச்சித் தகவல்



(வோஷிங்டன்)
அமெரிக்காவைச் சேர்ந்த உலக தண்ணீர் ஆய்வு நிறுவனம் ஒன்று உலக அளவில் நடத்திய ஆய்வில் இந்தியா தண்ணீர்ப்பஞ்சத்தில் தவிக்கும் என அதிர்ச்சித் தகவலை தெரிவித்துள்ளது.

சென்னை மாநகரம் கடந்த சில மாதங்களாக தண்ணீர்ப் பற்றாக்குறையை அனுபவ பூர்வமாக உணர்ந்து வருகிறது.

தண்ணீர்ப் பற்றாக்குறை பற்றி அமெரிக்காவைச் சேர்ந்த உலக தண்ணீர் ஆய்வு நிறுவனம் ஒன்று உலக அளவில் ஆய்வு நடத்தி வந்தது. தற்போது அந்த நிறுவனம் ஒரு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.

அதாவது, கட்டார், இஸ்ரேல், லெபனான், ஈரான், ஜோர்தான், லிபியா, குவைத், சவுதி அரேபியா, எரித்திரியா, சன் மரினோ, பக்ரேய்ன், ஐக்கிய அரபு அமீரகம் (யூ.ஏ.இ), இந்தியா, பாகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், ஓமான், போஸ்ட்வானா ஆகிய 17 நாடுகள் (அதாவது உலக மக்கள் தொகையில் கால் பகுதி) கடுமையான தண்ணீர்ப் பஞ்சத்தை சந்தித்து வருவதாக ஒரு பட்டியலை வெளியிட்டு உள்ளது. இந்தப் பட்டியலில் இந்தியா 13 ஆவது இடத்தில் உள்ளது. இந்த நாடுகள் விவசாயம், தொழிற்சாலை மற்றும் நகராட்சி அமைப்புகளுக்கு மட்டும் 80 சதவீத நிலத்தடி நீரையும் இதர நீர் ஆதாரங்களையும் பயன்படுத்தி வருகின்றன.

இந்த நிலை இப்படியே தொடர்ந்தால் ஒரு நாள் குடிக்க ஒரு சொட்டு நீர் கூட கிடைக்காத நிலை வந்துவிடும் என அந்த ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது. (ஜ)

# தொடரும் கனமழையால் சிறையில் புகுந்த வெள்ளம்



(மகாராஷ்டிரா)
கடந்த சில நாட்களாக மகாராஷ்டிரா மாநிலத்தில் கனமழை பெய்து வருகிறது. பெரும்பாலான நகரங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் மேற்குப் பகுதியில் உள்ள சாங்லி மாவட்டத்தின் சிறையில் நேற்று முன் தினம் வெள்ளநீர் புகுந்துள்ளது.

இதனால் கைதிகள் அனைவரும் முதல் தளத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சிறைத்துறை கூடுதல் இயக்குநர் சுனில் ராமானந்த் தெரிவிக்கையில், "தரைத் தளத்தில் முழங்கால் வரை வெள்ள நீர் புகுந்துள்ளது. இதனால் கைதிகள் அனைவரும் முதல் தளத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர். கைதிகள் எவரும் இங்கிருந்து ஏனைய சிறைக்கு மாற்றப்படவில்லை" எனத் தெரிவித்தார்.

புனே பிராந்தியத்தில் (புனே, சதாரா, கோலாபூர், சாங்லி மாவட்டங்கள் உட்பட) சுமார் ஒரு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் உள்ளனர். ஆனால் சாங்லி மற்றும் கோலாப்பூர் மாவட்டங்களில் நிலைமை மோசமாக உள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் சாங்லி-கோலாப்பூர் மற்றும் மும்பை - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையிலும் பயணம் செய்வதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளனர். (ஜ)

# சந்தேக நபா... வீதியால் கொ...

## அமெரிக்...



(வோஷிங்டன்)
அமெரிக்காவின் டெக்சாஸில் கறுப்பினத்தை சேர்ந்த சந்தேகநபர் ஒருவரின் கைகளைக் கட்டி வீதி வழியாக பொலிஸார் அழைத்துச் சென்ற சம்பவத்திற்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளதை தொடர்ந்து டெக்சாஸ் பொலிஸார் தலைமை அதிகாரி மன்னிப்புக் கோரியுள்ளார்.

டெக்சாஸின் ஹவுஸ்டனில் உள்ள

# நாடாளுமன்றி... பெண் உறுப்பின...



(நைரோபி)
கென்யாவில் குழந்தையுடன் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்த பெண் உறுப்பினர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டமை பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஜுலைக்கா ஹசன் என்ற பெண் நாடாளுமன்ற உறுப்பினர் தனது ஐந்து மாத கைக்குழந்தையுடன் நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்றுள்ளார்.

ஜுலைக்கா ஹசன் தனது

# பயங்கரவாதி...

(இஸ்லாமாபாத்)
மும்பைத் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்ட பயங்கரவாதி ஹபீஸ் சயீத்தை பாகிஸ்தான் அரசு நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளது.

மும்பையில் 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி பயங்கரவாத தாக்குதல் நடைபெற்றது. இந்தத் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர் பயங்கரவாதி ஹபீஸ் சயீத். இவர் பாகிஸ்தானில் ஜமாத் உத்தவா என்ற அமைப்பின் தலைவராக செயற்பட்டு வருகிறார்.

அமெரிக்காவின் தொடர் அழுத்தத்துக்கு அடிபணிந்த பாகிஸ்தான் அரசு, பயங்கரவாத செயற்களுக்கு நிதி திரட்டியதாக ஹபீஸ் சயீத் மற்றும்



# வெளிநாடு

## பரின் கைகளைக்கட்டி காண்டு சென்ற பொலிஸார்

### ரிக்காவில் கடும் எதிர்ப்பு



கல்வெஸ்டன் என்ற இடத்தில் இடம் பெற்ற இந்த சம்பவம் குறித்த புகைப் படங்கள் சமூக ஊடகங்களில் வெளி யானதை தொடர்ந்தே கடும் எதிர்ப்ப லைகள் எழுந்துள்ளன.

டொனால்ட் நீலி என்ற சந்தேக நபரின் கைகளை பின்னால் சேர்த்து கட்டி இரு அதிகாரிகள் அவரை வீதி வழியால் கொண்டு செல்வதையும் அந்த அதிகாரிகள் குதிரைகளில் காணப்படுவதையும் புகைப்படங்கள் காண்பித்துள்ளன.

குறிப்பிட்ட புகைப்படம் அமெரிக்கா வில் அடிமைத்தனம் நிலவிய யுகத்தை நினைவுபடுத்துகின்றது என கருத்துக்களும் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இது 2019 1819 இல்லை என பலர் சமூக ஊடகங்களில் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

டெக்சாஸிலிருந்து ஜனநாயகக் கட்சி யின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் பெட்டோ ஓ ரூர்க்கே பொலிஸார் தங்கள் நடவடிக்கை களுக்காக பொறுப்புக்கூற வேண்டும் எனவும் நீதி வழங்கப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள் ளார். (ஜ)

## றிற்கு குழந்தையுடன் சென்ற பினர் வெளியேற்றப்பட்டார்



குழந்தையுடன் நாடாளுமன்றத்துக் குள் நுழைந்ததும் அவரது சக உறுப் பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்த துடன், இவரது செயல் வெட்கக்கே டானது எனவும் விமர்சித்திருந் தனர்.

இதனைத் தொடர்ந்து இதுகுறித்து கருத்து வெளியிட்ட சபாநாயகர், ஹசன் தனது குழந்தையுடன் அவையை விட்டு வெளியேற உத்தர விட்டார். எனினும், குழந்தையை விட்டுவிட்டு தனியே அவர் அவைக்கு திரும்பலாம் எனவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் 'நாடாளுமன்ற வளாகத்தில் குழந்தை பராமரிப்பு மையம் இருந்திருந்தால், எனது குழந்தையை அவைக்கு அழைத்து வந்திருக்க மாட்டேன்.

நாடாளுமன்றத்துக்கு அதிக பெண் உறுப்பினர்கள் வரவேண்டுமென்றால் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டும்' என ஜுலைக்கா இதன்போது குறிப்பிட்டி ருந்தார்.

ஜுலைக்கா ஹசன் வெளியேற்றப் பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவை யில் இருந்து வெளிநடப்பு செய்திருந் ததாக கென்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கென்ய நாடாளுமன்ற விதிக ளின்படி, அந்நியர்கள் அதன் கட்டட த்துக்குள் நுழைவதற்கு அனுமதி கிடை யாது. அந்நியர் என்ற பட்டியலில் குழந்தைகளும் அடக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

## தி ஹபீஸ் சயீத் விடுதலை



அவரது அமைப்பைச் சேர்ந்த மேலும் 12 பேரை கடந்த 17 ஆம் திகதி கைது செய்தது.

பயங்கரவாதி ஹபீஸ் சயீத் மற்றும் அவரது கூட்டாளிகள் 12 பேரின் நீதிமன்ற காவலை மேலும் 14 நாட்களுக்கு நீட்டித்து உத்தவிட்ட நீதிபதி, ஓகஸ்ட் 7 ஆம் திகதிக்குள் ஹபீஸ் சயீத் மீதான முழுமையான குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யு மாறு அறிவுறுத்தினார்.

இந்நிலையில், பாகிஸ்தான் சிறை யில் இருந்த பயங்கரவாதி ஹபீஸ் சயீத் விடுதலை செய்யப்பட்டு உள்ளார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜம்மு-காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை இந்தியா நீக்கிய சில நாட்களில் பாகிஸ்தான் இந்த நட வடிக்கையை எடுத்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஜ)

## ஐ.எஸ். பயங்கரவாதிகள் மீள வலுவடைந்துள்ளனர்

### பாதுகாப்பு கண்காணிப்புப் பிரிவு எச்சரிக்கை



(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஐ.எஸ்.பயங் கரவாதிகள் மீண்டும் வலுவடை ந்து வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்க பாதுகாப்புத் துறையின் கண் காணிப்புப் பிரிவு இந்த எச்ச ரிக்கையை விடுத்துள்ளது.

சிரியாவிலிருந்து அமெரிக்கப் படையினர் வெளியேறி வரு வதை சாதகமாகப் பயன்படுத்தி ஐ.எஸ்.பயங்கரவாதிகள் மீண் டும் தலையெடுத்து வருவதாக இதன்போது எச்சரிக்கை விடு க்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில், 'சிரியா விலும், ஈராக்கிலும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் அமைத்திருந்த 'இஸ்லாமிய சாம்ராஜ்யம்' வீழ் ச்சியடைந்திருக்கலாம்.

அமெரிக்கா தலைமை யிலான சர்வதேச படைகளின் உதவியுடன் ஈராக் இராணு வமும் சிரிய இராணுவமும் அவர்களைத் தோற்கடித்து ள்ளன.

எனினும், ஈராக்கில் தங்க ளது பயங்கரவாதத் தாக்குதல் நடத்தும் திறனை ஐ.எஸ். பயங் கரவாதிகள் அதிகரித்து வரு கின்றனர். சிரியாவிலும் அவர் களது பலம் அதிகரித்து வருகிறது.

அமெரிக்கப் படைகள் சிரி யாவிலிருந்து வெளியேறி வரு வதால் உள்ளூர் இராணுவத் தின் பலம் குறைந்து வருகிறது. இதை சாதகமாகப் பயன்படுத்தி ஐ.எஸ். பயங்கரவாதிகள் மீண் டும் தலையெடுத்து வருகின் றனர்.

ஈராக் மற்றும் சிரியப் படை யினரால் நீண்டகால இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.

மேலும், பல முனைத் தாக் குதல்களை நடத்தும் திறனோ, தாங்கள் கைப்பற்றிய பகுதி களைத் தொடர்ந்து தக்க வைத் துக் கொள்ளும் சக்தியோ அவர் களுக்குக் கிடையாது' என தெரி விக்கப்பட்டுள்ளது. (ஜ)

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எனது வெற்றியை தடுக்க கூகுள் சதி

### அமெ.ஜனாதிபதி ட்ரம்ப் குற்றச்சாட்டு




(வோஷிங்டன்)

ஜனாதிபதித் தேர்தலில் தனது வெற்றியை தடுக்க கூகுள் திட்ட மிட்டு வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டினார்.

அமெரிக்காவைத் தலைமை யிடமாகக் கொண்டு இயங்கும் கூகுள் நிறுவனம் பழைமை வாதத்துக்கு எதிரான நிலைப் ப்பாட்டைக் கொண்டிருப்பதாக ட்ரம்ப் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக் களை முன்வைத்து வருகின்றார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர் தலின் போது கூகுள் நிறுவனம் தனக்கு எதிராகவும் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளி ண்டனுக்கு ஆதரவாகவும் செயற் பட்டதாகவும் அவர் குற்றம் சுமத் தியிருந்தார்.

இந் நிலையில், கூகுள் நிறு வனத்திலிருந்து கடந்த ஆண்டு பணிநீக்கம் செய்யப்பட்ட கெவின் கெர்னெகீ அண்மையில் தனி யார் தொலைக்காட்சி ஒன்றுக்கு கருத்து வெளியிட்டிருந்தார்.

இதன்போது அவர், '2016 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது கூகுள் நிறுவனம் ட்ரம்பு க்கு எதிரான நிலைப்பாட்டுடன் செயற்பட்டது. இதுகுறித்து கேள்வி எழுப்பியதாலேயே நான் பணி நீக்கம் செய்யப்பட்டேன்.

அடுத்த ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலிலும் ட்ரம்பின் பிரசாரத்தை பலவீனப்படுத்த கூகுள் திட்டமிட்டுள்ளது' எனக் குறிப்பிட்டிருந்தார்.

கெவின் கெர்னெகீயின் குறி த்து ட்ரம்பின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இதை யடுத்து அவர் குறித்த நேர்கா ணலை டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்து, 'அனைத்தும் மிகவும் சட்டவிரோதமானது. நாங்கள் கூகுளை உன்னிப்பாகக் கவ னித்து வருகிறோம்' என குறிப் பிட்டார்.

'கடந்த மார்ச் மாதம் வெள்ளை மாளிகைக்கு வந்த சுந்தர் பிச்சை, என்னை மிகவும் பிடிக்கும் என்று கூறியதோடு, எனது நிர்வாகத்தை புகழ்ந்து பேசினார்.

அமெரிக்க இராணுவத் துக்கே கடமைப்பட்டிருப்பதாக வும் சீன இராணுவத்துக்கு உத வுவதாக கூறுவது முற்றிலும் பொய் என்றும் அவர் விளக்க மளித்தார்.

அத்துடன் 2016ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஹிலா ரிக்கு அவர்கள் உதவவில்லை என்றும், அடுத்த ஆண்டு நடை பெறும் தேர்தலை சட்டவிரோத மாக முறியடிக்க திட்டமிட வில்லை என்றும் என்னிடம் உறுதியளித்தார். கெவின் கெர் னெகீயை சந்திக்கும் வரையில் அதுதான் உண்மை என்றும் நினைத்திருந்தேன்.

அவர் கூறித்தான் கடந்த தேர் தலில் ஹிலாரி குறித்த எதிர் மறையான தகவல்களை பின் தள்ளிவிட்டு, என்னை பற்றிய எதிர்மறையான தகவல்களை கூகுள் முன்னிலைப்படுத்தியது தெரியவந்தது.

இதேபோல் 2020 தேர்த லிலும் எனது வெற்றியை தடுக்க கூகுள் திட்டமிட்டிருக்கிறது. இது சட்டப்படி குற்றம் என்பதால் கூகுள் நிறுவனத்தின் மீது நட வடிக்கை எடுக்கப்படும்' என மேலும் எச்சரிக்கை விடுத்தார். (ஜ)



## குண்டுத் தாக்குதலின் பின்னர்

# பதவியைத் தந்து வாயை மூட வைக்க மைத்திரி முயற்சி

## பொன்சேகா நிராகரிப்பு

(கொழும்பு)

**அண்மையில் தனக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியையும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியையும் வழங்க, பாதுகாப்பு அமைச்சராகவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வந்தார் என, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி.தெரிவித்தார்.**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னிலையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன சாட்சியமளித்திருந்தார்.

அவரிடம் சாட்சியம் பெறுவதற்காக கேள்விகளை எழுப்பிய போதே, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அமைச்சரவை அந்தஸ்துடன் அமைச்சர் பதவியையும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியையும் வழங்குவதாக எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சரே அந்த அழைப்பை அனுப்பியிருந்தார். நான் அதனை நிராகரித்து விட்டேன்.

ஏனென்றால், அந்தப் பதவியை வழங்கும் நோக்கம், எனது வாயை மூட வைப்பதேயாகும்.

இப்போது நாட்டில் நிலவும் நிலைமையைக் கருத்தில்



கொண்டு, வாயை மூடிக் கொள்ள முடியாது" என்றும் பொன்சேகா தெரிவித்தார். (இ-7)

# உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்ட வழக்கு இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் விடுவிப்பு



(கொழும்பு)

ரிவிர இதழின் ஆசிரியராக இருந்த உபாலி தென்னக்கோன் மற்றும் அவரது மனைவி மீது தாக்குதல் நடத்தப்பட்ட வழக்கில் இருந்து, மேஜர் பிரபாத் புலத்வத்த உள்ளிட்ட 6 இராணுவப் புலனாய்வாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விலக்கிக் கொள்வதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது.

ரிவிர இதழின் ஆசிரியராக இருந்த உபாலி தென்னக்கோன் மற்றும் அவரது மனைவி மீது தாக்குதல் நடத்தப்பட்டது தொடர்பான வழக்கு கம்பஹா மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கில் திரிப்பொலி இரகசியப் புலனாய்வு முகாமைச் சேர்ந்த மேஜர் பிரபாத் புலத்வத்த உள்ளிட்ட 8 புலனாய்வு அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, முன்னிலையான குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள், உபாலி தென்னக்கோன் மீதான தாக்குதல் வழக்கில் மேஜர் புலத்வத்த உள்ளிட்ட 6 இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் திட்டம் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இல்லை என நீதிபதியிடம் தெரிவித்தனர்.

போதிய ஆதாரங்கள் இல்லாமையால் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போவதில்லை என்றும் பிரேமானந்த உடலகம, லலித் ராஜபக்ஷ ஆகிய இரண்டு புலனாய்வு அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்படும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இவர்களுக்கு எதிராகக் குற்றவியல் சட்டத்தின் 317 ஆவது பிரிவின் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்படவுள்ளது.

அதேவேளை தற்போது பிணையிலுள்ள மேஜர் பிரபாத் புலத்வத்த உள்ளிட்ட 6 அதிகாரிகளையும் வழக்கில் இருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் கோரினர்.

இதையடுத்து, மேஜர் பிரபாத் புலத்வத்த, பிரேமச்சந்திர பெரேரா, பிரபாத் துமிந்த வீரரத்ன, லசந்த விமலவீர, நிசாந்த ஜெயதிலக, நிசாந்த குமார ஆகிய புலனாய்வு அதிகாரிகளை எதிர்வரும் 23 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டது. (இ-7)

# சிறைச்சாலை அதிகாரிகள் ஐவருக்கு திடீர் இடமாற்றம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலை பயிற்சிப் பாடசாலை, வெலிக்கடை தொழில்நுட்பப் பிரிவு, காலி, தும்பர, வாரியபொல ஆகிய 5 சிறைச்சாலைகள் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.

குறித்த அதிகாரிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில், சிறைச்சாலைகள் தலைமையகம், வேறு சிறைச்சாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனரென சிறைச்சாலைகள் ஆணையாளர் பந்துல ஜெயசிங்க தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நேர்காணல்

எனக்குத் தெரிந்த ஒருவர் பத்திரிகை நிருபர். அடிக்கடி பல பேரை சந்தித்து பத்திரிகைகளுக்காகப் பேட்டி எடுப்பார். இந்தப் பேட்டி என்பது தமிழிலே நேர்காணல் என்பதாகும். இது ஒரு கலை. கேள்வி கேட்கின்ற வேலை தானே! அது ஒரு பெரிய காரியமா? என்று நினைப்பது தப்பு.

ஒரு சர்வாதிகார நாட்டிலே கேள்வி கேட்பது கஷ்டம். ஜனநாயக நாட்டிலே பதில் சொல்வது கஷ்டம் என்று சொல்வது வழக்கம்.

எந்த நாடாக இருந்தாலும் ஒரு பத்திரிகைப் பேட்டிக்காக கேள்வி கேட்பதற்கு மிகவும் சாமர்த்தியம் வேண்டும்.

ஒரு பத்திரிகைக்காக ஒருத்தரை பேட்டி காணப் போகும் போது என்னென்ன விடயத்தை ஞாபகத்திலே வைக்க வேண் டும் என்பதனை பற்றி ஒரு பத்திரிகையிலே சில குறிப்புக் களைப் பார்த்தேன். அதைத் தான் இப்போது இங்கே சொல்லப் போகிறேன்.

சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்ட ஒரு பெரியவரை பேட்டி காணுகிறீங்கள். உங்கள் பழைய அனுபவத்தை சொல்லு ங்கள் என்று கேட்கிறீர்கள்.

நாற்பது வருடத்திற்கு முன்னாடி நான் கொல்கத்தாவிலே இருந்த போது என்று ஆரம்பிக்கின்றார். உடனே நீங்கள் குறுக்கே பாய்ந்து என்ன திகதி? என்ன கிழமை? என்ன நேரம்? என்றெல்லாம் துளைத்து எடுத்துக் கொண்டிருக்கக்கூடாது. அவர் நல்ல மூடிலே சொல்லி முடிக் கட்டும்.

கடைசியிலே வேண்டுமென்றால் அவரிடமோ அல்லது மற்றவர்களிடமோ திகதியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு பெரிய பிரமுகரை பேட்டி காணப் போகிறீர்கள். நீங்கள் போகின்ற சமயத்திலே அந்த ஆள் தன்னுடைய பேரப்பிள்ளைகளோடு கிட்டிப்புள்ளு விளையாடிக் கொண்டிருக்கிறார்.

இல்லையென்றால் இடுப்பிலே ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு தோட்டத்துச் செடிக்கு தண்ணீர் ஊற்றிக் கொண் டிருக்கின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அதைப் பார்த்து நீங்கள் ஆச்சரியப்படுவதாகக் காட்டிக் கொள்ளாதீர்கள். இயல்பாக நடந்து கொள்ளுங்கள்.

ஒரு விடயத்தை உங்களிடம் சொன்னதன் பின் இதை உங்கள் பத்திரிகையிலே போட வேண்டாம் என்று சொன்னால் அதைப் போடாதீர்கள்.

அவர் சொல்கிற விடயம் அல்லது பதில் உங்களுக்குப் புரியவில்லை என்றால் அதை மறுபடியும் கேட்டு விளங்கிக் கொள்வதிலே ஒன்றும் தப்பில்லை.

நீங்கள் இவரை நோக்கி கேட்டுக் கொண்டிருக்கின்ற போது அதற்கு அவர் உங்களுக்குப் பதில் சொல்லலாமே, அவர் உங்களை கேள்வி கேட்க ஆரம்பித்து விடுகின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் உடனே எச்சரிக்கை ஆகிவிட வேண்டும். ஏனென்றால் அவர் உங்களை திசை திருப்பி எங்கேயாவது அழைத்துக் கொண்டு போய்விடுவார். ஒரு குறிப்பிட்ட பிரச்சினையிலே இது தான் என்னுடைய கருத்து என்று ஒருவர் சொல்கிறார். அதே பிரச்சினையைப் பற்றி சிலபேர் இப்படிச் சொல்கிறார்களே என்று சொல்லுங்கள்..

அவரைத் தூண்டிவிட்டது போலும் இருக்கும். அந்த விடயத்திலே உங்களுக்கு எதுவும் பொறுப்பில்லை என்று காட்டிய மாதிரியும் இருக்கும். உங்களுக்கு நன்றாகத் தெரிந்த ஒரு விடயத்தையே ஒருவர் உங்களிடம் விளக்கிக் கொண்டிருக்கிறார்.

அதுதான் எனக்குத் தெரியுமே என்பது போல் பேசாதீர்கள். உங்களுக்கு எதுவுமே தெரியாது என்பது போல் இருந்து கொண்டு கேள்வி கேளுங்கள்.

இந்த விடயத்தை இன்னும் கொஞ்சம் விபரமாகச் சொல்ல முடியுமா? என்று கேளுங்கள். அதனாலே நீங்கள் ஒன்றும் குறைந்து போக மாட்டீர்கள்.

ஒரு பேட்டி எடுக்கும் போது அது தொடர்பான உங்கள் அனுபவத்தையும் இடையே சொல்வது நல்லதுதான். இருந்தாலும் கேள்வி கேட்கின்ற நீங்களே அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. கொஞ்சம் கடினமான கேள்வியாக இருந்தால் ஒரு தடவைக்கு இரண்டு தடவை கேட்கலாம். இரண்டாவது தடவை கேட்கின்ற போது அதே கேள்வியைக் கொஞ்சம் வேறு விதமாகக் கேட்கலாம்.

சிலபேர் பதில் சொல்கின்றபோது சில தர்மசங்கடமான விடயங்களைப் பற்றி பேச வேண்டி இருக்கும். அவரே தயங்கி யோசனை செய்து பதில் சொல்லிக் கொண்டிருப்பார். அந்தச் சமயத்திலே குறுக்கே பேசாதீர்கள். அவர் சொல்லி முடிக்கும் வரை இருங்கள். ஏனென்றால் சில சுவாரஸ்யமான விடங்கள் கிடைத்தாலும் கிடைக்கும். இதெல்லாம் பேட்டி காண்கிறவர்களுக்கு அனுபவசாலிகள் சொல்கின்ற யோசனைகள். இவற்றைவிட சொந்த அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது தான் அதிகம்.

ஒரு பெரியவரை ஒரு பத்திரிகை நிருபர் பேட்டி கண்டார். கடைசியிலே பத்திரிகையிலே போடும் போது அந்தப் பெரியவர் அவர் வீட்டிலே மனைவிக்கு துணி எல்லாம் துவைத்துக் கொடுக்கிறார் என்று போட்டு விட்டார். உடனே அவர் அந்த நிருபரை அழைத்துத் திட்டினார். ஏன் சேர் நான் உண்மையைத் தானே எழுதினேன். அதற்காக இப்படித் திட்டுகிறீர்களே என்றார் நிருபர்.

உண்மையை எழுதியதற்காக நான் உன்னைத் திட்டவில்லை. என்னுடைய குடும்ப இரகசியத்தை வெளியிலே விட்டு விட்டாயே அதற்காகத்தான் திட்டினேன் என்றார் அந்தப் பெரியவர்.

# சௌபாக்கியம் பெருகச் செய்யும் வரலட்சுமி விரதம் இன்று



ஆதி அந்தம் இல்லாத சனாதன தர்மம் எனச் சிறப்பிக்கப்படுகின்ற இந்து மதம் தனிலே வழிபாட்டு முறைகளில் இந்து மக்களால் தவறாது கடைப்பிடிக்கப்படுபவை விரதங்கள் ஆகும்.

விரதம் என்பது எம் மனதை ஒருநிலைப் படுத்தி இறைவன் திருவருளை பெற்றுக் கொள்வதற்கு நாம் இயற்றும் ஓர் வழிபாட்டு முறையாகும்.

இத்தகு விரதங்கள் பல எம் இந்து மதத்தவரால் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஒவ்வொரு க்டவுளுக்கு என்று பல விரதங்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை அனைத்தும் இறைவன் திருவருளை பெறுதல் எனும் தத்துவத்தையே உணர்த்தி நிற்கின்றன.

இத்தகு விரதங்களில் உயர்வானதும், சிறப் புக்குரியதுமான விரதம் வரலட்சுமி விரதமாகும். அந்த அருமையான விரதநாள் இன்றாகும்.

ஆம், வரலட்சுமி விரதம் ஆவணி மாதத்தில் வரும் பௌர்ணமிக்கு முன்பு வரும் வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படுகின்றது. மேலும் இவ்விரதம் செல்வபோகங்களைப் பெறுவதற்கும், புத்திரபாக்கியம் உண்டாவதற்கும், கணவனுக்கு நீண்ட ஆயுள் கிடைக்கப் பெறுவதற்கும், திருமணம் ஆன ஆண், பெண்களின் திருமாங்கல்யம் நிலைத்திருப்பதற்கும், திருமணமாகாதோர்க்கு நல்ல வாழ்க்கைத் துணை கிடைப்பதற்கும், வாழ்வில் மகிழ்ச்சி பொங்குவதற்கும் என பல்வேறு நலன்களை பெறும் விதமாக இவ் விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அவ்வகையில் திருமகளாம் மகாலட்சுமியைக் குறித்து இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

**வரலட்சுமி விரதத்தின் சிறப்புரைக்கும் கதையாடல்**

நிலவுலகில் பத்ரசரவஸ் எனும் மன்னன் மகத நாட்டினை ஆட்சி செய்து வந்தான். அவன் மனைவி சுசந்திரா. அவள் தான் மகாராணி என்பதாலும் செல்வ மமதையாலும் மகா லட்சுமியை அவமதித்து வந்தாள். இதனால் காலப் போக்கில் அனைத்து செல்வங்களையும் இழந்து துன்பத்தால் வருந்தினாள்.

இந்நிலையில் அவள் மகள் சாருமதி. அவள் தெய்வ நம்பிக்கை கொண்டவள். மகாலட்சுமியின் கிருபையினால் எல்லாச் செல்வங்களும் பெற்று நல் துணைவனையும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தாள்.. ஒருமுறை மகாலட்சுமி சாருமதியின் கனவில் தோன்றி வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கும் வழிமுறையினை எடுத்துரைத்து அதை அனுஷ்டிக்கும் படியும் தாயிடம் இதுபற்றிக் கூறி அவளையும் இவ் விரதத்தை அனுஷ்டிக்கச் செய்யும்படியும் எடுத்துரைத்து மறைந்தாள்.

சாருமதியும் தாயிடம் சென்று வரலட்சுமி விரதத்தை அனுஷ்டிக்கும் வழிமுறை கூறினாள். அதன்படி சுசந்திராவும் தன் தவறை உணர்ந்து வரலட்சுமி விரதம் கடைப்பிடித்தாள்.

இதன் காரணமாக இழந்த செல்வங்கள் எல்லாம் மீண்டும் கிடைக்கப்பெற்று செல்வ வாழ்வினை பெற்றாள் என்கிறது புராணக் கதையாடல்.

**வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கும் முறை**

இவ் விரதம் அதிகளவில் விஷ்ணு ஆலயங்களில் நடைபெறும். மேலும் அம்பாள் ஆலயங்களிலும் அனுஷ்டிக்கப்படும். ஆலயங்களில் திருவிளக்குப் பூசையுடன் விரதத்தினை உரிய நியதிப்படி அனுஷ்டிக்கலாம்.

எனினும் ஆலயங்களுக்குச் சென்று விரதத்தை அனுஷ்டிக்க முடி யாதவர்கள் தம் வீடுகளில் உரிய முறைப்படி இவ்விரதத்தினை கடைப்பிடிக்க முடியும். அதாவது இந்நாளில் வீட்டினைப் தூய்மைப் படுத்தி வீட்டு வாசலில் கோலம் இட்டு சுவாமி அறையில் கும் பம் வைத்து பூக்கள், பூமாலைகள் சாற்றி நைவேத்தியங்களை படையல் செய்து, திருவிளக்கேற்றி குங்கும அர்ச்சனை செய்வதுடன் மகா லட்சுமி அஸ்டோத்திரம் மகாலட்சுமி பாடல்களை உச்சரித்து நோன்புக் காப்பினை கையில் அணிந்து விரதத்தை நிறைவு செய்யலாம்.

**யாரெல்லாம் வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கலாம்**

இவ்விரதம் பெண்களுக்குரிய விரதமாகும். திருமணமாகிய சுமங்கலிப்பெண்கள் மற்றும் திருமணமாகாத கன்னிப் பெண்கள் என அனைவரும் அவசியம் கடைப் பிடிக்க வேண்டிய விரதம் இதுவாகும். ஏனெனில் திருமணமானவர்கள் தம் கணவனது நீண்ட ஆயுள் வேண்டியும் கன்னிப் பெண்கள் தமக்கு நல்ல துணைவன் அமைய வேண்டும் எனவும் இவ்விரதத் தைக் கடைப் பிடிப்பது அவசியமாகும்.

அதுபோலவே ஆண்கள் விரதம் அனுஷ்டிக்க முடியாததாயினும் வரலட்சுமி நோன்புக் காப்பை அணிந்து கொள்வது உத்தமமாகும்.

ஏனெனில் வரலட்சுமியின் திருவருட் கடாட்சம் எம் அனைவருக்கும் கிடைக்கவேண்டியது அவசியமன்றோ? ஆக, ஆண்களும் விரதநாளன்று ஆலயம் சென்று வழிபாடியற்றலாம்.

**வரலட்சுமி தேவியின் திருவருள் பெறுவோம்**

ஆகவே இத்தகைய சிறப்புக்கள் கொண்டு விளங்குகின்ற இந்த வரலட்சுமி விரதத்தினை திருமணமாக பெண்கள், கன்னிப் பெண்கள் மற்றும் விரதம் அனுஷ்டிக்க விரும்புகிறவர்கள் என அனைவரும் உரிய முறைப்படி கடைப்பிடித்து பாற்கடல் அவதரித்து விஷ்ணுவின் இதயக் கமலத்தில் வீற்றிருக்கின்ற ஸ்ரீதேவியாம் மகாலட்சுமியின் திருவருள் துணைபெற்று சகல நலன்களையும் பெற்று இவ்வையகத்தில் இன்புற்று வாழ்வோமாக.

இரா.நிஷாந்தன்

## ஜெயந்தி தினமும் கௌரவிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

அருட்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷியின் 109 ஆவது ஜெயந்தி தினமும் ஞானாசிரியர் கௌரவிப்பு நிகழ்வும் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள அறிவுத் திருக் கோவிலில் மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி சி. முருகானந்தவேல் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-5)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அச்செழு மத்தி திருவருள்மிகு நாகதம்பிரான் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் இரவு 7 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (இ-7)




### நல்லதொரு தீர்வைத் தந்திடய்யா

ஆடிவருமயிலேறும் ஆணழகா முருகா
நம் அவலங்கள் அடியொடு மண்ணினிலே மறைய
கோடிமுறை யுனைப் பணிந்தோம் கோமகனே மருகா
கொண்டவள்ளி தெய்வானையுடனுறையும் மணவாளா
பாடியுனைப் பணிந்தோம் பாலகனே வேலவா
பக்தர்களின் குறை தீர்க்கும் பாங்கான நேசனே
நாடிவருவோர்க்கு நலமளிக்கும் நல்லூரா
நல்லதொரு தீர்வைத் தந்திடய்யா

க. நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

### காத்திடுவான் நல்லைக் குமரன்

கந்தக் கோட்டத்திலே
வள்ளி இடப்புறத்திலும்
தேவயானை வலப்புறத்திலும் அமர்ந்திருக்க
வண்ண மயில் மீது உலாவரும்
பார்வதியின் மைந்தனே
இன,மத பேதமின்றி
இடர்களை தீர்த்து வரும்
வேழ முகனின் தம்பியே
எம் உறவுகளை காத்திட
வேலவனே வருவாயா...

க. மலர்
சிறுவர் இல்லம், திருநெல்வேலி

### நல்லையின் நாயகனே வருக..

நல்லையின் நாயகனே நாற்றிசையும் ஆள்பவனே
தொல்லையில்லா வாழ்வினை பக்தர்களுக்கு
அருள்பவனே
தேவர்களுக்காக சூரனை வதம் செய்தவனே
வேண்டும் வரம் அருளும் சண்முகனே
தேவர்கள் சேனாதிபதியே போற்றி போற்றி

வேல் கொண்டு தீவினை அறுப்பவனே
வேதனைகள் நீக்கி வாழ அருள்பவனே
அழகிய வேலவனே ! ஐயனே வருக
அனைவர்க்கும் நல்வாழ்வு அருள எழுக..

ஜெயந்தி–அரியாலை

### பறக்கட்டும் உன் கொடி

நல்லை நகர் ஞானத்திரு முருகா
நானிலம் போற்றும் ஈசன் மருகா
பச்சைமயில் வாகனத்து வடிவேலா
பக்தர்தனைக் கவர்ந்தருளும் பாலகுமாரா
தேன்மதுரத் தீந்தமிழின் காவலனே
திக் கெட்டும் பறக்கட்டுமுன் கொடி

விஜியகண்ணன், யாழ்ப்பாணம்

### சந்தக் கவியில் நல்லைக் குமரன்!

சடைமே லுறை பிறையா னிறை
தரம் மேவிய புதல்வன்
விடைமேல் நிறை சிவனார் மறை
வியந் தேற்றிய முதல்வன்
படைவேல் விழி மடவா ளுமை
பகர்வான் மொழி மழலை
நடைபோட் டெமை நனியா ளமை
நல்லைக் கும ரோனே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்.
நவ. பாலகோபல்

# அரச காணியை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமான கேள்வி பதில்கள்

05

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**அத்துமீறிப் பிடித்துக் கொண்டிருக்கும் காணியை குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமாக பிரதேச செயலாளரால் அறிக்கை தயாரிக்கப்படும் போது அவர் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றி கேள்வி-பதில் 19 இல் கொடுக்கப்பட்டுள்ளது.**

விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தொழில் வருமானம், அவரின் காணிச் சொத்துக்கள் பற்றிய விபரம், விண்ணப்பிக்கப்படும் காணியின் விபரம் போன்றவை. அக்காணி அளக்கப்பட்டிருப்பின் வரைபட இலக்கமும் காணித்துண்டின் இலக்கமும், காணி அளக்கப்படவில்லையாயின் குறித்துரைக்கப்பட்ட அக்காணியின் எல்லைகள். காணியை அத்துமீறிப் பிடித்துக் கொண்ட திகதி.

காணியில் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைகள் (செய்யப்பட்டுள்ள பயிர் நிவாரண வேலைகளுடன் கூடிய பூரண விபரத்தைக் கொடுக்கவேண்டும்) என்ன காரணத்துக்காக காணி தேவைப்படுகிறது, நகர அபிவிருத்தி எல்லைப் பிரதேசத்துக்குள் காணி அமைந்திருப்பதாயின் அதன் சம்மதம், அதற்குரிய உள்ளூராட்சி சபையின் கருத்து, கிராமத்தின் அல்லது பிரதேசத்தின் தேவைகளுக்குப் போதுமான அளவு வேறு அரச காணிகள் உள்ளனவா, இக் காணி சுவீகரிக்கப்பட்ட வேறொரு காணியினுள்ளே இருக்கிறதா, எதிர்காலத்தில் அரசின் அல்லது உள்ளூராட்சி தாபனத்தின் அல்லது பொதுமக்களின் தேவைக்காக இக் காணி தேவைப்படுமா, காணியில் உள்ள மரங்களின் பூரண விபரமும் அவை சம்பந்தமான தீர்மானமும், காணியின் பெறுமானம் (விருத்தி செய்யப்பட்ட, விருத்தி செய்யப்படாத) காணியில் தொல்பொருள் ஆராச்சிப் பெறுமானமுள்ள ஏதேனும் உண்டா? ஆமெனில் அவ் ஆணையாளரின் கருத்து. விண்ணப்பதாரருக்கு காணிச் சலுகைக் குத்தகைக்கு வழங்குவதற்குத் துணையாயிருந்த விசேட காரணியாது. அத்துமீறிக் காணியைப் பிடித்துக் கொண்டமைபற்றி அறிவித்தல் செய்த திகதி, இந்த இடத்தைக் கொடுப்பதால் சூழலுக்கு கெடுதி ஏற்படுமா? அவ்வாறாயின் மத்திய சூழல் சம்பந்தப்பட்ட அதிகாரியின் கருத்து. இத்துடன் பிரதேச செயலாளரின் விதப்புரை போன்ற விபரங்கள் சேகரிக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டு குத்தகைக்கு வழங்கப்படும்.

**கேள்வி -20:-** அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வர்த்தக நடவடிக்கைக்காக அரச காணிக்கான நீண்டகால குத்தகை உரிமையை ஏலத்தில் பெற்றவர் அது சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடபடிகள் எவை?

**பதில்:-** அரச காணி தொடர்பான நடவடிக்கைக் கோவையில் கூறப்பட்டுள்ள சில விடயங்கள் இங்கு விபரிக்கப்படுகின்றன. ஏலத்தின்போது தெரிவு செய்யப்பட்ட குத்தகைக்காரர் ஒருவருடைய நேர்மையையும் குத்தகை நிபந்தனைகளை மதித்து நடத்தலுக்கு அவரிடமுள்ள ஆற்றலைப்பற்றியும் பிரதேச செயலாளர் திருப்தியடைய வேண்டும். பிரதேச செயலாளர் அவ்வாறு திருப்தியடையாவிட்டால் அவ் விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டு ஏலத்தை நடத்த பிரதேச செயலாளருக்கு முடியும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாமே குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் சமுகமளிக்க வேண்டும்.

தாமாக வரமுடியாதவிடத்து விதிக்கப்பட்ட முறையில் ஏற்கப்படும் பிரதிநிதி ஒருவரை அனுப்ப வேண்டும். ஏலம் நடைபெற முன்னர் பரிசீலனை செய்து பார்ப்பதற்காக அந்தப் பிரதிநிதி உரிய நியமனக் கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குத்தகைக்காரரும் தமது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் ஏலத்தின்போது தீர்மானிக்கப்பட்ட தொகையையும் முற்பணமாக முதலாம் ஆண்டின் குத்தகைப்பணத்தையும் பிரதேச செயலாளரிடம் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலே குறிப்பிட்டபடி தெரிவு செய்யப்பட்ட நபர் விதிக்கப்பட்ட முறையில் கருமமாற்றத் தவறின் அவருடைய தெரிவை செல்லுபடியற்றதாக்கி அவரால் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தையும் அரசுடைமையாக்க பிரதேச செயலாளருக்கு முடியும்.

ஒவ்வொரு குத்தகை முறியிலும் முன்னர் கூறியது போல் குத்தகை 30 ஆண்டுகளுக்கு மாத்திரமே செல்லுபடியாகும், ஒவ்வொரு துண்டுக்குமான வருடாந்தக் குத்தகைக் கட்டணம் அவ்வத்துண்டுகள் தொடர்பாக பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகைக் கட்டணமாகும். இந்தக் குத்தகைக் கட்டணம் ஒவ்வொரு ஐந்து வருடத்துக்கு ஒரு முறையும் பிரதேச செயலாளர் மூலம் திருத்தியமைக்கப்பட வேண்டும். (மீளாய்வு)

த்தை விட நூற்றுக்கு (50%) ஐம்பது வீதத்துக்கு விஞ்சிய தொகையை குத்தகைப் பணமாக விதித்தல் கூடாது.

பொதுவாக 5% அதிகரிப்பு. இந் நிபந்தனைகளுடன் காணியையும் அங்கிருக்கும் கட்டடங்களையும் பொறுத்தவரை கட்டவேண்டிய ஏதேனும் வரிப்பணம் வரி வேறு விலை மதித்தல் அல்லது செலவு இவை யாவும் குத்தகையாளரினால் செலுத்தப்பட வேண்டும்.

குத்தகைக்காரரினால் இக் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 2 வருடங்களுக்குள் பிரதேச செயலாளரினால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கும் விளக்கக் குறிப்புகளுக்கும் அமைவாகவும் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தினால் அனுமதிக்கப்பட்டதென பிரதேச செயலாளர் திருப்தியடையும் விதத்திலும் குறிப்பிட்ட தொகைக்கு

**காணி ஆணையாளர் நாயகத்தின் எழுத்துமூல அனுமதியை ஏற்கனவே பெற்றுக் கொண்டாலன்றி குத்தகைக்காரர் ஒரு குத்தகை தொடர்பாக தன் மீதிருக்கும் உரிமையை கைமாற்றல், பிரித்து வழங்கல், ஈடு வைத்தல், பரிசாக வழங்கல் அல்லது வேறொரு வகையில் கையுதிர்த்தலையோ, கொடுக்கல்-வாங்கல் செய்தலையோ செய்யக் கூடாது. அனுமதி பெறாது செய்யப்படும் அவ்வாறான எத்தகைய கையுதிர்த்தலும் வலுவற்றதாகும்.**

குறையாத பெறுமதி வாய்ந்த நிலையான கட்டடத்தை அந்தக் காணியில் கட்ட வேண்டும், பிரதேச செயலாளரின், உள்ளூராட்சி நிறுவனத்தின் அனுமதியை நேரகாலத்தோடு எழுத்து மூலம் பெற்றுக் கொண்

**ஒவ்வொரு குத்தகை முறியிலும் முன்னர் கூறியதுபோல் குத்தகை 30 ஆண்டுகளுக்கு மாத்திரமே செல்லுபடியாகும், ஒவ்வொரு துண்டுக்குமான வருடாந்தக் குத்தகைக் கட்டணம் அவ்வத்துண்டுகள் தொடர்பாக பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகைக் கட்டணமாகும். இந்தக் குத்தகைக் கட்டணம் ஒவ்வொரு ஐந்து வருடத்துக்கு ஒரு முறையும் பிரதேச செயலாளர் மூலம் திருத்தியமைக்கப்பட வேண்டும்.**

எனினும் பிரதேச செயலாளரினால் அத்தகைய எந்தத் திருத்தத்தினாலும் அதற்கு முந்திய ஐந்து வருடகால எல்லைக்குள் கட்டவேண்டிய குத்தகைப் பண

டாலன்றி குத்தகைக்காரரினால் இந்தக் காணியில் உள்ள கட்டடங்களில் புதிதாக சேர்த்தாலோ திருத் தியமைத்தாலோ எதனையும் கட்ட முடியாது.

குத்தகையாளரினால் குறிக்கப்பட்ட கருமத்துக்காக மட்டும் அந்தக் காணித்துண்டை பயன்படுத்த வேண்டும். அதற்கான எழுத்துமூல அங்கீகாரத்தை நேர காலத்தோடு பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக் கொண்டாலேயன்றி வேறு எந்த வேலைக்காகவும் அதனைப் பயன்படுத்தக் கூடாது.

**ஏலத்தின்போது தெரிவு செய்யப்பட்ட குத்தகைக்காரர் ஒருவருடைய நேர்மையையும் குத்தகை நிபந்தனைகளை மதித்து நடத்தலுக்கு அவரிடமுள்ள ஆற்றலைப்பற்றியும் பிரதேச செயலாளர் திருப்தியடைய வேண்டும். பிரதேச செயலாளர் அவ்வாறு திருப்தியடையாவிட்டால் அவ் விண்ணப்பத்தை நிராகரித்து விட்டு ஏலத்தை நடத்த பிரதேச செயலாளருக்கு முடியும்.**

(தொடரும்...)

# பெரமுனவின் மாநாட்டில் இரு முக்கிய விடயங்கள் அறிவிக்கப்படும் - பசில்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாநாட்டில் இரண்டு முக்கிய விடயங்கள் அறிவிக்கப்படும் என அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். முதலாவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ பொது ஜன பெரமுனவின் தலைவராக உத்தியோகபூர்வமாக பதவியேற்றுக்கொள்வார் என்றும் இரண்டாவதாக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்படும் என்றும் பசில் தெரிவித்தார். கட்சியின் தலைவர் நியமனத்தைத் தொடர்ந்து. அடுத்த 100 நாட்களுக்குள் நடைபெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை கட்சித் தலைவர் பரிந்துரைப்பார் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநாடு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் உத்தியோக பூர்வ நிகழ்வு என்பதால் சம்பந்தப்பட்ட நபர்கள் மட்டுமே அழைக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். அத்தோடு கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட இருக்கைகள் மட்டுமே இருப்பதனாலேயே ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

# மீட்கப்பட்ட வாள்களை மீள ஒப்படைப்பது

# தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தானது

## ஓமல்பே சோபித தேரர் எச்சரிக்கை



**(கொழும்பு)**

**இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் குண்டுத்தாக்குதலைத் தொடர்ந்து பள்ளிவாசல்களில் இருந்து பாதுகாப்புத் தரப்பினரால் கைப்பற்றப்பட்ட வாள் உள்ளிட்ட ஆயுதங்களை மீள உரிமையாளர்களிடமே ஒப்படைப்பது சட்டத்திற்கு முரணானது என்பதுடன் தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலானது என ஓமல்பே சோபித தேரர் எச்சரித்தார்.**

கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் உயிரிழந்த. கைது செய்யப்பட்ட பயங்கரவாதிகளால் முன்னெடுக்கப்பட்ட தாக்குதல் என்று ஒருபோதும் கருத முடியாது. தொடர்ந்து தாக்குதலைப் பல்வேறு வழிமுறைகளில் முன்னெடுப்பதற்கான புதிய உபாயங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

எனவே ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் ஒன்றும் பயங்கரவாதிகளின் இறுதித் தாக்குதல் அல்ல என்றும் தேரர் எச்சரித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார். (இ-7)

## திருமந்திரவிருந்து விழா

(யாழ்ப்பாணம்)

கொழும்பு திருமந்திரப் பணிமன்றம் இணுவில் சுகவாழ்க்கைப் பேரவையின் அனுசரணையில் திருமந்திர விருந்து விழா நாளை மறுதினம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு. இணுவில். மஞ்சத்தடி அருணகிரிநாதர் சிவசுப்பிரமணியர்மண்டபத்தில்இடம்பெறும்.

இந்நிகழ்வானது நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சித்தாந்தரத்தினம் சிவஸ்ரீ. சி.குமாரராசக்குருக்கள் ஆகியோர் முன்னிலையில் கொழும்பு திருமந்திரப் பணிமன்றத் தலைவர் கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் இடம்பெறும். (ஐ-5)


உங்கள்

வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

தொலைபேசி 222 3378, 021 221 7603

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

20 ஆண்டு நிறைவை நோக்கிப் பயணிக்கிறது...

உங்கள் ஆசியும் அரவணைப்பும் இலட்சக்கணக்கான வாசகர் சேனையுடன் 20.12.2019 இல் 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. இருபது ஆண்டு காலப் பயணத்தில் நடுவுநிலையுடன் அதிக வாசகர்களைக் கொண்ட, விற்பனையில் முன்னணி என்ற பெருமைகொண்ட ஒரே நாளிதழாக வலம்புரி வியாபகம் பெற்றுள்ளது.

விற்பனையில் சாதனை படைத்திருக்கும் வலம்புரியின் விற்பனைக் கணக்கெடுப்பை வலம்புரி விற்பனை முகவர்களிடம் கேட்டறிந்து கணக்கெடுங்கள். அப்போது உண்மை புரியும்.

இருபது ஆண்டு நிறைவில் உங்கள் வலம்புரி விசேட சலுகைக் கட்டணத்தில்

01.08.2019 தொடக்கம்

விளம்பரங்களை வெளியிடத் தீர்மானித்துள்ளது. தமிழர் தாயகம் எங்கும் வியாபித்துள்ள உங்கள் வலம்புரி 20 ஆண்டு நிறைவில் இன்னும் புதுப்பொலிவுடன் உங்களைச் சந்திக்கும்.

### கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கொண்டு கல்லெறிய வேண்டாம் இனவாத இலத்திரனியல் ஊடகங்களுக்கு அசாத்சாலி எச்சரிக்கை

# தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினர் உடனடியாக பதவி விலக வேண்டும்



(இராஜகிரிய)

கண்ணாடி வீட்டுக்குள்ளே இருந்து கொண்டு கல்லெறிய வேண்டாமென்று இனவாத இலத்திரனியல் ஊடகங்களைத் தான் எச்சரிப்பதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் ஆளுநருமான அசாத்சாலி தெரிவித்தார்.

இராஜகிரியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

தினமும் காலையில் எழுந்தவுடன் இவர்களின் பொய்களையும் திரிபுபடுத்தப்பட்ட செய்திகளையுமே நாம் பார்க்க வேண்டியிருக்கின்றது. வீணாக மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறார்கள். சதொச நிறுவனத்துடன் என்னைத் தொடர்புபடுத்தி பொய்யான செய்திகளை கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

மொட்டுக்கட்சியினரை ஆட்சிக்கு கொண்டுவருவதற்காக இந்த இனவாத ஊடகங்கள் முஸ்லிம்களை பலிக்கடாவாக்குகின்றனர்.

குருநாகல் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கித்சிறிஜெயலத்தின் இடமாற்ற விடயத்தில் பொலிஸ் ஆணைக்குழு, காலையில் ஒரு முடிவும் மாலையில் ஒரு முடிவும் மேற்கொண்டதிலிருந்து இந்த ஆணைக்குழுவினர் முள்ளந்தண்டில்லாதவர்களென நிரூபித்துள்ளனர்.

எனவே பொலிஸ் ஆணைக் குழுவினர் உடனடியாக பதவி விலக வேண்டும்.

அழுத்தங்களுக்காக வேலை செய்தால் எவ்வாறு இதனை சுயாதீன ஆணைக்குழு என்றழைப்பது? 48 நாடுகளுக்கு ஆறு மாதங்கள் தங்கக்கூடிய இலவச விசா வசதியை அரசு வழங்கியுள்ளது. இவற்றில் எந்தவொரு முஸ்லிம் நாடும் இல்லை.

இலங்கைக்கு கோடிக்கணக்கான நிதியுதவியை வழங்கும் முஸ்லிம் நாடுகளுக்கு ஏன் இந்த இருட்டடிப்பு? அவர்கள் உதவி செய்வதற்காக நீங்கள் காட்டும் நன்றிக்கடனா இது? அத்துரலிய ரத்ன தேரர். ஆனந்த சாகர தேரர் மற்றும் ராவணா பலயாக்கள் முஸ்லிம் நாடுகளில் இருந்து எதுவுமே வேண்டாமென கூறுவது நகைப்புக்கிடமானது.

நெலும் பொகுணவில் இன ஐக்கிய மாநாடு என்று கூறி ஆட்களை கொண்டு சென்று நிரப்பி முஸ்லிம்களையும் குர்ஆனையும் கொச்சைப்படுத்தியுள்ளார்கள். இஸ்லாமிய விரோதிகளை மேடையில் அனுமதித்து இந்த அவமானத்தை தேடித்தந்தவர்கள், உலக முஸ்லிம் லீக் தலைவரை தரக்குறைவாக நடத்துவதற்கும் உதவி அளித்துள்ளார்கள்.

நான் பதவிக்கு பின்னால் என்றுமே ஓடியவனல்ல;பதவி தான் எங்களை தேடி வரும். எங்கள் கை சுத்தமானது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட எங்களில் ஏதாவது குறை இருக்குமென்று தேடிக் களைத்துபோனவர்.

அவரால் முடியாத ஒன்றையா இவர்கள் செய்யப்பார்க்கின்றார்கள்? நிகாப் மற்றும் முஸ்லிம் திருமண சட்டத்தில் எழுந்தமான முடிவுகளையோ சீர்திருத்தங்களையோ செய்வதற்கு நாங்கள் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை" என்றும் அசாத்சாலி தெரிவித்தார். (இ-7)

## சிவ சிதம்பரத்தின் உருவச்சிலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்ப கர்த்தாவும் முன்னாள் உப சபாநாயகரும் உடுப்பிட்டி நல்லூர் தொகுதிகளின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் மு.சிவசிதம்பரத்தின் திருவுருவச் சிலை திறப்பு நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்கல் 3.30 மணிக்கு கரவெட்டி பெரிய தோட்டம் இல்லத்தில் (அவர் வாழ்ந்த இல்லம்) தா.சிறிஸ்கந்தசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி கலந்து கொள்வார். நினைவுப் பேருரையை பத்திரிகையாளர் வீ.தனபாலசிங்கம் ஆற்றுவார். (இ-5)

## பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மாற்றம்

(கொழும்பு)

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜெயசுந்தர, பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

இவர் உள்ளிட்ட 8 பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்தது.

அதன் பிரகாரம் , பிரதமர் பாதுகாப்புப் பிராந்தியத்திற்கு பொறுப்பாகவிருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் எ.ஜே. கரவிட்ட, பிரதமர் பாதுகாப்புப் பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

அரச புலனாய்வுப் பிரிவின் உதவி பணிப்பாளராக செயற்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் என். எல்.சி. சம்பத்குமார, அரச புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

ஆட்சேர்ப்பு , பயிற்சி , மனித வள முகாமைத்தும் மற்றும் சர்வதேச தொடர்பாடல் பிரிவின் பொறுப்பதிகாரியாக பிரதிபொலிஸ்மா அதிபர் எஸ்.எம். தர்மரட்ண இடமாற்றம் செய்யப்பட்டார்.

தகவல் தொழில்நுட்பம் , ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவின் பொறுப்பாளராக பிரதி பொலிஸ்மா அதிபர் எஸ்.டப்ளியூ. எம். சேனாரட்ன இடமாற்றம் செய்யப்பட்டார்.

அத்துடன் நுகேகொட பொலிஸ் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.பி. கருணாநாயக்க மொனராகலை பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

கண்டி பொலிஸ் பிரிவின் பொறுப்பாளராக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.என். சிசிர குமார மனிதவள முகாமைத்துவ பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

பொலிஸ் தலைமையகத்தில் பணியாற்றிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சி.கே.அலாகோன் நுவரெலியா பொலிஸ் பிரிவின் பொறுப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1797

### சத்தியா



### இனியன்

தினமும் ஏன் இந்த ஓட்டம் என்ற சலிப்புடன் கடிகாரம் பார்த்தேன்... அது என்னிடம் கேட்டது, நான் ஓடாவிட்டால் என்ன செய்வாய், நான் தூக்கி எறிந்து விடுவேன் என்றேன். அதற்கு அது கூறியது நீயும் ஓடாவிட்டால் இந்த உலகம் உன்னை தூக்கி எறிந்துவிடும்



### கந்தன்

தேவையில்லாமல் எவ்வளவோ பொருட்கள் வாங்கிச் சேர்த்து வைத்திருக்கிறோம் என்று வீடு காலி பண்ணுறப்போதான் தெரியுது




### ஆதவன்

அலுவலகத்தில் சேர்ந்தவுடன் பக்கத்தில வீடு பார்த்தா அது கவர்மென்ட் ஜொப்... பக்கத்திலேயே வேற நல்ல அலுவலகம் இருக்கானு பார்த்தா அது பிறைவேட் ஜொப்




### நிரோஷன்

சந்தோஷமா வாழனும்னா ஒன்னு நம்மல ராஜாவா நினைச்சு வாழனும்... இல்லை எவன் ராஜாவா இருந்தா நமக்கென்னன்னு வாழனும்



### சுந்தரி

புகழ் என்பது புகை மாதிரி; அது நம்மைச் சூழ்ந்திருக்கும்போது உண்மை தெரியாது; உண்மை தெரியும் போது அது நம்மைச் சூழ்ந்திருக்காது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கைச் சிறையிலுள்ள மீனவர்களை மீட்க வேண்டும்

## குடும்பத்தினர் கண்ணீர் மல்க கோரிக்கை



(இராமநாதபுரம்)

"இலங்கைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இராமேஸ்வரம் மீனவர்கள் ஏழு பேரையும் உடனடியாக மீட்க வேண்டும்" என்று கோரி குறித்த மீனவர்களின் குடும்பத்தினர் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் மனுக் கொடுத்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் மல்லிகா நகரைச் சேர்ந்த துரைசிங்கம் என்பவரின் படகில் கடந்த 27ஆம் திகதி 7 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர்.

இவர்கள், கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக, படகை மீண்டும் கரைக்கு கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டது.

அப்போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர், இராமேஸ்வரம் மீனவர்களின் படகை சுற்றிவளைத்து, எல்லைதாண்டி மீன்பிடித்ததாகத் தெரிவித்து படகில் இருந்த சத்தியசீலன், நாகராஜன், இன்னாசி, பெனிட்டோ, முனியசாமி, ஜோசப் பால்ராஜ், சுப்பிரமணி ஆகிய ஏழு பேரையும் கைது செய்து மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். பின்னர் ஏழு மீனவர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளதால் மிகுந்த மன வேதனை அடைந்த அவர்களின் குடும்பத்தினர், தமிழ்நாடு மீனவர் உரிமை பாதுகாப்பு இயக்க நிறுவுநர் தீரன் திருமுருகன் தலைமையில் இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகத்திற்குச் சென்று அங்கு, ஆட்சியர் வீரராகவராவை சந்தித்து "இலங்கைச் சிறையிலுள்ள ஏழு மீனவர்களையும் உடனடியாக மீட்டுக் கொண்டுவர மத்திய - மாநில அரசுகள் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கண்ணீர் மல்க கோரிக்கை மனுக் கொடுத்தனர்.

மனுவைப் பெற்றுக்கொண்ட ஆட்சியர் இதுகுறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, ஏழு பேரையும் மீட்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (இ-7)

# சுகாதார அமைச்சால் 14 மில்.பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன





(கொழும்பு)

மத்திய சுகாதார அமைச்சின் 2019 வைத்தியசாலைக்கான சிறப்பு மருத்துவ உபகரணங்கள் பகிர்ந்தளிப்பில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டு 14 மில்லியன் ரூபாய் பெறுமதியான உடற் உள் நோக்கல் (endoscopy) உபகரணம் வழங்கப்பட்டது.

அகில இலங்கை ரீதியில் வைத்தியசாலைகளின் சேவைகளை ஆராய்ந்து வடமாகாணத்தில் உள்ள தள வைத்தியசாலைகளில் இவ் வைத்தியசாலைக்கே இவ் உபகரணத்தை சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனாரட்ன, மத்திய சுகாதார அமைச்சின் அலுவலகத்தில் கடந்த 6 ஆம் திகதி வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி த.குகதாசனிடம் கையளித்தார்.

இதன் மூலம் வடமராட்சி, தென்மராட்சி பிரதேசங்களை சார்ந்த நோயாளர்கள் பெரும் பயன் அடையக் கூடியதாக இருக்கும். (5-114)

# கல்வி வெளியீட்டுத் திணைக்கள பணிப்பாளரின் இடமாற்றம் இரத்து!

(கொழும்பு)

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஐ.எம்.கே.பீ. இலங்கசிங்கவின் இடமாற்றத்தை, அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு இடை நிறுத்தியது.

அதற்கமைய ஐ.எம்.கே.பீ. இலங்கசிங்க முன்னர் வகித்த பணிப்பாளர் பதவியே அவருக்கு வழங்கப்பட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க உறுதிப்படுத்தியதாக ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்தது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்படும் புத்தகங்களில் கல்வி அமைச்சரின் புகைப்படங்கள் பொறிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் கடந்த மாதம் 24 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக் குழுவில் தான் சாட்சி வழங்கிய பின்னர் இந்த திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டதாக ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஐ.எம்.கே.பீ. இலங்கசிங்க முறைப்பாடு ஒன்றை பதிவு செய்தார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்கவிடம் ஜனாதிபதி ஆணைக் குழு அதிகாரிகள் வினவிய நிலையில் குறித்த இடமாற்றம் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் உத்தரவிற்கமையவே வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதனை ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு, மேற்குறித்த காரணத்தை தவிர வேறு காரணங்கள் இல்லாமையால் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஐ.எம்.கே.பீ. இலங்கசிங்கவிற்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு உத்தரவிட்டது.

எவ்வாறாயினும் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் விளக்கமளிக்க கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மீண்டும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட வேண்டும் என ஆணைக்குழுவின் தலைவர் அரச சட்டத்தரணிகள் பிரிவுக்கு அறிவித்துள்ளார். (இ-7)

# புத்தளத்தில் மினி சூறாவளி!

## 80 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதம்





(புத்தளம்)

புத்தளத்தில் வீசிய மினி சூறாவளி காரணமாக பல வீடுகள் சேதமடைந்ததாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

ரத்மல்யாய பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இந்த மினி சூறாவளி வீசியது.

இதன் காரணமாக சுமார் 80 இற்கும் மேற்பட்ட வீடுகளும் 7 வர்த்தக நிலையங்களும் பகுதியளவில் சேதமடைந்ததாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

அத்துடன் சேத விபரங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் அந்நிலையத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் இந்த மினி சூறாவளி காரணமாக அப்பிரதேசத்திலுள்ள பாரிய மரம் ஒன்று பாதையில் விழுந்தமையால் புத்தளம் - கொழும்பு பிரதான வீதியிலான போக்குவரத்து பல மணி நேரம் பாதிக்கப்பட்டது.

புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து மரத்தை அப்புறப்படுத்தியதன் பின்னர், போக்குவரத்து வழமைக்குத் திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 250 | 240 | 300 |
| தக்காளி | 100 | 120 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 180 | 160 | 110 | 100 |
| கோவா | 80 | 70 | 80 | 60 | 80 |
| கரட் | 120 | 140 | 140 | 120 | 160 |
| பூசணி | 100 | 40 | 60 | 50 | 80 |
| புடோல் | 50 | 60 | 60 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 120 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 80-150 | 130 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 110 | 120 | 120 |
| பாகற்காய் | 150 | 180 | 140 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 | 60 | 80 |
| பயற்றங்காய் | 60 | 120 | 60 | 70 | 60 |
| லீக்ஸ் | 100 | 80 | 70 | 60 | 100 |
| பீற்றூட் | 80 | 60 | 70 | 60 | 80 |
| கறிமிளகாய் | 150 | 160 | 170 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 60 | 70 | 100 | 70 | 100 |
| போஞ்சி | 150 | 170 | 170 | 110 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | — | 50 | 60 |
| கீரை - 1பிடி | 40 | 35 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 300 | 350 | 380 | 260 | 480 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 20-40 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 250 | 200 | 150 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 160 | 170 | 100 | 200 |
| முள்ளங்கி | 60 | 50 | 70 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 80 | 60 | 30 | 50 |




# கைகள் சொன்ன உண்மை கதை...



சில வருடங்களுக்கு முன்பு, வெலிங்டனிலுள்ள இராணுவ அதிகாரி' ஒருவரின் வீட்டுக்குச் சென்று இருந்தேன். அவரது வரவேற்பறையில் இரண்டு கைகளின் புகைப்படம். யாரோ ஒரு புனிதரின் கைகளாக இருக்கக்கூடும் என்று நினைத்து, அதைப்பற்றிக் கேட்கவே இல்லை. அவரோடு காரில் பயணம் செய்யும்போது, அதேபோன்ற கைகளின் புகைப்படத்தை மறுபடியும் பார்த்தேன். ஆவலில் அது யாருடைய கைகள் என்று கேட்டேன்.

அவர் புகைப்படத்தைக் கையில் எடுத்துப் பார்க்கும் படியாகச் சொன்னார். புகைப்படத்தை அருகில் தொட்டுப் பார்த்தபோது, அது வயதான ஒரு பெண்ணின் கைகள் என்பதைக் கண்டுகொண்டேன். முதுமையின் ரேகை படிந்த நீண்ட விரல்கள். நகங்கள் சுத்தமாக வெட்டப்பட்டு இருக்கின்றன. நரம்புகள் புடைத்துத் தெரிகின்றன. யாராக இருக்கும் என்று மனது ஏதேதோ துறவிகளை, ஞானிகளை நினைவுபடுத்திக் கொண்டே இருந்தது.

அவர் அந்தக் கைகளைப் பெருமூச்சுடன் பார்த்து ஆதங்கமான குரலில் அது என் அம்மாவின் கைகள் என்று சொன்னார். ஆச்சர்யமாக இருந்தது. "எதற்காக அம்மாவின் கைகளை மட்டும் புகைப்படமாக வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"அந்தக் கைகள்தான் என்னை வளர்த்தன. என் நினைவில் எப்போதுமே அம்மாவின் கைகள் தான் இருக்கின்றன. அம்மாவின் முகத்தைவிட, அந்தக் கைகளைக் காணும்போதுதான் நான் அதிகம் நெகிழ்ந்துபோகிறேன்.

அம்மா இறப்பதற்குச் சில மணி நேரம் முன்பாக இந்தப் புகைப்படத்தை எடுத்தேன். இந்தக் கைகள் இப்போது உலகில் இல்லை. ஆனால், இதே கைகளால் வளர்க்கப்பட்டவன் உங்கள் முன்னால் உட்கார்ந்திருக்கிறேன். என் அம்மா எனக்கு விபரம் தெரிந்த நாளில் இருந்து ஓய்வு எடுத்ததே இல்லை.

அப்பா பொறுப்பற்ற முறையில், குடித்து, குடும்ப வருமானத்தை அழித்து 32 வயதில் செத்துப் போனார். அம்மாதான் எங்களை வளர்த்தார். நாங்கள் மூன்று பிள்ளைகள். அம்மா படிக்காதவர். ஒரு டாக்டரின் வீட்டில் பணிப் பெண்ணாக வேலைக்குச் சேர்ந்தார். பகல் முழுவதும் அவர்கள் வீட்டினைச் சுத்தம் செய்வது, பாத்திரம் கழுவுவது, துணி துவைப்பது, நாய்களைப் பராமரிப்பதுபோன்ற வேலைகள். மாலையில் இன்னும் இரண்டு வீடுகள். அங்கும் அதேபோல் சுத்தம் செய்யும் வேலைதான். எத்தனை ஆயிரம் பாத்திரங்களை அம்மாவின் கைகள் விளக்கிச் சுத்தம் செய்து இருக்கும் என்று நினைத்துப்பார்க்கவே மனது கஷ்டமாக இருக்கிறது.

இரவு வீடு திரும்பிய பிறகு, சமைத்து எங்களைச் சாப்பிட வைத்து உறங்கச்செய்துவிட்டு அதன் பின்னும் அம்மா இருட்டிலேயே கிணற்றில் தண்ணீர் இறைத்துக்கொண்டு இருப்பார்கள். சமையல் அறையில்தான் உறக்கம். அப்போதும் கைகள் அசைந்தபடியேதான் இருக்கும். எங்கள் மூவரையும் பள்ளிக்கூடம் அழைத்துப் போகையில் யார் அம்மாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு நடப்பது என்பதில் போட்டியே இருக்கும்.

அந்தக் கைகளைப் பிடித்துக் கொள்வதில் அப்படி ஒரு நெருக்கம், நம்பிக்கை கிடைக்கும். அதுபோலவே உடல் நலம் இல்லாத நாட்களில் அம்மாவின் கைகள் மாறி மாறி நெற்றியைத் தடவியபடியே இருக்கும். அம்மா நிதானமாகச் சாப்பிட்டு நான் பார்த்ததே இல்லை. தனது சகல சிரமங்களையும் அம்மா தன் கைகளின் வழியே முறியடித்து எங்களை வளர்த்தபடியே இருந்தார். மருத்துவரின் வீட்டில் அம்மா ஒருநாள் ஊறுகாய் ஜாடியை உடைத்துவிட்டார் என்று அடி வாங்குவதைப் பார்த்தேன். அம்மாவின் கன்னத்தில் மருத்துவரின் மனைவி மாறி மாறி அறைந்துகொண்டு இருந்தார். அம்மா அழவே இல்லை.

ஆனால், நாங்கள் பார்த்துக் கொண்டு இருப்பதைத் தாங்க முடியாமல், விடுவிடுவென எங்களை இழுத்துக்கொண்டு அந்த வீட்டில் இருந்து வெளியேறினாள். வழியில் பேசவே இல்லை. அம்மாவை எந்தக் கைகளும் ஆறுதல்படுத்தவோ, அணைத்துக் கொள்ளவோ இல்லை. அவள் கடவுள் மீதுகூட அதிக நம்பிக்கைகொண்டு இருந்தாள் என்று தோன்றவில்லை. வீட்டில் சாமி கும்பிடவோ, கோயிலுக்குப் போய் வழிபடவோ, அதிக ஈடுபாடு காட்டியதேஇல்லை.வேலை...வேலை... அது மட்டுமே தன் பிள்ளைகளை முன்னேற்றும் என்று அலுப்பின்றி இயங்கிக்கொண்டு இருந்தார்.

சிறு வயதில் அந்தக் கைகளின் முக்கியத்துவத்தை நான் புரிந்துகொள்ளவே இல்லை. ஆசையாகச் சமைத்துத் தந்த உணவைப் பிடிக்கவில்லை என்று தூக்கி வீசி இருக்கிறேன். கஷ்டப்பட்டுப் பள்ளியில் இடம் வாங்கித் தந்தபோது படிக்கப் பிடிக்கவில்லை என்று போகாமல் இருந்திருக்கிறேன். கைச் செலவுக்குத் தந்த காசு போதவில்லை என்று அம்மாவுக்குத் தெரியாமல் வீட்டில் திருடி இருக்கிறேன். மற்ற சிறுவர்களைப்போல சைக்கிள் வாங்கித் தர மாட்டேன் என்கிறாள் என்று கடுமையான வசைகளால் திட்டி இருக்கிறேன். அம்மா எதற்கும் கோபித்துக்கொண்டதே இல்லை. அம்மா கஷ்டப்படுகிறாள் என்று தெரிந்தபோதும் யார் அவளை இப்படிக் கஷ்டப்படச் சொன்னது என்றுதான் அந்த நாளில் தோன்றியது. கல்லூரி வயதில் நண்பர்களோடு சேர்ந்து சுற்றவும், புதுப் புது ஆடைகள் வாங்கவும் குடிக்கவும் எத்தனையோ பொய்கள் சொல்லி இருக்கிறேன். என் அண்ணனும் தங்கையும்கூட இப்படித்தான் செய்திருக்கிறார்கள். ஆனால், அம்மா அதற்காக எவரையும் கோபித்துக் கொள்ளவே இல்லை.

கல்லூரி இறுதி ஆண்டில் மஞ்சள் காமாலை வந்து, நோயாளியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார் அம்மா. அப்போதுதான் அவர் எங்களை எவ்வளவு அக்கறையோடு, ஆதரவோடு காப்பாற்றி வந்திருக்கிறார் என்று புரிந்தது. அதன் பிறகு, என்னைத் திருத்திக்கொண்டு தீவிரமாகப் படிக்கத் துவங்கி, இராணுவத்தில் வேலைக்குச் சேர்ந்து கடுமையாக உழைத்துப் பதவி-உயர்வு பெற்றேன். அம்மாவை என்னுடனே வைத்துக் கொண்டேன். நான் சம்பாதிக்கத் துவங்கியபோதும், அம்மா ஒருபோதும் எதையும் என்னிடம் கேட்டதே இல்லை. நானாக அவருக்கு எதையாவது வாங்கித் தர வேண்டும் என்று நினைத்து, தங்க வளையல் வாங்கித் தருகிறேன்என்று அழைத்துப்போனேன்.

முதிய வயதில் அம்மா மிகுந்த கூச்சத்துடன், 'எனக்கு ஒரே ஒரு வோட்ச் வேண்டும். சின்ன வயதில் வோட்ச் கட்டிக்கொண்டு வேலைக்குப் போக வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால், அது நடக்கவே இல்லை. அதன் பிறகு, எனக்குள் இருந்த கடிகாரம் ஓடு... ஓடு... என்று என்னை விரட்டத் துவங்கியது. அலாரம் இல்லாமலே எழுந்துகொள்ளப் பழகிவிட்டேன். இப்போது வயதாகிவிட்டது. சில நாட்கள் என்னை அறியாமல் ஆறு மணி வரை உறங்கிவிடுகிறேன். இரவுஉணவை ஏழு மணிக்குச் சாப்பிட்டுவிடுகிறேன். ஒரு வோட்ச் வாங்கித் தருவாயா?' என்று கேட்டார்.

அம்மா விரும்பியபடி ஒரு வோட்ச் வாங்கித் தந்தேன். ஒரு பள்ளிச் சிறுமியைப்போல அதை ஆசையாக அம்மா எல்லோரிடமும் காட்டினாள். அதை அணிந்துகொள்வதில் அம்மா காட்டிய ஆர்வம் என்னை நெகிழ்வூட்டியது. அதன் பிறகு அம்மா, நான் திருமணம் செய்து டில்லி, பெங்களூர் என்று வேலையாக அலைந்தபோது கூடவே இருந்தார். டில்லியில் எதிர்பாராத நெஞ்சுவலி ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். நான் கூடவே இருந்தேன்.

'நாங்கள் ஏமாற்றியபோது எல்லாம் ஏன் அம்மா எங்களை ஒரு வார்த்தைகூடத் திட்டவே இல்லை?' என்று கேட்டேன். அம்மா, 'அதற்காக நான் எவ்வளவு அழுதிருக்கிறேன் என்று உங்களுக்குத்தெரியாது. ஆனால், அன்று நான் கோபப்பட்டு இருந்தால், என் பிள்ளைகள் என்னை விட்டுப் போயிருப்பார்கள்' என்று சொல்லி, தன் கையை என்னுடன் சேர்த்துவைத்துக்கொண்டார்.

அப்போதுதான் அந்த முதிய கைகளைப் பார்த்தேன். அது எவ்வளவு உழைத்திருக்கிறது. எவ்வளவு தூய்மைப்படுத்தி இருக்கிறது. எவ்வளவு அன்பைப் பகிர்ந்து தந்திருக்கிறது. அதை ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றியது. பிறகு ஒருநாள், எனது கமராவை எடுத்து வந்து, புகைப்படம் எடுத்துக்கொண்டேன். இன்று அம்மா என்னோடு இல்லை. ஆனால், இந்தக் கைகள் என்னை வழி நடத்துகின்றன. ஒவ்வொரு நாளும் நான் எப்படி வளர்க்கப்பட்டேன் என்பதை இந்தக் கைகள் நினைவுபடுத்துகின்றன. இதை வணங்குவதைத் தவிர, வேறு நான் என்ன செய்துவிட முடியும்?" என்றார்.

இராணுவ அதிகாரியினுடைய முகம் தெரியாத அந்தத் தாயின் கைகளை நானும் தொட்டு வணங்கினேன். அந்தக் கைகள் யாரோ ஒருவரின் தாயின் கைகள் மட்டும் இல்லை. உலகெங்கும் உழைத்து ஓய்ந்துபோன தாயின் கைகள் யாவும் ஒன்றுபோலத் தான் இருக்கின்றன. அவை எதையும் யாசிக்கவில்லை. அணைத்துக்கொள்ளவும், ஆதரவு தரவும், அன்பு காட்டவுமே நீளுகின்றன. அதை நாம் புறந்தள்ளிப் போயிருக்கிறோம். அலட்சியமாகத் தவிர்த்து இருக்கிறோம்.

இலக்கு இல்லாத எனது பயணத்தில் யார் யார் வீடுகளிலோ தங்கியிருக்கிறேன். சாப்பிட்டு இருக்கிறேன். எனது உடைகளைத் துவைத்து வாங்கி அணிந்து இருக்கிறேன். அந்தக் கைகளுக்கு நான் என்ன நன்றி செய்து இருக்கிறேன். ஒரு நிமிடம் என் மனம் அத்தனை கைகளையும் வணங்கி, தீராத நன்றிசொன்னது.

'கை விரல்களுக்கு இடையில் இடைவெளி இருப்பது இன்னொரு கைகள் நம்மோடு சேர்ந்து கொள்ளத்தான்' என்று எங்கோ படித்தேன். அதை நிறைய நேரங்களில்நாம்உணர்வதே இல்லை. நம் மீது அன்பு காட்டும் கைகளுக்கு நாம் என்ன செய்யப்போகிறோம்? முடிவு நம்மிடமே இருக்கிறது!

## விடுகதைகளும் விடைகளும்

- கருப்பையில் சில மாதம், வெளிப்பையில் சில வருடம் பிள்ளை சுமப்பான். அவன் யார்?
  **கங்காரு**
- கல்லாலும் மண்ணாலும் கட்டாத வீடு, காற்றிலே ஆடும் வீடு. அது என்ன?
  **துக்கணாங் குருவிக்கூடு**
- சில்லறை சேர்த்து வைத்த செந்நிற அழகி, அவள் யார்?
  **மிளகாய் வற்றல்**
- ஆறாத் துயரில் ஊற்றெடுக்கும் ஆறு. அது என்ன?
  **கண்ணீர்**

## சிந்தனைத்துளிகள்

- வாழ்க்கையில் யாரையும் சார்ந்துவாழ்ந்து விடாதே. உன் நிழல்கூடவெளிச்சம் உள்ளவரை தான் துணைக் குவரும்.
- அனைவரையும் நேசி, சிலரை மட்டும்நம்பு, ஒருவரை பின்பற்று, ஆனால்ஒவ்வொருவரிடம் இருந்து கற்றுக் கொள்.
- வீரனைப் போரினும் யோக்கியனைகடனினும் மனைவியை வறுமையிலும் நண்பனை கஷ்டகாலத்திலும் அறிந்துகொள்ளலாம்.

முதலில் தன்னைத் மாற்றிக் கொள்ளத் தயாராக இருப்பவன் மட்டுமே, உலகை மாற்றத் தகுதி உடையவன். – நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் ஒற்றுமைப்பலத்தை எழுச்சிப் பேரணி எடுத்துக் காட்டட்டும்

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி இடம்பெறவுள்ளது.

அரசியல் கட்சி பேதமின்றி தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்க மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியில் அனைவரையும் அணி திரளுமாறு தமிழ் மக்கள் பேரவை பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளது.

இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் வெறும் விமர்சனங்களும் குற்றச்சாட்டுக்களுமே நம்மிடம் மலிந்து போயுள்ளன.

இத்தகைய நிலைமையானது வளமான மண்ணில் பாதீனியச் செடிகள் செழிப்பாக வளர்ந்து நிற்பதற்கு ஒப்பானதாகும்.

எனவே வெறுமையான விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள் தமிழ் மக்களுக்கு எந்த விமோசனத்தையும் தரப்போவதில்லை.

மாறாக, இத்தகைய மறைநிலைக்கருத்துக்கள் எங்கள் இனத்தின் மூலவேரை நன்னி விடக்கூடியது.

ஆகையால் நமக்குள் இருக்கக்கூடிய கருத்து முரண்பாடுகளை; சொந்த நலன்களை ஒருபுறமாக வைத்துவிட்டு, எம் தமிழினம் வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கில் அனைவரும் அணிதிரண்டு தமிழ் மக்களின் சமகால நிலைமையை சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறுவது மிகவும் அவசியமானதாகும்.

அந்தவகையில் மக்கள் இயக்கமாகிய தமிழ் மக்கள் பேரவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி தமிழர் தாயகம் தழுவியதாக யாழ்ப்பாணத்தில் நடத்துகின்ற மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியில் இலட்சக்கணக்கில் தமிழ் மக்கள் அணிதிரண்டு தங்களின் ஒற்றுமைப்பலத்தை எடுத்துக்காட்டுவது காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளது.

ஓர் இக்கட்டான சூழ்நிலையில் முஸ்லிம் இனத்தின் அரசியல் தரப்புகள் எங்ஙனம் தமக்குள்ளான கருத்து வேற்றுமைகளை புறந்தள்ளிவிட்டு, அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்ததன் விளைவாக சிங்களப் பேரினவாதம் அதிர்ந்து போனது.

இதற்கு மேலாக, பௌத்த பீடங்கள் ஒரு காலத்திலும் இல்லாத வகையில் முஸ்லிம் அரசியல்வாதிகள் அமைச்சுப் பதவிகளை மீளவும் பொறுப்பேற்க வேண்டுமென கோரிக்கை விடுத்தன.

தம் இனத்துக்காக அமைச்சுப் பதவிகளைத் துறந்த முஸ்லிம் அரசியல்வாதிகள், பௌத்த பீடங்களின் கோரிக்கையை உதாசீனம் செய்வது தமக்குக் கிடைத்த மீள்சந்தர்ப்பத்தை தட்டி விடுவதாக இருக்கும் எனக் கருதி; மீண்டும் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்றனர்.

இனி எந்தச் சந்தர்ப்பத்திலும் முஸ்லிம் அமைச்சரைப் பதவி நீக்கு என்று பௌத்த பீடங்கள் உட்பட சிங்களத் தரப்பினர் எவரும் கோரிக்கை முன்வைக்க மாட்டார்கள் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டு விட்டது. இதுதான் அவர்களின் ஒற்றுமைப்பலம்.

ஆக, தமிழ் மக்களும் தங்களின் ஒற்றுமைப் பலத்தை நிரூபிக்க வேண்டிய கால கட்டம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக அனைத்து பொது அமைப்புக்களும் சமூக நிறுவனங்களும் அணிதிரண்டு மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணிக்கு தங்கள் பூரணமான வசிபங்கை வழங்க வேண்டும்.

**இந்த ஒற்றுமை நிச்சயம் எம் இனத்தை வாழ வைக்கும். இது சத்தியம்.**

# அரசியல் கைதிகளின் விடுதலை குறித்த பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும்

## அமைச்சர் மனோ தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக தம்மால் முன்வைக்கப்படவுள்ள அமைச்சரவைப் பத்திரத்தின் மொழிபெயர்ப்பு பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அவரது உத்தியோக பூர்வ முகப்புத்தக பதிவிலேயே அவர் இந்த விடயம் தொடர்பாக தெரிவித்தார்.

இதன்படி குறித்த அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் நாட்களில் அமைச்சரவையில் முன்வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம் தம்மால் முன்வைக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரங்கள் அனைத்தும் சர்ச்சைக்குரியனவே என்றும் மனோ கணேசன் தனது பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தனது பத்திரங்களை அமைச்சரவையில் ஏற்றுக்கொள்ளும் விதமாக சமர்ப்பிக்க, நல்லெண்ண அமைச்சரவை சகாக்களுடன் கலந்துரையாடி அவர்களின் ஆதரவையும் கோர வேண்டிய தேவையுள்ளதாகவும் அவர் தனது பதிவில் மேலும் குறிப்பிட்டார். (இ-7)

## சஹ்ரானின் சகாக்களின் வங்கிக் கணக்குகளையும் சொத்துக்களையும் முடக்கியது சி.ஐ.டி.

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரானின் சகாக்களின் 134 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள புதிய வங்கிக் கணக்குகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் முடக்கியுள்ளனர்.

இதேவேளை கடந்த இரண்டு மாதங்களாக சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த ச்ந்தேக நபர்களுக்குச் சொந்தமான ஒரு பில்லியன் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களும் முடக்கப்பட்டன எனக் குற்றப்புலனாய்வுதிணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட 63 சந்தேக நபர்களை விசாரித்தபோது இந்தக் கணக்குகள் மற்றும் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் அவர் கூறினார்.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாத குழுவிற்கு சொந்தமான 140 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வங்கிக் கணக்குகளையும் 7 பில்லியன் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையும் சி.ஐ.டி. முடக்கியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர மே மாதம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 30 தன்னார்வ ஆங்கில ஆசிரியர்களை இலங்கைக்கு அனுப்பும் அமெரிக்கா

## கல்வியமைச்சர் காரியவசம் தகவல்

(கொழும்பு)

அமெரிக்க அரசு அடுத்த ஆண்டு 30 தன்னார்வ ஆங்கில ஆசிரியர்களை இலங்கைக்கு அனுப்பும் என எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ்"டனான சந்திப்பின்போதே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

அத்தோடு இந்த முயற்சி தொடர்பாக அமைச்சிற்கும் அமெரிக்க தூதரகத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாறு வரும் தன்னார்வ ஆசிரியர்கள் கிராமபுற மாணவர்களின் மொழியியல் அறிவை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கு ஆங்கிலத்தை கற்பிக்க பயன்படுத்தப்படுவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பேரின்பம்

பேரனபததைப புரநதுகொளள முடியாது. பேரனபத தைப பெறுவது மிகமிகக கடினம. எததனையோ பிறவிகள எடுத்த பின் நீ பேரின்பத்தைப் பெறுகிறாய். பேரின்பத்திலிருநது வெளிவருவதென்பது இன்னும் கடினம். உன் வாழவில் நீ விழைவது பேரின்பத்தைத் தான். உன் ஆன்மா இறைவனுடன் இணைவது. உலகிலுள்ள மற்றவை எலலாமே உன மனததை அநத இலககை வ்டடு வேறு வழி திருப்புகின்றவை தான். பல கோடிப் பொருட்கள், பல வழிகளில், உன்னைத் திசை திருப்பவுள்ளன. விளக்க முடியாத, புரிந்துகொள்ள முடியாத பல வழிகளால், நாம் நம்மை (ஆன்மாவை) அடைய முடிவதில்லை.

அடக்கமுடியா ஆசைகள், வெறுப்புகள், வேண்டுதல், வேண்டாமை, விருப்பங்கள் இவை மனத்தை வாழவைககினறன. மனம இறககும போதுதான பேரினபம தோன்றுகின்றது. பேரின்பம்தான் எல்லாத் தெய்வீகத்தின் தேவதைகளின் இருப்பிடம். இந்த மனிதப் பிறவியில் தான் அதைப் புரிந்துகொள்ள, ஆதரிக்க முடியும். இந்த மனிதப பிறவியைப பெறறு ஞானபபாதையை அறிநத பினனும ந இதை உணரவிலலையானால மிகபபெரும இழப்பிற்கு நீ ஆளாகிறாய்.

அடங்கா ஆசைகளும் வெறுப்புகளும் உன் இதயத்தைக் கடினமாக்குகின்றன. உனது நடத்தையில் நீ பணிவுடையவனாக இருப்பதில் பயனில்லை. நடத்தையில ந முரடடுததனமாக இருககககூடும; ஆனால இதயததில ந முரடடுததனமாக இருககமுடியாது. உனது நடத்தையில் நீ முரட்டுத்தனமாக இருந்தால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியது. ஆனால் இதயத்தில் நீ முரட்டுத்தனமாக இருந்தால் அது ஏற்க முடியாதது.

இவ்வுலகம் நீ உள்ளத்தில் நீ எப்படிப்பட்டவன் என்பதைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. உன்னுடைய நடத்தையை மாத்திரமே பார்க்கிறது. தெய்வம் நீ வெளியில் எப்படி இருக்கிறாய் என்பதைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. உனது உள்ளத்தை மட்டுமே பார்க்கிறது. மிகச்சிறியளவு ஆசையோ, வெறுப்போ உனது உள்ளத்தில ஒருபோதும் இடம்பெறவிடாதே. ரோஜா மலரைப்போல் உனது உள்ளம் புத்தம் புதியதாக, மென்மையானதாக, மணமுள்ளதாக இருக்கட்டும். (தொடரும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

உபதேசம் பெற்று அனுஷ்டானம் புரிபவர்கள் நெற்றி, மார்பு, தோள் முதலிய இடங்களில் திரிபுண்ட நகமாகத் திருநீறு தரித்தல் வேண்டும். தீட்சை பெறாதவர்கள் திருநீற்றைப் பூச வேண்டும்.

இறைவனுடைய அருள் நூல்களைப் பாராயணம் புரியும் போது அதில் கணவன் பேர் வருமானால் அதைப்படிப்பது குற்றமாகாது. மற்றைய நேரங்களில் கணவனுடைய நாமத்தைக் கூறுவது பிழையாகும்.

கார் ஓட்டத் தெரியாதவன் காரை ஓட்டினால் எத்துணை ஆபத்தோ அதுபோல் கடவுள் பற்றில்லாதவர்கள் அத்துறையில் நிர்வாகம் செய்யப் புகுவது ஆபத்து. (தொடரும்)

### அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பித்ரு தோஷத்தை நீக்க எளிய பரிகாரம்

பித்ரு தோஷம் தான் தோஷங்களில் மிகக் கடுமையான தோஷம் எனப்படுகின்றது.

ஒருவரின ஜாதகததில 1, 3, 5, 7, 9, 11 ஆகிய இடங்களில் சாய கிரகங்களான ராகு, கேது இருந்தாலும, சூரிய சநதிரன ராகு அலலது கேது கிரகஙகளுடன சேர்ந்திருந்தாலும் அந்த ஜாதக அமைப்பானது பித்ரு தோஷ அமைப்பாகும்.

ஒருவர் முற்பிறவியில் தாய் தந்தையைக் கவனிக்காமல இருபபது, உடன பிறநதவரகளைக கொடுமைப படுததுவது, கருசசிதைவு செயதல இவையெலலாம பிதரு தோஷம் ஏற்படுவதற்கான காரணங்கள் ஆகும்.

அந்தவகையில் பித்ரு தோஷத்திலிருந்து விடுபட கீழகணட எளிய பரிகாரஙகளை செயவதன மூலம நல்ல பலன்களை பெற முடியும்.

பரிகாரம்

ஒரு அமாவாசை தினத்தில் 100 கிராம் சந்தனக் கட்டை வாங்கிக் கொண்டு சிவன் கோவிலுக்கு செல்ல வேண்டும். (தொடரும்)

# டயலொக் ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்துத் தொடர் அடுத்த மாதம்



இலங்கை தொலைத் தொடர்பு நிறுவனமான டயலொக் ஆசியாட்டாவின் பூரண அனுசரணையுடன் இடம்பெறும் ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்ட தொடரின் இந்த வருடத்திற்கான போட்டிகள எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த 25 வருடங்களாக இடம்பெற்றுவரும் இலங்கையின் முன்னணி கரப்பந்து போட்டித் தொடரான ஜனாதிபதி தங்கக் கிண்ணத் தொடருக்கு தொடர்ந்து 14ஆவது முறையாகவும் டயலொக் ஆசியாட்டா நிறுவனம் அனுசரணை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த தொடரை அறிமுகம் செய்யும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த 6 ஆம் திகதி இடம் பெற்றது. இதன்போது, இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, அதன் செயலாளர் ஏ.எஸ் நாலக, டயலொக் ஆசியாட்ட நிறுவனத்தின் வர்த்தக மற்றும் ஊடக பொது முகாமையாளர் ஹர்ஷ சமரநாயக்க உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இத்தொடர் மீதான ஆர்வம் நாடு பூராகவும் பரவியுள்ள நிலையில் இம்முறை போட்டித் தொடரில் 2,500 இற்கும் அதிகமான அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 40,000 இற்கும் அதிகமான வீர,வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆண், பெண் என இருபாலாருக்கும் இடம்பெறும் இத்தொடரின் முதல் கட்டம் மாவட்ட மட்டத்திலும், இரண்டாவது கட்டம் தேசிய மட்டத்திலும் இடம் பெறவுள்ளது. மாவட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கு முன்னர் இடம்பெற்ற ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்து தொடர் திறந்த போட்டிகள் மற்றும் 22 வயதின் கீழ்ப் பட்டவர்களுக்கான போட்டிகள் என இரண்டு பிரிவுகளாக இடம் பெற்றன. எனினும், இம்முறை முழுமையாக திறந்த போட்டியாக இடம்பெறும் இந்த போட்டித் தொடரின் தேசிய மட்டப் போட்டிகள் இரண்டு முறைகளில் இடம் பெறும்.

கடந்த வருடங்களில் இடம் பெற்ற தொடர்களில் மாவட்ட மட்டத்தில் சம்பியனாகத் தெரிவாகும் அணிகள் மாத்திரமே தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகியிருந்தன. எனினும் இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றத்திற்கு அமைய, மாவட்ட மட்டத்தில் முதல் இரண்டு இடங்களையும் பெறும் அணிகளுக்கு தேசிய மட்டத்தில் விளையாடும் வாய்ப்பு கிடைக்கவுள்ளது. குறித்த அணிகள் ஜனாதிபதி தங்கக் கிண்ணம் மற்றும் ஜனாதிபதி சவால் கிண்ணம் ஆகிய இரண்டு கிண்ணங்களுக்காக மோதும்.

ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்து தொடர்

இந்த தொடரின் ஆரம்ப கட்டமாக மாவட்ட மட்டத்தில் இடம் பெறும் போட்டிகளில் சம்பியன்களாக தெரிவாகும் அனைத்து அணிகளும் (ஆண்-பெண்) தேசிய மட்டத்தில் ஜனாதிபதி தங்கக் கிண்ணத்திற்காக போட்டியிடும்.

ஜனாதிபதி சவால் கிண்ண கரப்பந்து தொடர்

இந்த தொடரின் ஆரம்ப கட்டமாக மாவட்ட மட்டத்தில் இடம் பெறும் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பிடிக்கும் அனைத்து அணிகளும் (ஆண் / பெண்) தேசிய மட்டத்தில் ஜனாதிபதி சவால் கிண்ணத்திற்காக போட்டியிடும்.

போட்டித் தொடர்களில் விளையாடும் அனைத்து வீரர்களும் தாம் பங்கு கொள்ளும் மாவட்டத்திற்கு உரிய, தமது பிரதேச செயலாளர் பிரிவில் குறைந்தது 3 வருடங்கள் பதிவை மேற் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

அதேபோன்று, தேசிய மட்டத்திற்கு தெரிவாகி வரும் அணிகள், மாவட்ட மட்டத்தில் உள்ள ஏனைய சிறந்த வீரர்களையும் தமது அணிக்குள் உள்வாங்க முடியும் எனவும் போட்டி ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

போட்டிகளில் பங்கு கொள்ளும் அணிகள் தமது விண்ணப் பங்களைப்பூர்த்தி செய்து, அதனை எதிர்வரும் செப்டெம்பர் 5ஆம் திகதிக்கு முன்னர் தமது மாவட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.(க)

## சங்கானை மக்கள் ஒன்றியத்தின் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

சங்கானை மக்கள் ஒன்றியத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான சங்கை விளையாட்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் அமரர் திருநாவுக்கரசு நாகேஸ்வரி ஞாபகார்த்த மாபெரும் கரப்பந்தாட்ட போட்டி யாழ். மாவட்டம் மற்றும் சங்கானை பிரதேச கழகங்கள் மட்டம் என இரு பிரிவாக நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி முன் னர் பதிவு செய்து கொள்ள முடியும்.

பதிவுக்கு-சங்கானை பரம்ஸ் விலாஸ் சைவ உணவகம் மற்றும் சங்கானை தேவி மொபைல்ஸ் என் பவற்றில் மேற் கொள்ள முடியும்.மேலதிக, தொடர்புகளுக்கு 077 923 1455 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள. முடியும். (க)

## வடக்கு - கிழக்கு பிறிமியர் லீக் ரில்கோ கொங்கியூரஸ் வெற்றி

வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக் உதைபந்தாட்டத் தொடர் முதல் வெற்றியை பதிவு செய்தது நடப்பு சம்பியன் ரில்கோ கொங்கியூரஸ் எப்.சி அணி.

வடக்கு-கிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நடைபெற்ற முதலாவது ஆட்டம் ஒன்றில் யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அணிகளான ரில்கோ கொங்கியூரஸ். அணியை எதிர்த்து நொதேன் எலைட் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 03:02 என்ற கோல் கணக்கில் ரில்கோ கொங்கியூரஸ் அணி தனது முதல் வெற்றியை பதிவு செய்தது.

கொங்கியூரஸ் அணி சார்பாக தனேஸ், ஹரிசன், இவான்ஸ் ஆகியோர் தலா ஒரு கோலையும் மற்றும் நொதேன் எலைட் அணி சார்பாக பிரசாந்,கஜகோபன் ஆகியோர் தலா ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர். (க)

## அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் நல்லூர் பிரதேச செயலக அணி சம்பியன்



அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதியது.

போட்டியின் முதலில் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச செயலக அணி 12 ஓவர்களின் முடிவில் 7 விக்கட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு 126 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யாழ்.பிரதேச செயலக அணி 105 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. இதன் மூலம் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கியது நல்லூர்பிரதேச செயலக அணி. போட்டியின் ஆட்டநாயனாக 37 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்றுக் கொடுத்த நல்லூர் பிரதேச செயலக அணி வீரர் தனுசன் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கு மோட்டார் சைக்கிள் பரிசளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## சரஸ்வதி ச.ச. நிலையத்தின் கூடைப்பந்தாட்டப் போட்டிகள்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் நடத்தப்படவுள்ள ஆண்,பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்ட போட் டிகள் எதிர்வரும் 10,11 ஆம் திகதிகளில் யாழ்.கூடைபந்தாட்ட திடலில் நடைபெறவுள்ளது. போட்டி நிரல் இன்று மாலை 6மணிக்கு மாவட்ட கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெறும்.பங்குபற்ற விரும்பும் கழகங்களை போட்டி ஏற்பாட்டாளர்கள் அழைத்து நிற்கின்றார்கள். (க)

## இலங்கை அணிக்கு புதிய பயிற்சியாளர்



இலங்கை கிரிக்கெட் அணியின் இடைக்கால தலைமை பயிற்சியாளராக ருமேஸ் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் சமீபகால செயற்பாடுகள் மோசமாக இருந்தன.

அதிலும் நடந்து முடிந்த உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் அந்த அணி அரையிறுதிக்கு கூட முன்னேறாமல் வெளியேறியது.

இதையடுத்து அணியின் தலைமை பயிற்சியாளர் சந்திகா ஹதுருசின்கா மீது கடுமையான விமர்சனாங்கள் எழுந்தன.

இந்நிலையில் இலங்கை கிரிக்கெட் அணியின் இடைக்கால தலைமை பயிற்சியாளராக ருமேஸ் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை - நியூசிலாந்து அணிகள் இடையிலான கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ள நிலையிலேயே ருமேஸ்க்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளராக ருமேஸ் ரத்நாயக்க சிறப்பாக செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## ஜனாதிபதி வேட்...

முடிவு எடுப்பார்கள் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அடைக்கல நாதன் தெரிவித்தார்.

மன்னார் தோட்டவெளி ஜோசவாஸ் நகர் மற்றும் ஜோசப் நகர் ஆகிய குடியேற்ற கிராமங்களை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்

நாங்கள் பல அமைச்சர்களிடம் பேசினோம் உதவி கோரினோம் ஆனாலும் செயலாற்றகூடிய ஏழைகளுக்கு செயலாற்ற கூடிய அமைச்சர் சஜித் பிரமதாஸ அவர்களாகும் உண்மையை கூற வேண்டுமானால் எங்களுடைய மனங்களில் வீடு தந்த நீங்கள் இருக்கின்றீர்கள் ஆகவே ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக தெரிவிக்கப்படுகின்ற போது எங்கள் மக்கள் சரியான முடிவெடுப்பார்கள் எனவும் தெரிவித்தார்

அத்துடன் தோட்டவெளி கிராமத்தில் வீட்டுதிட்டங்கள் வழங்கப்பட்டபோதிலும் என்னும் வீடுகள் தேவையானவர்கள் இருப்பதனால் அவர்களுக்கும் வழங்க முன்வர வேண்டும் என கோரிக்கையாக விடுப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் நீங்கள் எங்களுக்கு வீடு தந்திருக்கின்றீர்கள் நாங்கள் வீடுகளை ஒருபோதும் மறப்பதில்லை அதே போன்று வீடுகளை தந்த உங்களையும் மறக்கமாட்டோம் என தெரிவித்தார். (ம-3)

## கோத்தபாயவே ஜனாதி...

விக்கவுள்ளார் என, ராஜபக்ஷவினருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர், ஒரு வார காலத்துக்கு கோத்தாபய ராஜபக்ச நாடு முழுவதிலும் உள்ள மத வழிபாட்டு இடங்களுக்குச் செல்லவுள்ளார். (ம-3)

## நாட்டை அபிவிருத்...

அச்சுறுத்தல்கள் அற்ற, நீதித்துறை மீதான நெருக்குதல் இல்லாத ஜனநாயக ரீதியான புதிய நாட்டை உருவாக்கவே எதிர்பார்க்கிறோம். நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டு மானால் எமக்கு சர்வாதிகாரம் வேண்டும் என்று ஒருசிலர் கூறுகிறார்கள்.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு சர்வாதிகாரம் ஒருபோதும் தேவையில்லை. அதற்கு, எமக்கு ஜனநாயகமும் ஒழுங்குமுறைகளுமே அவசியம். இவை இரண்டினூடாகவே முன்னேற்றப்பாதையில் செல்ல முடியும் என்றும் அவர் கூறினார்.

கட்டுமானத் துறையில் பணிபுரியும் ஊழியர்களை கௌரவிக்கும் வைபவம் பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் நேற்று கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். (ம-3)


அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 694 வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.08.08
விசேட இலக்கம் 4395
வெற்றி இலக்கங்கள் 02 07 21 45
ஆங்கில எழுத்து O
தொலைபேசி: 0112 333 546-47

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1593
சீட்டிழுப்பு திகதி 08.08.2019
வெற்றி இலக்கங்கள் 27 47 62 63
ஆங்கில எழுத்து E
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி
திகதி 08/08/2019 வெற்றி வாரம் 2580 வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 12 21 31 40 சிம்மம்
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 1096
ரூ.100 பரிசுக்காக 973
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1019
சீட்டிழுப்பு திகதி 08/08/2019 பச்சை
S 05 09 21 54
தொ.பே: 0112 333 546/47.
Web: www.dlb.lk


## கல்முனை விவ...

உள்ளூராட்சி மன்ற அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கல்முனை பிரதேச செயலக பிரிவுகள் பிரச்சினைக்கு சுமூகமாகத் தீர்வு காணும் பொருட்டு நேற்று முன்தினம் இரவு சம்பந்தப்பட்ட கட்சி தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. இந்த பேச்சுக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் தீர்வை எட்டமுடியும் என்றும் அமைச்சர் வஜிர அபேவர்த்தன நம்பிக்கை தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற செய்தியாளர்களின் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதில் அளிக்கும் போது அமைச்சர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இலங்கை தேசியத்தின் அடிப்படையில் தீர்வு காணப்படவேண்டிய இந்த பிரச்சினை இனவாதமாக சித்திரிக்கப்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

இனவாத ரீதியில் அன்றி இலங்கை தேசியத்தை அடிப்டையாகக் கொண்டு இதற்கு இன்னும் ஓர் இரு தினங்களில் தீர்வு காணப்படும்.

முன்னைய ஜனாதிபதிகளின் கால்த்தில் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை. தற்போதைய ஜனாதிபதியின் கீழ் இதற்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கிற்குட்பட்டதாக 29 கிராம அலுவலகர் பிரிவுகள் உண்டு. இதே போன்று கல்முனை தெற்கிற்கு உட்பட்டதாக 29 கிராம அலுவலகர் பிரிவுகளும் உண்டு. இதற்கு மேலதிகமாக 8 கிராம அலுவலகர் பிரிவுகளும் உள்ளன. இவற்றை எந்த பகுதியுடன் இணைப்பதுதான் தற்பொழுது உள்ள பிரச்சினையாகும் என்றார். (ம-3)


மஹஜன சம்பத
திகதி 2019/08/08
சீட்டிழுப்பு இலக்கம் 3977
ஆங்கில எழுத்து C
வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 8 4 9 8 6
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1555 திகதி 2019/08/08
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 16 46 54 67
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2019.08.08
சீட்டிழுப்பு இலக்கம் 2203
ஆங்கில எழுத்து I
வெல்லப்பட்ட இலக்கங்கள் 07 35 36 68
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/08/08
சீட்டிழுப்பு இலக்கம் 582
லக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 27 45 63 71
தேசிய லொத்தர் சபை


## ஸ்கானர் பொறிமுறையில் சோதனை...

வகையில் பாதுகாப்பு மெட்டல் டிடெக்டர்கள் (Security Metal Detectors) பொறிமுறையைக் கொண்டு வரவுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

தற்போது ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்கள் பொலிஸாரால் உடல் சோதனைக்குட்படுத்தப்படுவதால் அசௌகரியங்கள் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து இந்த பொறிமுறைத் தொகுதியை வடக்கு மாகாண சபை நிதியிலிருந்து கொண்டு வரவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

பாதுகாப்பு என்பது மக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் விடயமாகும். எந்தளவுக்கு கஷ்டப்படுத்துகின்றோம். எந்தளவுக்கு பாதுகாப்பு வழங்குகின்றோம் என்பது தராசின் துலா போன்று போய்க்கொண்டிருக்கின்றது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தில் அடியவர்களைச் சோதனையிட வசதியாக பாதுகாப்பு மெட்டல் டிடெக்டர்கள் (Security Metal Detectors) நடைமுறையைக் கொண்டு வருவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை இலகுவாக இருக்கும். யாருமே உடலைத் தடவிப் பரிசோதனை செய்யத் தேவையில்லை.

4 அல்லது 3 உடல் பரிசோதனைத் தொகுதிகள் கொண்டுவரப்படும். அதனால் ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வந்து செல்ல வழிவகை செய்யப்படும்.

அவற்றை வடக்கு மாகாண நிதியிலிருந்து வாடகைக்கு எடுத்து வழங்கப் போகின்றோம். யாழ்ப்பாணம் மாநகர முதல்வரோ, நல்லூர் ஆலயத்தினரோ இதனைச் செய்யவேண்டும். ஆனால் அவர்கள் இதனை ஏன் செய்யவில்லை என்று தெரியவில்லை.

தற்போது பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் உடல் சோதனை அடியவர்களுக்கு அசௌகரியமாகத்தான் இருக்கின்றது என்று சொல்கின்றார்கள் என்றார். (ம-3)

## முல்லைத்தீவில்...

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் அமைந்திருக்கின்ற குமரி குளத்தில் மீன் பிடிக்க சென்ற நபர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் செல்வபுரம் வவுனிக்குளத்தை சேர்ந்த 35 வயதுயுடைய ஒரு பிள்ளையின் தந்தையான தம்பிராசா சுரேஷ்வரன் என்பவரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வீட்டிலிருந்து குறித்த குளத்திற்கு மீன்பிடிக்கச் சென்றவர் வீடு திரும்பாத நிலையில் அயலவர்கள் அனைவரும் சேர்ந்து இரவு 8 மணி முதல் குறித்த குளத்தில் தேடுதல் நடத்தியுள்ள நிலையில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் குறித்த நபர் சடலமாக காணப்படுவதை கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்நிலையில் மல்லாவி பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சடலத்தை பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,281)

## மோட்டார் சைக்கி...

மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் கோப்பாய் - உரும்பிராய் வீதியில் உள்ள கிருஷ்ணன் கோவிலடிப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கோவில்வயல், இயக்கச்சியைச் சேர்ந்த தளையசிங்கம் துஷாந் (வயது - 30) என்ற இளைஞரே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியின் குறுக்காக சடுதியாக மோட்டார் சைக்கிள் ஒன்று திரும்பிய போது வேகமாக வந்த பிறிதொரு மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் படுகாயமடைந்த இளைஞர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போது உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் டிப்பர் சாரதியை கைது செய்துள்ளனர். (ம-3,10,60)

## ஆட்சியை கைப்பற்ற...

மன்னாரில் வீட்டுத் திட்ட கிராமங்களை நேற்று வியாழக்கிழமை திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவிக்கையில், நாட்டு மக்கள் மீது அக்கறை கொள்ளாது, யுத்த காலத்தில் சேதமடைந்த பிரதேசங்களை கட்டியெழுப்பாதவர்கள் இப்போது மீண்டும் ஆட்சியைத் தட்டிப்பறிக்க முற்படுகின்றார்கள்.

ஆனால், நவம்பர் மாதத்திலே சரியான தீர்மானத்தை மக்கள் எடுக்க வேண்டும். கடந்த 10 வருடங்களாக இங்கு அமுல்படுத்தப்படாத சர்வதேச நிதி சம்மேளனத்தை 6 மாத காலப்பகுதிக்குள் உருவாக்கி வடக்கு கிழக்கில் உங்களைத் தேடிவந்து அபிவிருத்திகளையும், குறைபாடுகளையும் நிவர்த்தி செய்வோம். அதை நான் செய்வேன் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த காலத்திலே சுகபோக வாழக்கையை நாட்டினுடைய மக்களிடம் பெற்ற வரிப்பணத்தின் மூலம் ஆட்சியாளர்கள் வாழ்ந்தார்கள். அவ்வாறு நான் ராஜாவாக இருக்க மாட்டேன்.

தற்போது அணிந்துள்ள இந்த உடையுடன் உங்களைத் தேடி வருவேன். உங்களின் பிரச்சினைகளை அடையாளம் காணுவேன். உங்களுடைய பிரச்சினைகளுக்கு சரியான தீர்வைப் பெற்றுத்தருவேன். நல்ல ஆட்சியை நாடளாவிய ரீதியில் ஏற்படுத்துவேன்.

எனவே நவம்பர் மாதத்திலே சரியான தீர்மானத்தை மக்களாகிய நீங்கள் எடுங்கள். நாங்கள் மீண்டும் இந்த நாட்டு மக்களுக்காக எந்நேரமும் உழைக்கத் தயாராக இருக்கின்றோம் என்றார். (ம-3)

## நல்லூர் மகோற்சவத்...

னைச்சாவடிகளை அமைத்து பக்தர்களை கடும் உடற் சோதனைக்குட்படுத்துவதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

மன ஆறுதலுக்காகவும் ஆற் றுப்படுத்தலுக்காகவும் அமைதியான வழிபாட்டிற்காகவும் நல்லூர்க் கந்தனின் ஆலயத்திற்குச் செல்கின்ற அடியார்களைப் பொலிஸார் உடற்சோத னைக்குட்படுத்துவது அடியவர்களின் மனங் களை வேதனைப்படுத்துவதாக அமைகிறது. எனினும் இந்த உண்மை புரிந்துகொள்ளப் படவில்லை.

மாறாக நல்லூர் ஆலயச்சூழல் ஒரு யுத்தப் பிரதேசம் போல படையினர் நடந்து கொள்வதும் இனம்புரியாத பயத்தை அடியார்கள் மத்தியில் ஏற்படுத்துவதையும் பார்க்கும் போது இத்தகைய சோதனை நடவடிக்கைகள் உண்மையான பாதுகாப்பைக் கருதியதா? அல்லது இனம் சார்ந்த வேற்றுமைத் தன்மை கொண்டதா? என்ற ஐயத்தை ஏற்படுத்தவே செய்கிறது.

ஆசாரசீலத்துடன் விரதமிருந்து அங்கப் பிரதட்சணம் செய்கின்ற அடியார்கள் புனிதமாக ஆலயத்திற்குச் செல்கின்ற வேளையில், பொலிஸார் நடத்தும் உடற்சோதனை அடியார்களுக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கும் என்ற உண்மையை உணர்ந்து சோதனை நடவடிக்கைகளைத் தளர்த்துவது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.

அதிலும் முக்கியமான திருவிழாக்களின் போது இலட்சக்கணக்கான அடியார்கள் நல்லூர்க் கந்தனின் ஆலயத்திற்கு வருகை தருவர். இவ்வாறான நிலைமையின் போது ஒவ்வொருவரும் உடற்சோதனைக்குட்படுத்தப்படுவார்களாக இருந்தால், மிகப்பெரிய குழப்பங்களும் சனநெருக்கடிகளும் ஏற்படக் கூடிய வாய்ப்புக்களே அதிகமாகும்.

எனவே அடியார்களை வரிசைப்படுத்தி, உடற்சோதனைக்குட்படுத்துகின்ற நடவடிக்கை தொடர்பில் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களை தமிழ் மக்கள் பேரவை கேட்டுக்கொள்கிறது. (ம-3)

# VACANCY

**CUSTOMER SERVICE EXECUTIVE (ONLINE)**

- WORK ACCORDING TO UK TIME
- GOOD COMMUNICATION SKILLS IN ENGLISH IS MUST
- ABILITY TO WORK DAY AND NIGHT SHIFT

**071 121 4977 / 021 222 7077**

**careers.penguin@gmail.com**

(9841)

ஓம் நமோ நாராயணாய



இணுவில் திருப்பதி

அருள்மிகு

## வெங்கடேஸ்வரர் ஆலயம்

## வரலட்சுமி பூஜை

**கோவிந்தன் அடியார்களே!**

எமது ஆலயத்தில் ஆடி 24ம் நாள் இன்று (09.08.2019) வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரத வழிபாடு நடைபெற தெய்வத் திருவருள் கூடியுள்ளது.

**ஆடி 24ம் நாள்**

**இன்று 09.08.2019 வரலட்சுமி பூஜை**

காலை 6.30 மணிக்கு மகாலட்சுமிக்கு விசேட அபிஷேகமும்

காலை 7.30 மணிக்கு விசேட பூஜையும்

மாலை 3.30 மணிக்கு வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்களுக்கான சிறப்பு பூஜையும் தொடர்ந்து மஹாலட்சுமி தாயார் திருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

முக்கிய குறிப்பு:-

வரலட்சுமி விரத சிறப்பு பூஜை செய்யும் அடியார்கள் மற்றும் வரலட்சுமி நூல் பெறும் அடியார்கள் முற்கூட்டியே பதிந்து பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும்.

மேலும் வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்கள் தேவையான பொருட்களுடன் இன்று (09.08.2019) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு முன்பே ஆலயத்துக்கு வந்து தங்களுக்குரிய இடத்தில் இருந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(9836) -ஆலய தர்மகர்த்தா-

நெல்லியடியில் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

SLAS open / Limited

SLACS (கணக்காளர் தேர்வு)

**வகுப்புகள் ஆரம்பம்**

அனுபவம் வாய்ந்த யாழ். மற்றும் வடமராட்சி வளவாளர்களால் குறைந்த கட்டணத்துடன் வதிவிடத்திற்கு அருகாமையில் கற்பிக்கப்படும்.

சனி:-
9.00 – 12.00 மணி
3.00 – 6.00 மணி
ஞாயிறு:-
9.00 – 12.00 மணி

இடம்:-
**உயர் கல்லூரி நெல்லியடி.**
(H.N.B. Assurance கட்டிடம்)
0774350958

**போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்**

**கணக்காளர் சேவை**
சனி, ஞாயிறு
9.00 - 4.00 மணிவரை

**SLAS**
சனி, ஞாயிறு
9.00-3.30 மணிவரை

**வட மாகாண வருமானப் பரிசோதகர் (Limited)**
சனி, ஞாயிறு
9.00-3.00 மணிவரை

**வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் (Limited)**
ஞாயிறு 9.00-2.30

தொடர்புகளுக்கு:
**076 688 3394**
**021 222 3382**

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100M தூரத்தில்)

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் எமரல்ட் ஐல் தரும்



# கனடா

**கட்டடப்பணியாளர் வேலைவாய்ப்பு**

Plasters, Drywall Installers, Lathers, Bricklayers, Industrial Painters & Decorators

மேசன் (கட்டுமானம்-பூச்சு), வயின்றிங், வெல்டிங், ஜிப்சம் காப்பென்ரர் வேலை,
தொழில் ரீதியான ஆங்கில அறிவு உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

**சம்பளம்** மணிக்கு - ரூ.2,793

**Emerald Isle**
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

**IELTS** அவசியமில்லை

2 வருட பணி ஒப்பந்தம். நாளொன்றுக்கு 8 மணி / வாரம் 5 நாட்கள் வேலை

077 00 38 215, 0777 324 004, 021 221 9 221

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Lover/Teen Girls க்கு அருகே
email. jaffna@emeraldisle.lk @ www.emeraldisle.lk

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



UK – 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

(C-7197)

**0768226240**

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • கொடிகாமம் • வல்வெட்டித்துறை • பருத்தித்துறை • மானிப்பாய் • திருகோணமலை • சாவகச்சேரி • சுன்னாகம் • மருதங்கேணி

V2 TRAVELS

## துரித தபால்கள் பொதிகள் சேவை

**DHL மூலம் அனுப்பப்படும் பொதிகள்**

3 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும்



**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
**0777 554 528**
(C-7109)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: **றாஜ் - 077 679 6623**

(9804)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள SRI MARUTHI அச்சகத்துக்கு Photoshop, Coreldraw, Design அனுபவம் உள்ள வர்கள் தேவை.

**SRI MARUTHI PRINTERS**
**555, Navalar Road, Jaffna**
(Near Kailasappillaiyar Kovil)
**TP : 021 454 5044, 077 791 7680**

(C-5294)


# மரண அறிவித்தல்



# கந்தப்பு கந்தசாமி

**(இ.போ.சபை முகாமையாளர்.- வட பிராந்தியம் பருத்தித்துறை சாலை)**

கிழவிதோட்டம் கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் துன்னாலை மேற்கு ஞானாசாரியார் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு கந்தசாமி அவர்கள் 07.08.2019 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தப்பு - சின்னாச்சி தம்பதியினரின் அருந்தவப் புதல்வனும் குமாரநாதன் - ராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் மாலினியின் அன்புக் கணவரும் மகிந்தன், அனித்தா (பிரதேச செயலகம், பருத்தித்துறை), துஷ்யந்தன், யசிந்தன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் ராஜினி (இலங்கை வங்கி, பருத்தித்துறை), சரவணகுமரன் (ENGINEER R.D.D, குருநகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிர்மலா (கனடா), விமலா (லண்டன்), நிமால் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் உமாபதி (கனடா), பாலகிருஷ்ணன் (லண்டன்), ரோகினி (ஜேர்மனி), நந்தினி (சுவிஸ்), செந்தில்நாதன் (சுவிஸ்), சாந்தினி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஸ்ரீகரி, ராகவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.08.2019 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (ஞானாசாரியார் வீதி) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேருண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஞானாசாரியார் வீதி,
கரவெட்டி.

தகவல்:- குடும்பத்தினர்
077 618 4795

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.